Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

செப். 03–09, 2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 372

## யாழ் போர்க்களத்தில் தேர்தலா? போர்க்களம் தான் தேர்தலா?



லேசர் சிகிச்சை

இன்னொரு அன்னை

## எங்கே போனார் மீனா

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# முரசம்

## ஊதுகுழல்கள் தேவையில்லை!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தேர்தல் என்று வந்துவிட்டால்
வாக்குறுதிகளுக்கும், பரிவுக்கும்,
அனுசரணைகளுக்கும்
பஞ்சமிருப்பதில்லை.
தேர்தலில் வென்ற பின்னரோ
அந்தந்த அரசியல் வாதிகளை
அந்தப் பக்கமே காணக்
கிடைப்பதில்லை.

இடம் தெரிந்து தேடிச்
சென்றவர்களும் இறுமாப்பான
வார்த்தைகளால் அவமானப்பட்டுத்
திரும்பி வர வேண்டிய அனுபவம்
நிறையவே உண்டு.

மக்கள் சேவைக்கு என்று தம்மை
விளம்பிக் கொண்டவர்கள் பலர்
பணம் பெற்றுக் கொண்டுதான்
காரியங்களைச் செய்து கொடுக்கும்
கைலஞ்சக் காரர்களாக
ஆகிவிட்டதும் உண்டு.

பெரிய மனிதர் தோரணையில்
நடந்து கொள்ளுபவர்களும்
வீறாப்புப் பேசி தம்மை ஒரு
போராட்ட வீரராகக் காட்டிக்
கொள்பவர்களும்
இந்த லஞ்ச வலையை வீசிப்
பணம் கறப்பதையே
அடிப்படைத் தொழிலாகக்
கொண்டிருக்கிறார்கள் என்ற
உண்மை தெரியும் போது,
அவர்களை நம்பி,
வாக்களித்த மக்கள்தான்
வெட்கித் தலைகுனிய
வேண்டி ஏற்படுகிறது.

இந்த லஞ்ச லீலை
தமிழ் அரசியல் வாதிகளுக்கு
கைவந்த கலையாக
மாறிவிட்டதுதான்
வெட்கக்கேடு.

அவர்களின் காரியங்களை
மூடி மறைப்பதற்கு
போராட்டத்தின் புனிதத்தையே
போர்வையாகப்
பயன்படுத்துகிறார்கள்.

நாம் போராடுவது
வேலை வாய்ப்புக்களுக்காகவுமல்ல,
எமது உரிமைகளுக்கும்
தன்மானத்துக்குமாகத்தான்.

ஆனால்,
அந்த உரிமைக்குரலைப் பயன்படுத்தி
பாராளுமன்றம் சென்றுவிட்டு
அங்கு அரசாங்கத்தின்
சலுகைகளையும் வேலை
வாய்ப்புக்களையும்
பின்கதவால் பெற்றுக் கொண்டு
அவற்றைத் தமக்கு
வாக்களித்த மக்களிடமே
விலைபேசி விற்று
வயிறு பிழைக்கின்ற
ஏமாற்று அரசியலை
தமிழ் அரசியல்வாதிகள் பலர்
நடத்தி வருகிறார்கள்.

யுத்தத்தாலும் அழிவுகளாலும்
அவதிப்பட்டு
தம் வாழ்க்கையை ஓட்டத்
தத்தளிக்கும் வறிய மக்களிடம்
கூசாமல் கைலஞ்சம் கேட்கும்
மனோபாவம் இந்த அரசியல்
வாதிகளிடம் ஊறிப்போய்
உள்ளதென்றால் அவர்கள் பேசும்
கொள்கைகள் யாவும் போலியானவை
என்றுதான் அர்த்தம்.

இப்படியானவர்கள்
போராட்டத்தைப் பற்றிக்
கதைக்கத் தேவையில்லை.
போராட்டத்தை நடத்துபவர்களே
அதைக் கதைத்துக் கொள்வார்கள்.

அவர்களுக்கு இந்த
லஞ்சக் கைகள், ஜால்ரா போடத்
தேவையில்லை.
ஏனெனில் இவர்கள்
போராட்டத்தை வரவேற்பதெல்லாம்
தம் வயிற்றுப் பிழைப்புக்கு
வழிதேடும் உத்தியாகும்!
போராட்டம் நடந்தால்தான்
தாமும் அரசியல் நடத்தலாமென்ற
நப்பாசையால்தான்.
தமது பிள்ளைகளை
வெளிநாடுகளுக்கு
அனுப்பிவைத்துவிட்டு
ஏழைப் பிள்ளைகளைப்
போராடும்படி கோர
இவர்களுக்கு உரிமையில்லை.

இவர்கள்
போராட்டம் பற்றி
மூச்சுக் காட்டாது
இருந்தாலே போதும்.
போராடுபவர்கள் தாம்
கூறவேண்டியவற்றைத்
தாமே கூறிக்கொள்வர்.
ஊதுகுழலகள் தேவையில்லை.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்

## ஸ்ரீ ராமபிரானின் தர்மவுரை

"எப்போதும் அமைதியாய் இரு. பாவம் செய்யாமல் வாழ்ந்து வா. ஒவ்வொரு நாளும் என்னைத்தியானம் செய். சம்சாரம் என்ற இந்தப் பயங்கரக் கடலிலிருந்து நீ கரையேற்றப்படுவாய்.

நற்கருமங்களை அவற்றுக்குரிய பொருத்தமான காலத்தில், செய்ய வேண்டும். பண்டைய தர்ம விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். இந்த இரண்டும் முக்தியை அடைவதற்கு அவசியமான ஒழுக்கங்களாகும்.

எல்லா ஆசைகளையும், எல்லாவிதப் பற்றுக்களையும் ஒழிப்பது எதுவோ, அதுவே சுத்த ஞானமாகும். குறிப்பிட்ட ஒரு சுயநல நோக்கத்துடன் கூடிய எந்தச் செயலையும் விட்டொழித்து விட வேண்டும். அத்தகைய கர்மம் பிறப்பு, இறப்பு என்ற சக்கரத்தில் தான் உன்னைப் பிணைத்து வைக்கும். உண்மையான ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கு அது உதவி செய்யாது. மாறாக தடை தான் செய்யும். ஆகவே அதை விட்டுவிட வேண்டும்!"

இப்படியே ஸ்ரீ ராமபிரான் தம்பி இலட்சுமணனுக்கு உபதேசம் செய்யும் தர்மமுரசு இக்கலியுகத்தில் வாழும் நமக்கும் அறிந்து வாழ்வின் நற்பயன் பெற உகந்ததே.

நற்கருமங்களை அவற்றுக்குரிய பொருத்தமான காலத்தில் செய்ய வேண்டும் என்ற அமுத வாக்கு ஸ்ரீ ராமபிரான் வாயிலாக தம்பி இலட்சுமணனுக்கு வழங்கப்படுவது. நாம் எல்லோரும் ஏற்று பயன் பெறும் நல்ல கருத்துரையாகும்.

அ.அரசரெத்தினம்-சேனையூர் 06.



## உண்மையான நேசம்

"நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பதாயிருந்தால் என்னைப் பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிகவும் மன்னிப்போனும், பேரன்புடையோனுமாவான் என்று நபியே நீர் கூறும்!"

(அல்குர் ஆன் 3:31)

எனவே, நாங்கள் எங்களை நேசிப்பவர்களாக இருந்தால் முதலில் அல்லாஹ்வையே நேசிக்க வேண்டும். அல்லாஹ்வை நேசிப்பதாக இருந்தால், அவனின் றசூலை நேசிக்க வேண்டும். இஸ்லாத்தை நேசிப்பதாக இருந்தால், இஸ்லாத்தை நேசிக்கவேண்டும். இஸ்லாத்தை நேசிப்பதாக இருந்தால், இஸ்லாம் மார்க்கத்தைக் கற்று அதன்படி நடந்து நடைமுறையில் காட்ட வேண்டும். அதுவே உண்மையான நேசமாகும். அப்போது துக்கமில்லாத சந்தோஷமும், அழிவில்லாத நித்திய வாழ்வையும், ஐயமில்லாத ஞானத்தையும் அல்லாஹ் அவனுக்கு கொடுக்கிறான்.

வை.எல்.எம். றிஸ்வி-வாழையூர்

## உறுதியாய் பற்றிக் கொள்!

"உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்!" (ஏசாயா 26:3)

கர்த்தராகிய கிறிஸ்துவை நாம் நம்பும்போது, அவரை உறுதியாய்ச் சார்ந்து, பற்றுதலுடன் வாழும் சமயம் அவர் நம்மை எல்லா இக்கட்டுக்கும், கஷ்டத்துக்கும், கண்ணீருக்கும், நோய்க்கும், தோல்விக்கும், நிந்தைக்கும், போராட்டத்திற்கும் நம்மை விலக்கிச் சமாதானத்துடன் வாழ நம்மைக் காத்துக் கொள்வார்.

அருமையானவர்களே, உங்களது முழு நம்பிக்கையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் உறுதியாக இருக்கட்டும். அப்போது அவர் நம்மை எல்லாத் தீங்கிற்கும் விலக்கிக் காப்பார். எனவே நமது வாழ்வில் எல்லாற்றிலும் உறுதியாய் உண்மையாய் ஜீவிக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

தி.தேவபாலன்-மட்டு.நகர்

## கவிதைப் போட்டி இல.372



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 09.09.2000

கவிதைப் போட்டி இல.372
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### யார்?

மறுகண்ணை மறைத்ததின்
மர்மமென்ன மகளே! நீ
சிவனுக்கு கண் ஈந்த கண்ணப்பரே
அல்ல
'செல்லுக்கு' கண் ஈந்த
செந்தமிழனோ?

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### தி(த)டம்

ஒளிந்திருந்து ஒற்றைக் கண்ணால்
உற்றுப் பார்த்தாலும் ஒட்டு
மொத்தமாய்
தீர்வுத் திட்டம் திடமற்றதாய்-
போய்விட்டதே....!

திருமதி.ம.ஞானராஜா-வாழைச்சேனை.

### மீண்டும் முருங்கைமரம்

பொதியதை-நோக்கி...,
போதி சிரிக்க....,
காவியது மீண்டும்....,
கண்டபடி-ஆட,
ஜனநாயகச் சிறைக்குள்....,
உன் தேடல் அகிம்சையா?

சு.சசிரேக்கா-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.369

### பரிசுக்குரிய கவிதை

### 'கரும்பு'

**கண்ணிரண் டில்லாதவனோ**
**கைத்தடியால் நடக்கின்றான்**
**ஒரு கண் இருந்தும் நீ**
**ஏன் கலங்கித் தவிக்கின்றாய்?**
**வந்த துன்பம் பெரிதென்றால்**
**முன்னையது துரும்பல்லவோ?**
**இருகோடு தத்துவம் தான்**
**தெளிவு பெற்றால்-**
**கரும்பல்லவோ?**

க.மலர்ராஜன்-திருகோணமலை.

### பார்வை

ஓட்டைக்குள்ளால்
உற்றுப் பார்த்து
தெரியும் பரப்புத்தான்
உலகம் என்று
நம்பும் மனிதா!
உன் புறக்கண்ணோடு,
அகக் கண்ணையும்
திறந்து பார்,
அகிலம் விசாலமானது.

ஜமாலியா அஸ்ரின்
திருகோணமலை.



### அவலம்!

இனவாத வலைக்குள்ளே
சிக்குண்ட 'தீர்வை'ப் போல்
புலம்பெயர் தமிழ்மகன்
யாழ்நகரை நோக்கிடும்
அவலம்தானிக்காட்சி!

ஹப்புத்தளையூர்-எப்.லெனாட்குமார்.

### நொறுக்கப்பட்டது

நொறுக்கப்பட்டது கண்ணாடி மட்டுமல்ல;
என் உள்ளமும் தான்
பறிக்கப்பட்டது என் சுதந்திரம் மட்டுமல்ல;
பாசமுள்ள என் உடன்பிறப்பின் உயிரும் தான்!

ம.மெற்றில்டா-பண்டாரவளை.

### எதிர்பார்ப்பு!

எட்டத்தில் நின்றவன் கிட்டத்தில் வந்து
உற்றுப் பார்க்கின்றான் இனி முற்றத்தில் வந்து
நிற்பனோ?

ரஹ்மத்-ஏத்தாலை.

### நம் நாடு!

கல்பட்டு
என்
கண்ணாடி
துண்டானது போல்
பேரினவாதம்
தொட்டு
நம்
பொன்னாடு
ரெண்டாகிடுமோ

சு.இரத்தினம்-
அக்கரைப்பற்று-07.

### இழப்பு!

நண்பனே!
உனது கனத்த பார்வைகள்
எனக்குப் புரிகிறது.
தோட்டாக்கள் துளைத்தது
வெறும் கண்ணாடியை
மட்டுமல்ல;
உனது இடது விழியையும் தான்!

கு.சிவாஜி-சாவகச்சேரி.

### அதிஷ்டசாலி

நீ உண்மையிலேயே
அதிஷ்டசாலிதான்!
துப்பாக்கிக் குண்டு
உன்னை துளைக்கா'மல்
உன் வீட்டு ஜன்னல்
கண்ணாடியை
துளைத்திருக்கிறது!


ச.சசிகரன்-தெஹிவளை.

# வாசக[ர்]சாலை

முரசே!

369வது முரசில் வெளிவந்த 'நரனின்' பார்வையில் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' இன்றைய அரசியல் நாடகத்தை கோடிட்டு காட்டியுள்ளது. ஐ.தே.கட்சியின் போலி வேஷத்தையும் அம்பலப்படுத்தியுள்ளார். நாற்பது வருடங்களுக்கு முன் அப்பா சந்தித்த எதிர்ப்பை விட அவரின் புத்திரி சந்திரிக்கா சந்திக்கிற எதிர்ப்புப் பலமாகவே உள்ளது. என்பதை 'இராஜதந்திரி' யார் வெளிக்காட்டியுள்ளார். மொத்தத்தில் இன்றைய நாட்டின் நடப்புக்களை உடனுக்குடன் தருவதில் முரசு முன்னிக்கின்றது என்பது தெளிவான உண்மை!

மல்லிகா ஸ்ரீதரன்-மூதூர்.



அன்பின் தினமுரசே....

சிந்தையைத் திருடி-எம்மைச் சீரப்படுத்தும் 'சிறுகதைகள்' சினிமா உலகை 'சினி விசிட்' மூலம் தருவாய்! கவிப் பிரியர்களுக்கு களமமைக்கும் 'தேன் கிண்ணம்' அரசியல் அந்தரங்கங்களை அள்ளி வழங்கும் 'அரசியல் பகுதி' இவை யுடன்..... உன்னில் வெளிவரும் பகுதிகள் அத்தனையும் 'சூப்பர்'. உன் பணி தொடரட்டும்.

ஆர்.நித்தியானந்தன்-நாவலப்பிட்டி.

### பயண அனுபவங்கள்

எழுத்துச்சிற்பி எஸ்.டி.எஸ் சிவநாயகம் கட்டுரை ஆசிரியர் திரு.இரா. பத்மநாதன் அவர்கள் வீரகேசரி செட்டியாரின் அந்தரங்கச் செயலாளராக தென்கிழக்காசிய நாடுகளில் பயணம் செய்த தகவலை வெளியிட்டிருந்தார். அந்தப் பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவங்களில் சிலவற்றையாவது வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டால் பயனளிக்கும் அல்லவா? முரசின் வாசகர்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன்.

ஜே.ஆரோக்கியநாதன்-மன்னார்.

என் அபிமான தினமுரசே!

நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் அருமையிலும் அருமை. குறிப்பாக 'முரசம்' பகுதி மற்றும் 'அதிரடி அய்யாத்துரை', 'செய்திச் சிதறல்' போன்ற அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. நீ 20.08.2000 அன்று 'அண்டை மண்டலத்தில்' என்ற பகுதியில் கிரிக்கெட் ஊழல் தொடர்ச்சியில் அவர்களுக்கு அரசாங்கம் தூக்குத்தண்டனை வழங்காமலே நீ இவர்களுக்கு தூக்கு கயிற்றை போட்டு பீதியை கிளப்புகிறாயே. நான் அதைப் பார்த்தவுடன் அதிர்ந்து போனேன். நீ எது நடக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிவிப்பாயே. அது போலவே அவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்பட வேண்டும்.

என்.ஊரவன்-ஸ்கந்தபுரம்.

என் முத்தான முரசே!

வியாழன் என்றதும் எனக்கோர் சந்தோசம். அச்சந்தோசத்திற்கு காரணமே நீ. தினமுரசு என்றதும் ஓடி அடித்து இடறி விழுந்ததும் எனக்கோர் ஞாபகம். உன் அத்தனை சுவைகளையும் படித்து ஆழ்கடலில் மிதப்பது போல் எனக்கோர் எண்ணம். உன் புகழ் ஆலமரம் போல் விருட்சமாக வளரவேண்டும் என்று எனது பல்லாயிரக்கணக்கான வாழ்த்துக்கள் முரசே....!

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

அன்பின் முரசே!

அறிவுப்பசியுடைய எங்களைப் போன்ற மாணவர்களுக்கு அருமையான விருந்தளிக்கின்றாய். அத்துடன் 'பாப்பாமுரசு' பக்கத்தில் மாணவர்களின் ஆக்கங்களுக்கும் இடமளித்தால் இன்னும் நன்றாக இருக்குமல்லவா?

ரா.ப.அரூஸ்-கிண்ணியா 03.

என் முத்தான தினமுரசே!

இலட்சக்கணக்கான இரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டதில் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும், சூப்பரிலும் சூப்பர். அவற்றுள், அரசியல், 'அதிரடி அய்யாத்துரை' 'செய்திச்சிதறல்' 'வர்ணம் தீட்டும்' போட்டி, என்பன என்னைக் கவர்ந்தன. மற்றும் பல அம்சங்களுடன் உலகெங்கும், சிங்கார நடைபோட்டு வலம் வர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

எம்.டீ.எம்.யூனுஸ்-காத்தான்குடி 01.

### தொடருக்கோர் விமர்சனம்!

'பிறநாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படுவோர் இங்கு படும் துயரம்' என்ற தொடர் உண்மைகளை வெளிக்கொணர்கிறது. நம் நாட்டில் நடக்கும் துன்புறுத்தல்கள் மிக மிக மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான செயல்கள். அப்படியான நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவ்வாறு அனுப்பப்படுபவர்கள் அனுபவிக்கும் துன்பம்பற்றி வெளிநாடுகள் தெரிந்து கொள்வது நல்லது. இன்றைய விஞ்ஞானத்தில் முன்னேறிய பல மேல் நாடுகள் இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொள்வது நல்லதல்ல.

சிறந்த சட்டங்களை வைத்து தன் மனித உரிமையை பேணிக்காக்கும் நாடுகள், தம்மை தஞ்சம் என நாடி வருவோரை நீதி அற்ற முறையில் திரும்பி அனுப்புவது மிகக் கொடூரம்.

பல வருடங்கள் முன் நான் இங்குள்ள பாடசாலைக்கு செல்லும் போது, விளையாட்டுத்திடலில் ஒரு மாணவி வீழ்ந்து விட அதற்குக்கூட மருத்துவர்களை அழைத்து நோ இருக்குமோ என பரிசோதிக்கப்பட்டது. ஓர் உயிருக்கு சிறு துன்பம் வரும் போது கூட துடிக்கும் மேல் நாடுகளில் சிறந்த மனம் படைத்த மக்கள் இந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டால் மிகக் கொடூரமாக சித்திரவதை நடைபெறும் எனத் தெரிந்தும் திருப்பி அனுப்புவது கொடுமையிலும் கொடுமை.

மேலை நாடுகளுக்கு இலங்கையில் நடைபெறும் மனிதாபிமானமற்ற கேவலங்களைத் தெரியப்படுத்துவது அவசியம்.

சிவக்குமார் ராஜா-மே.ஜெர்மனி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# புதிய பாராளுமன்றத்தில் அதிகாரத்தரப்பினை நிர்ணயிக்க
# தமிழ் பேசும் தலைவர்களால் முடியுமா?

**நா**டெங்கணும் தேர்தல் சூறாவளி கனவேகத்தில் வீசிக்கொண்டிருக்கிறது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் பணி ஆமைவேகத்தில் ஆரம்பித்த போதிலும் தேர்தல் பற்றிய வதந்திகள் தான் உச்சக்கட்டத்தில் மேலெழுகின்றன.

சகல அரசியல் கட்சிகளும் தங்கள் தங்கள் வேட்பாளர்பட்டியல்களைத் தயாரிப்பதில் முனைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் தேர்தல் தொடர்பான வன்முறைகள் பற்றியும் தகவல்கள் குவிந்த வண்ணமுள்ளன. இதன் போக்கை அவதானித்தால் இம்முறை தேர்தல் அமைதியான முறையில் சுமுகமான சூழ்நிலையில் நடந்தேறி முடியுமென்று எதிர்பார்க்க முடியாதுபோல் தோன்றுகிறது.

வட-கிழக்கு பிரதேசத்தைப் பொறுத்தவரையில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது வேட்பாளர்களை பொறுக்கியெடுப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி இருந்தது. தாம் தெரிவு செய்து நியமிக்கும் வேட்பாளர் போதுமானளவு வாக்குகளை தனக்கும் தான் சார்ந்த கட்சிக்கும் தேடித் தருவதில் வல்லவரா? அல்லரா என்பதைக் கூடச் சீர்தூக்கிப் பார்க்காமல், எப்படியாவது 'ஒருவரை போட்டாக வேண்டுமே' என்ற நிலையில் சிலரைத் தெரிவு செய்துள்ளன.

இத்தகைய நிலையில் தேர்தலில் குதித்துள்ள சில தமிழ் அரசியல் கட்சிகள் உண்மையில் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தைச் சிதைத்து சிதறடிக்கும் கைங்கரியத்தையே இம்முறை தேர்தலில் செய்யப் போகின்றன.

காலத்துக்குக்காலம் ஆட்சிப் பொறுப்பையேற்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணைந்த பொதுஜன முன்னணியும் ஐக்கிய தேசிய கட்சியும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. "புதிய அரசியல் யாப்பை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதுடன் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வகையில் நடவடிக்கை எடுப்போம்!" என்ற தனது பழைய பல்லவியையே ஆளும் கட்சியான பொதுஜன முன்னணி தனது தேர்தல் பிரசார தாரக மந்திரமாக முழங்க ஆரம்பித்திருக்கிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி, நாட்டில் சீர்குலைந்து போயுள்ள பொருளாதார நிலையை சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்து வருகிறது. "பௌத்த சங்கத்தினர் மற்றும் இந்நாட்டுக் குடிமக்கள் அனைவரது ஒத்துழைப்புடனேயே இனப்பிரச்சனைக்கான தீர்வினை நாம் முன் வைப்போம்," என்றும் ஐக்கிய தேசிய கட்சி முழங்கி வருகிறது.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரப் அவர்களுக்கும் அமைச்சர் பௌஸி அவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை ஒரு குழப்ப நிலையையே தோற்றுவித்துள்ளது. அமைச்சர் பௌஸி, வேளை தெரியாது அஷ்ரப் அவர்களை விமர்சனம் செய்ய முற்பட்டமை அமைச்சரவையிலுள்ள பல அமைச்சர்களையும் சினமூட்டியிருக்கிறது. அமைச்சர்கள் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் வீடு சென்று தாம் அஷ்ரப் அவர்களுடைய கருத்தையே ஆமோதிப்பதாக வாக்குறுதியளித்துவிட்டு சென்றுள்ளமை அமைச்சர் அஷ்ரப் அவர்களின் நிலைபாட்டுக்கு வலுவூட்டுவதாக அமைந்திருக்கிறது.

எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் இரு முஸ்லிம் தலைவர்களையும் எப்படியோ ஒருங்கிணைத்து வைத்து, முறுகல் நிலையைத் தணித்து வைப்பார் என்றே நம்பப்படுகிறது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் மறைவின் பின்னர் ஏற்பட்டுள்ள வெடிப்பானது, மலையக மக்களின் இன்றையப் பரிதாபகரமான நிலைக்கு மேலும் வேட்டு வைப்பதாகவே அமைந்துள்ளது.

புதிய அரசியல் யாப்பு அமுலுக்கு வரும் பட்சத்தில் அதனடிப்படையில் இடம் பெறவிருக்கும் வருங்கால தேர்தல்களின் போது மலையகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பாரதூரமான வீழ்ச்சி ஏற்படவாய்ப்பு உள்ளது. இதேவேளை இம்முறை தேர்தல்களிலும் மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள பிளவு கூட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்துவிடக்கூடும் என்ற அபாயமும் தோன்றியிருக்கிறது.

இம்முறைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள்-குறிப்பாக அரசியல் கட்சிகள், அவற்றின் தலைவர்கள் ஆகிய மட்டங்களில் புரிந்துணர்வும் ஒருமித்த போக்கும் இருந்திருக்குமானால் அடுத்து அதிகாரத்தைக் கையேற்கும் கட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களே இருந்திருப்பார்கள். ஆனால் இம்முறைத் தேர்தல் அத்தகைய ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தப் போவதில்லை என்றே தெரிகிறது.

தமிழ்பேசும் வாக்காளப் பெருமக்கள் மீதுதான் இம்முறைத் தேர்தல் பாரிய சுமையை ஏற்றியிருக்கிறது. இந்நாட்டில் சிறுபான்மையினர் எதிர்காலத்திலாவது தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால், அவர்கள் அளிக்கும் தீர்ப்பே உரிய பங்கினை வகிக்கப் போகிறது.

புதிய பாராளுமன்றத்தில் இந்நாட்டின் சிறுபான்மை மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் முடிவுகள் எடுக்கப்படலாம். ஆகவே தமது வாக்குச் சீட்டுக்களை தீர்க்கமான யோசனையுடன் பயன்படுத்த தமிழ் பேசும் வாக்காளர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

## சிஹல உறுமய தலைவரின் குமுறல்

(கண்டி நிருபர்)

**"யு**த்தம் நடத்துகிறோம் எனக் கூறும் அரசாங்கம் அதற்குச் செலவிடும் பணத்தில் கமிஷன் அடிக்கின்றது. அதேவேளையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணகிறோம் என்ற போர்வையில் நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றது. இந்த நாட்டை சிங்களவருக்காக பாதுகாக்க வேண்டுமானால் இன ரீதியாகத்தான் எமது நடவடிக்கைகள் அமையவேண்டும்!"

இப்படிக் கூறினார் சிஹல உறுமையின் பொதுச் செயலாளர் திரு சம்பிக்க ரனவக்க.

கண்டி டீ.எஸ்.சேனாநாயக்க நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் அவர் பிரஸ்தாப அமைப்பு பற்றி உரைநிகழ்த்தினார். அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது,

"யுத்தம் என்ற போர்வையில் செலவிடும் பணம் நாட்டின் பொருளாதாரத்தை பாழ் படுத்திவிட்டது. ஆயுதக் கொள்வனவுக்கு கோடிக்கணக்கான ரூபா செலவாகின்றது. இலங்கையில் உள்ள பொறியியற் பீடங்களில் ஆயுதம் தயாரிக்க இலங்கையருக்கு அனுமதி வேண்டும். இந்த உள்நாட்டு ஆயுதங்களைக் கொண்டு நாம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடலாம். இதன் பொருட்டு சிங்கள பௌத்தர்கள் ஒன்றுபடவேண்டும்!"

## யாழ் செல்லும் பயணிகளிடம் லஞ்சம் வாங்குபவர்?

**'சி**ற்றி ஒவ் நிங்கோ' கப்பலுக்கான செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரில் முதலாவது வழித்துணை (07.08.2000) நிகழ்வின் போது முரசு அவதானித்த விடயங்கள் சில:

கம்பீரமாக அங்கு கடமையில் நின்று கொண்டிருந்த ஒரு நபரைச் சுட்டிக்காட்டிய பயணிகளில் பலர், நிறைகூடிய பொருட்களை அனுமதிப்பதானால் அவருக்கு லஞ்சம் கொடுத்தால் சரி என்றனர். பல பயணிகளிடம் விசாரித்ததில் அவர் 'லஞ்சமன்னர்தான்' என்று உறுதிப்படுத்திய அவரது கையாளையும் அடையாளம் காட்டினர். பத்திரிகையாளர்கள் நின்றதாலோ என்னவோ அவர் நேர்மையாக நடந்து கொண்டார்.

பாதுகாப்புத் தரப்பார் பயணப் பொதிகளைச் சோதனையிடும்போது, பண்பாக நடந்து கொண்டனர். தடை செய்யப்பட்ட பொருட்கள் இருக்கின்றனவா என்பதில் மட்டும் கவனமாக இருந்தனர்.

பயணியொருவருக்கு முப்பது கிலோ பொருட்கள் கொண்டு செல்லும் அனுமதிக்குத் திணைக்களங்களுக்குத் தேவையான காகிதாதிகள் போன்ற இரு பொருட்களைக் கொண்டு செல்ல முனைந்த அதிகாரிகளும் உட்பட்டதால், அவர்கள் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

சிற்றி ஒவ் நிப்கோ கம்பீரமாகவும் வசதிகள் நிறைந்ததாகவும் அமைந்திருந்தது. உயிர்காப்புக் கருவிகளும் அதைப்பயன் படுத்தும் வகையிலான அறிவுரைகளும் பயணிகளின் பார்வைக்குட்பட்டதாகவே இருந்தன.

அவசர தேவைகளுக்காகப் பயணம் மேற் கொள்பவர்களுக்கு ஏதாவது சலுகை உண்டா என்று கப்பல் தொடர்புள்ள ஒருவரைக் கேட்டபோது "திருமணம், மரணம், பரீட்சைகள் போன்ற திருப்தியான காரணங்கள் இருக்குமாயின் அவர்கள் விடயத்தில் கவனமெடுப்போம்!" என்று தெரிவித்தார்.

## திருமலைக் கூட்டணி வேட்பாளர் பட்டியலில் முன்னணி உறுப்பினர்களுக்கு கதவடைப்பு?
### உட்பூசல்களின் எதிரொலி!

**கூ**ட்டணியின் திருமலை மாவட்ட வேட்பாளர் பட்டியல் தொடர்பான கயிறிழுப்பு சம்பந்தரின் அதிரடி நடவடிக்கையால் பல முன்னணி உறுப்பினர்களுக்கு அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில் முடிவடைந்தது.

கூட்டணியின் திருமலைக் கிளை, சம்பந்தர் போட்டியிடாத பட்சத்தில் தமது விருப்பப்படியான ஒரு வேட்பாளர் பட்டியலை முன்வைக்கப் போவதாகத் தெரிவித்திருந்தது. அதில் யார் தலைமை வேட்பாளர் என்ற இழுபறி, சிறீதரன் என்ற தொழிலதிபருக்கும் ஈழத்துநாதன் என்பவருக்குமிடையே நிகழ்ந்து வந்தது. ஆனால் திடீரெனத் திருமலை சென்ற சம்பந்தர், சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை தனது இல்லத்தில் நடத்திய அவசரக் கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் இவர்கள் இருவரையுமே ஒதுக்கித் தள்ளிவிட்டு தலைமை வேட்பாளராக சிவபாலன் என்ற சட்டத்தரணியையும் அடுத்த வேட்பாளராக சைவப் புலவர் என்று அழைக்கப்படும் முன்னாள் உப கல்விப் பணிப்பாளர் ஆர்.பரசுராமன் என்பவரையும் தனது செயலாளர் ஸ்தானத்தைப் பயன்படுத்தி நிறுத்தியுள்ளார். சம்பந்தரின் இந்த சர்வாதிகாரப் போக்கு திருமலை மாவட்டக் கூட்டணி வட்டாரங்களுக்கிடையே பாரிய பிளவையும் மனக்கசப்பையும் ஏற்படுத்தப் போகிறதென அவ்வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இதே வேளை சம்பந்தரைப் போட்டியிடச் செய்யாது தடுத்து தம்மை முன்தள்ள முனைந்த சிலரால் ஆத்திரப்பட்டே சம்பந்தர் இவ்வாறான அவசர முடிவை எடுத்தாரெனவும் சில வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன. இதேவேளை சம்பந்தர் திருமலையில் போட்டியிடுவதைத் தவிர்த்து தேசியப்பட்டியலுக்கூடாக பாராளுமன்றம் செல்லலாமெனத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## அஷ்ரப்பைக் கைக்குள் போட்டு வேலை வாய்ப்புப் பெறும் முயற்சியில் சம்பந்தன்

**த**மது தொகுதிப்பக்கம் நீண்ட நாட்களாகத் தலைகாட்டாதிருந்த கூட்டணித் தலைவர் சம்பந்தன் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் திருமலை மக்களைத் திருப்திப்படுத்துமுகமாக அவசர வேலைவாய்ப்புகளை நாடி அமைச்சர் அஷ்ரபிடம் சரணடைந்ததாகத் தெரியவருகிறது.

சம்பந்தரை ஜனாதிபதி சந்திரிக்காவிடம் தீர்வுத் திட்டத்துக்கு உடன்படவைக்க அழைத்துச் சென்றதற்குப் பிரதியுபகாரமாக அமைச்சர் அஷ்ரப் சம்பந்தனின் சிபார்சுக்கு அமைய திருமலை, துறைமுக அதிகாரசபையில் சில வேலை வாய்ப்புக்களை வழங்க உடன்பட்டுள்ளாராம்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் தென்கிழக்கு மாகாணக் கோரிக்கைக்கு கூட்டணி மற்றைய தமிழ்க் கட்சிகளையோ, புலிகளையோ கேளாமலே உடன்பாடு தெரிவித்திருந்தது. இப்படியான உதவிகளைக் கோரிப் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் அஷ்ரப்பின் அழுத்தங்களுக்குக் கூட்டணித் தலைவர் அடிபணிந்தே ஆகவேண்டியவராகிவிட்டார் என்பதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை இந்த வேலை வாய்ப்பு ஒரு சிலருக்கே போதுமானதாகவுள்ளதால் இதை நாடி சம்பந்தரின் வீட்டுக்குப் படையெடுத்த பலர் அதிருப்தியுடன் திரும்பவும் நேரிட்டுள்ளது.

## தமிழ் ஊடகவியலாளரைக் கொல்ல பாதாள உலகக் கோஷ்டி?

**க**டந்த ஒரு வருடகாலத்துள் நிறுவப்பட்டு தமிழ் ஊடகத்துறையில் அளப்பரிய பணி புரிந்த தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய முன்னோடிகளை ஒழித்துக்கட்ட சில தீய சக்திகள் முனைந்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்த ஒன்றியத்தின் செயலாளர் பூ.சீவகன் அவர்களுக்கும் மேலும் மூன்று செயற்குழு உறுப்பினர்களுக்கும் தொலைபேசி மூலமும் தபால் மூலமும் கொலை மிரட்டல் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட தகவலை முரசு சுட்டிக்காட்டியிருந்தது. இப்பொழுது இந்த நால்வரையும் தீர்த்துக்கட்டுவதற்கு பாதாள உலகக் கோஷ்டி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

போராளிக்குழுக்களுடன் உறவு கொண்டிருந்து விலகிய ஒருவர் இத்தகவலை முரசுக்குத் தெரியப்படுத்தினார்.

## அரச கரும மொழி தமிழுக்கு இடம் எங்கே?

**அ**ரசியல் தீர்வுப் பொதியை நடைமுறைக்கு கொண்டு வருவதற்குக் கங்கணம் கட்டி நின்றதாகக் கூறப்படுவது ஒருபுறமிருக்க; அரச கரும மொழியாக அந்தஸ்து வழங்கி அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தமிழ் மொழியைக் கூட இன்னமும் உரிய முறையில் அமுல் படுத்த முடியாது உதாசீனப்படுத்தி வருகிறார்கள்.

முற்று முழுதாகத் தமிழ் மொழிபேசும் பகுதிகளிலுள்ள அரசாங்க அலுவலகங்களுக்குத் தலைநகர் போன்ற இடங்களிலுள்ள அரசதுறை நிறுவனங்களிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்களத்திலேயே அமைந்துள்ளன.

மட்டக்களப்பிலுள்ள அரச வங்கிகளுக்கு இப்பொழுதும் தனிச் சிங்களத்திலேயே கடிதங்கள் கிடைக்கப் பெற்று வருவதாக வேதனை வெளியிட்டார் ஓர் அதிகாரி.

இதே போன்று வடக்கு கிழக்கிலுள்ள தபால் அலுவலகங்களிலும் அநேகமான படிவங்கள் தனிச்சிங்களத்திலேயே இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## யாழில் மோதல்கள் வெடிக்கலாம்! மக்கள் மத்தியில் அச்சம்!

**பொ**துத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ் வேளை யாழ்குடா நாட்டில் பெரும் மோதல்கள் வெடிக்கலாம் என பலரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். குடாநாட்டில் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையே நடை பெறுகிறது. சில நேரங்களில் மோட்டார் தாக்குதல்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்கின்றார்கள். அப்படிப் பரிமாறும் பொழுது கரையோரப் பிரதேசங்கள் மற்றும் ஒரு சில இடங்களில் செல்கள் விழுவதும் பொதுமக்கள் காயப்படுவதும், இறப்பதும், வீடுகள், கோயில் சேதமடைவதுமாக தற்சமயம் குடாநாடு உள்ளது.

இவைகள் இவ்வாறிருக்க, மக்கள் தேர்தலில் நாட்டங் கொள்வதாகத் தெரியவில்லை. தேர்தல் நடைபெறும் போதும் குடாநாடு இதே நிலமையில் இருக்குமாயின் இரண்டு இலட்சம் வாக்குகளுக்கு மேல் வாக்களிப்பது சந்தேகமே. இதனைத் தொடர்ந்து வேட்பாளர்கள் சிலருக்கு தொலைபேசி வாயிலாகவும், அனாமதேயக் கடிதத்தாலும் பெரும் மிரட்டல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. கடந்த காலப் பொதுத் தேர்தல்களைவிட இம்முறை பல கட்சிகளிடையே பல்வேறு பிரச்சனைகள் நடைபெறலாம் என மக்கள் அபிப்பிராயப் படுவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்குடாநாடு இவ்வாறாக இருக்கும் போது தமிழ்க்கட்சித் தலைவர்களின் வருகையால் மக்களிடையே பதற்றமும் பரபரப்பான நிலமையும் காணப்படுகின்றது.

## பின்வாங்கும் படலத்தில் தேர்தல் வேட்பாளர்கள்

**இ**ப்போது புதுவிதமான வேடிக்கை விளையாட்டொன்று தமிழ்க்கட்சிகளின் தேர்தல் களத்தில் ஆரம்பித்துள்ளது. அதாவது, தமது பட்டியலில் போட்டியிட யாரைப் பிடித்து நிறுத்துவது என்று வலைவீசித் திரியும் இக்கட்சிகள் பத்திரிகைகளுக்கு தமது கட்சியில் இன்னார் போட்டியிடப் போகிறார்கள் என்று, அவரிடம் சம்மதம் பெறாமலே தமக்கு பிரபலம் தேடும் நோக்கில் செய்திகளைப் பரப்பி விடுகின்றன.

அதனால் பெருத்த இக்கட்டுக்குள் மாட்டிக் கொள்ளும் அப்பிரமுகர்கள் பதறியடித்தபடி தாம் அவ்வாறு போட்டியிடவில்லையென மறுப்பறிக்கை விட்டபடியிருக்கிறார்கள்.

இப்படி யாழ்ப்பாணத்தில் அ.குமாரவேல் என்னும் ஆசிரியரும், மு.திருநாவுக்கரசு என்னும் முன்னாள் நீதிபதியும், தமக்கே தெரியாமல் தாம் போட்டியிடுவதாக வெளிவந்த செய்திகளை மறுத்து பத்திரிகை அறிக்கை விடுத்துள்ளார்கள். இதேபோல் மட்டக்களப்பிலும் ஜெயானந்தமூர்த்தி என்ற வாழைச்சேனையைச் சேர்ந்த பத்திரிகையாளர் தாம் கூட்டணிப் பட்டியலில் போட்டியிடுவதாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ளார். கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்ற கட்சிகள் வெளியிட்ட வேட்பாளர்களிலேயே இவ்வாறான பின்வாங்கும் படலத்தை இப்போது ஒரு புதிய போக்காகக் காண முடிகிறது. இவர்கள் தம்மை வீண் வம்பில் மாட்டிவைக்கிறார்கள் என்று பெயர் அடிபட்ட பிரமுகர்கள் நொந்து கொள்கிறார்கள்.

## வவுனியாவில் பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பம்!

**வ**வுனியாவில் தொடராக 2 இ.போ.ச பஸ்கள் வழி மறித்துக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர் பஸ்சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

உள்ளூர் பஸ்சேவைகள் இயங்காததால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இடை நிறுத்தப்பட்ட பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்ததுடன் மறியல் போராட்டத்தையும் நடத்தியிருந்தார்கள்.

கடந்த ஒன்றரை மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த வவுனியா பஸ் சேவைகள் கடந்த 28ம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. 12 உள்ளூர் பாதைகளில் பஸ்சேவைகள் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பஸ் வண்டிகள் மீது குண்டு வைத்து தகர்க்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து பஸ்சேவைகள் உடனடியாக நிறுத்தப்பட்டதும் இன்னமும் மர்மமாகவே இருந்து வருகிறது. பஸ்சேவைகளை மீண்டும் நடத்துவதாக இருந்தால் பொதுமக்கள் மீது பல நிபந்தனைகள் கட்டாயப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தப்பியோடியவரின் கால்நடைகள் பறிமுதல்

**பு**லிகள் இயக்கப் பெண்போராளிகளை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த நபர் புலிகளின் பிடியிலிருந்து தப்பியோடினார் என்ற செய்தி வாசகர்கள் அறிந்ததே.

இச்சம்பவத்தின் பின்னர் குறித்த நபரின் சொத்துக்களான ஆட்டுப்பட்டி, மாட்டுப் பட்டி என்பனவற்றைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கு முன்னர் புலிகளின் விசுவாசத்திற்குரிய ஆளாகத் தன்னைக் காட்டிக் கொண்ட இந்த நபர், வயல் பகுதியின் வட்ட விதானையாக புலிகளால் நியமிக்கப்பட்டிருந்தார்.

# COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**

Internet & E-mail dsocm@mail.visual.com

No.6A, Hekitta Road, Wattala. 075-349247.



THEIVEEGAM SERVICES INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை

NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன் - மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டககளப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"


## 1வது பிறந்த நாள் வாழ்த்து

திரு. திருமதி. ஈசன்-விஜி தம்பதியினரின் செல்வப்புதல்வி சிநேகா தனது 1வது பிறந்ததினத்தை 28.08.2000 ல் லண்டனில் உள்ள தனதில்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பத்தினர், குணாசித்தப்பா குடும்பத்தினர், ராஜா சித்தப்பா குடும்பத்தினர் பெரியமாமா குடும்பத்தினர், சின்னமாமா குடும்பத்தினர் மற்றும் உறவினர், நண்பர்கள் இவரை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா, லண்டன்.



செல்வி.சிநேகா ஜெகதீஸ்வரன்

28.08.2000

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் அபிலாஷ் (அபி)

27.08.2000

கம்பர்மலை, அச்சுவேலி பத்தைமேனியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி.இராசவேல்-இறஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அபிலாஷ் (அபி) தனது முதலாவது பிறந்த தினத்தை 27.08.2000 ஞாயிற்றுக்கிழமை சுவிஸ்ஸிலுள்ள தனதில்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா (சுவிஸ்), அப்பம்மா, பாட்டி, அம்மம்மா குடும்பம், சித்தப்பா, வினோ, அத்தை தபோதினி (இலங்கை), சித்தி (இல), ஆசை அம்மப்பா, அம்மம்மா (இல), பெரியப்பா குடும்பம், தம்பி றோசான் (DENMARK), சித்தப்பா (HOLLAND), பெரியப்பா குடும்பம். அண்ணா நிசான் (GERMANY), பெரியப்பா குடும்பம், அக்கா விஷ்னியா, தங்கை விஸ்னுயா (ZURICH), மாமா (GERMANY) அம்மப்பா (சூக்), அம்மம்மா, சித்தப்பா, கண்ணன் (இந்தியா), மற்றும் மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் அபிக்குட்டியை பல்கலைகளும் பெற்று தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி.இராசவேல், சுவிஸ்.

## திலகவதியார் மகளிர் இல்லம்

## THILAKAVADIYAR GIRLS HOME

THIRUPPALUGAMAM, BATTICALOA, SRI LANKA.

Regd. No. NEP/PCC/CE/30



அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!

### எமது வாழ்வு வளம்பெற நிதி உதவி கோரல்

நாங்கள் எதுவும் அறியாத சின்னஞ் சிறுவர்கள். அம்மாவுடனும் அப்பாவுடனும், இன்பமாக இருக்க வேண்டிய காலத்தில், வன்செயல் காரணமாக பிறருக்கு எந்த தீமையும் செய்யாத அப்பாவிகளான எங்கள் அன்புக்குரிய தாயையும், தந்தையையும் சிறுவயதிலே இழந்து சொல்லமுடியாத மிகவும் துயரமான நிலையில் வாழ்ந்தோம். இந்நிலையில் திருப்பழுகாமம், திலகவதியார் மகளிர் இல்ல நிருவாகிகள் எம்மை பொறுப்பேற்று பாடசாலைக்கு அனுப்பி எமக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் வழங்கி, தங்களது உடன் பிறப்புக்களாக எம்மை நேசித்து அன்புடன் வழிநடத்துகின்றனர்.

உலகெங்கிலும் வாழ்கின்ற எம் தமிழ் உறவுகள் பலர் இறந்த ஆத்மாக்களின் நினைவாகவும், பிறந்த தின நினைவாகவும், வேறு சில நினைவாகவும் எமது வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி உணவு வழங்குகின்றனர். பலர் எமது தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் நிதி உதவி செய்கின்றார்கள். அவர்களது உதவிகளாலும். ஒத்துழைப்புக்களாலுமே எமது சீரற்ற வாழ்வு வளம்பெறுகின்றது.

எமது இல்லத்தில் நாட்டின் பல இடங்களையும் சேர்ந்த 42 சிறுமியர்கள் தற்போது தங்கியுள்ளோம். எமது இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளது.

எனவே எமது வாழ்வு வளம்பெறுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வசிக்கின்ற எம் தமிழ் உறவுகளாகிய உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தங்களால் இயன்ற நிதி உதவியினை சிறுவர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாள் உணவுச் செலவிற்காக ரூபா 3,000 செலவாகின்றது.

நன்றி,

"தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் உயிர்காக்கும்"

தொடர்புக்கு:
Phone No: 065-50189
Fax: 065-50189

இவ்வண்ணம்
நிருவாகிகள் சார்பாக,
இல்லச் சிறுமிகள்.


## மலையாள மாந்திரிகம்

உங்கள் எதிர்காலம், நிகழ்காலம், ஜோதிடம், கைரேகை, மை வெளிச்சம், ஆருடமூலம் அறிந்திடவும், திருமணதடை, புத்திர பாக்கியம் இன்மை, கணவர் மனைவி, காதல் விவகாரம் நிவர்த்தி பெற்றிடவும் நாடுங்கள்.

சிவதாசன் (ஐயர் வீடு)

101/34, Jempetta Street, Colombo-13.

T.P: 078 681977



# SPOKEN ENGLISH

## By K.M.N. NALRAVI

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வகுப்பில் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்).

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)


## இலவச மருத்துவ சேவை



ஏழை எளிய நோயாளர் களுக்கு மருத்துவ உதவி வழங்கும் நோக்குடன் தெமட்டகொடையில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் மாதம் ஒரு முறை-மூன்றாம் சனிக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

எஸ்.வி.பி. என்ற சென்வின் சன்டீ போல் சபையினரால் இந்தச் சேவை நடைபெற்று வருகிறது. கைதேர்ந்த மருத்துவ நிபுணர்களால் அளிக்கப்பட்டு வரும் இச்சேவை குறிப்பிட்ட எந்தவொரு மதத்தினருக்கோ அல்லது தனிப்பட்ட இனத்தைச் சார்ந்தவருக்கோ அளிக்கப்படும் சேவையல்ல. மதப் பாகுபாடு எதுவுமின்றி ஏழை எளிய வர்களுக்குப் பொதுப்படையாகவே இந்த மருத்துவச் சேவை நடைபெற்றுவருகிறது.

நல்ல நோக்கத்துடன் நடைபெறும் இத்தன்னலமற்ற தொண்டினை உரியவர்கள் பெற்று குணநலமுடன் வாழ வைப்பதே இச்சபையின் பிரதான நோக்கமாகும்.

## அபாண்டமான பழிசுமத்தல்

'தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியப் பணம் கையாடல், என்ற தலைப்புடன் கொழும்பிலிருந்து வெளியாகும் தினசரி ஒன்று கடந்த 23ம் திகதியன்று ஒரு செய்தியைக் கட்டமிட்டுப் பிரசுரித்திருந்தது.

ஒன்றியத்தின் நிலையை வெளிப்படுத்தும் நோக்குடன் ஒரு மறுப்பறிக்கையை ஒன்றியத்தின் பொருளாளர் வெளியிட்டுள்ளார். ஒன்றியத்தின் பொருளாளர்.

### பொருளாளர் அறிக்கை


இச்செய்தியில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் முற்றும் முழுதாகத் தவறானவை என்பதால் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொருளாளர் என்ற ரீதியில் அதற்கான மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்ட பணம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொருளாளர் என்ற ரீதியில் நானே மேற்கொண்டு வந்துள்ளேன். ஒன்றியத்தின் செயலாளராகக் கடமையாற்றிய பூ.சீவகனால் ஒன்றியம் சம்பந்தமாக எவ்வித பணக் கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ் ஊடகவியலாளர்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களுடைய நலன்களுக்காகவும் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலத்திற்குள்ளேயே மிகுந்த வினைத்திறனுடன் செயற்பட்டதைப் பொறுக்க முடியாமல், ஒன்றியத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதத்திலும், ஒன்றியத்தின் வளர்ச்சிக்காகச் செயற்பட்ட பூ.சீவகன் தற் காலிகமாக வெளிநாடு சென்றிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அவர் மீது அபாண்டமாக பழிசுமத்தும் நோக்கிலும், திட்டமிட்டே இச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருக் கின்றது.

பொறுப்பு வாய்ந்த தேசியப் பத்திரிகை ஒன்று இவ்வாறு வெறும் வதந்தியையும் காழ்ப்பையும் அடிப்படையாகக் கொண்ட செய்தியைப் பிரசுரித்தது வருத்தத்துக்கும் கண்டனத்திற்குமுரியது.




## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




Rs.25/= Only
(3.ml)

## ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

SINGHA HOLDINGS (PVT) LTD
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர்க்களத்தில் தேர்தலா? போர்க்களம் தான்

தேர்தல் களம் யுத்தகளமாகி வருகிறது. அதேவேளை யுத்த களத்தையும் தேர்தல் களத்தில் பயன்படுத்திக் கொள்ள சில தமிழ்பெருச்சாளிக் கட்சிகள் முனையத் தொடங்கி விட்டன.

போராட்டத்துடன் எந்த சம்பந்தமுமற்ற, சொல்லப்போனால் போராட்டத்தோடு சம்பந்தமற்ற தன்மையைக் காட்டியே தம்மைச் சுத்தமான பிரகிருதிகளாக விளம்பிக்கொள்ள விழைந்த இந்தப் பேர்வழிகள் தற்போது போராட்டத்தையும் தேர்தலில் தமக்கு வாக்கு வசூலிக்கும் வாய்க்காலாக்கிக் கொள்ள முனைகிறார்கள்.

இந்த வகையில் தமது பிரசார வாய்வீச்சை அவிழ்த்து விட்டிருக்கும் கூட்டணி வேட்பாளர் மாவை சேனாதிராஜா, நிலவரம் அறியாது முந்தி விழுந்து பேசியிருக்கும் பேச்சுக்கள் மக்களை அப்படியே முட்டாளாக்கி விடலாம் என்ற அவரது மனவேட்கையைக் காட்டுகிறது. அதேவேளை இந்த முறை என்னத்தைக் கூறி வாக்குக் கேட்பது என்று எந்த சுலோகமுமற்றுத் திணறும் கூட்டணி என்ன வகையில் தனது பிரசாரத்தை அமைக்கப் போகிறது என்றும் எடுத்துக் காட்டுவதாக இது இருக் கிறது.

மாவை, வீராவேசமாக அப்படி என்ன முழங்கியிருக்கிறார் என்றால், தாம் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் அல்ல என்று கூறி ஏனைய சில கட்சிகள்தான் அவ்வாறு காட்டிக் கொடுக்கின்றன என்று கண்டித்துள்ளார். அவரது கண்டனத்துக்கு எந்த மதிப்பும் இருக்கப் போவதில்லை என்றாலும், கண்டிக்கும் தகமையை அவர் தனக்குத் தானே எவ்வாறு சூடிக் கொண்டார் என்ற கேள்விக்காவது அவர் உள்ளாக்கப் படத்தானே வேண்டும்?

இப்போது போராட்டம் பற்றிப் பரிந்து பேச முன்னிற்கும் அவரது இந்த உதடுகள். அவர் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட நாள் முதலாய் ஏன் இறுக மூடியிருந்தன? தான் போட்டியிட்ட அம்பாறைத் தொகுதியில் தோற்ற கையோடு அம்பாறையை அம்போவென்று விட்டுவிட்டு, ஓடிவந்து கொழும்பில் ஒண்டிக்கொண்ட மாவைக்கு, நீலன் திருச்செல்வத்தின் மறைவின்பின் அவரது பாராளுமன்ற உறுப்பினர் நாற்காலியை கூட்டணி வழங்கியிருந்தபோதும், அவர் அம்பாறைத் திக்கையே பார்க்க மறுத்து, அரசாங்கத்தை தாஜாபண்ணிப் பின் கதவால் பெற்றுக் கொண்ட சிராவஸ்தி வாசஸ்தலத்திலேயே முடங்கிக் கொண்டாரே! துரோகங்கள் பற்றி மாவை பேசும்போது, அல்லது மாவையைத் தொடர்ந்து கூட்டணியின் குணக்குன்றுகள் குமுறி வெடிக்கும்போது, ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இதே கூட்டணியின் பெரும் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரெல்லாம் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டது தியாகிகள் என்ற பெயரிலா?

புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை வெளிப்படுத்தினாலே தம்மைத் துரோகிகளெனக் கணித்து விடுவார்கள் என்று அஞ்சியே தமது தலைவர்களைக் கொன்றது யார் என்பதைக்கூடக் கூறாமல் தமது தலைவர்களுக்கே துரோகம் செய்தவர்களல்லவா இவர்கள்! அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் பேச்சுவார்த்தைக்காகச் சென்ற புலிகளாலேயே சுட்டுக் கொல்லப்பட்டபோது, அதே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு, துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் பிழைத்த கண்கண்ட சாட்சியான மற்றைய தலைவர் சிவசிதம்பரம்கூட மௌன விரதம் அனுஷ்டித்ததன் மர்மமென்ன?

ஆக, அவர்களுக்குத் தமது தலைவர்கள் செய்த குற்றம் என்ன என்பதே தெரியவில்லை, குற்றமில்லையென்றால் அதை உரைக்கவும் முடியவில்லை, குற்றவாளிகள் யாரென்று கூடக் கூறவும் துணிவில்லை, எப்படியையா தமிழ் மக்களைக் காப்பாற்றப் போகிறார்கள்?

அதுதான் முன்னைய கதையென்றால் கூட்டணியின் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை கொலை செய்யப்பட்ட போது கூட்டணியினர் நடந்து கொண்ட விதம்தான் இன்னும் வேடிக்கையானதும் வெட்கக் கேடானதுமாகும்.

தங்கத்துரை கொலைசெய்யப்பட்டதும், அவரை ஏன் புலிகள் கொலை செய்தார்கள் என்று பல்வேறுவிதப் பட்ட வதந்திகள் உலாவத் தொடங்கின. அவற்றில் சில அவரைத் தனிப்பட்ட முறையில் அவதூறு செய்யும் வதந்திகளாக இருந்தன. அவர் இலஞ்சம் பெற்றாரென்றும் சில தகாத லீலைகளில் ஈடுபட்டாரென்றும் காரணங்கள் பரப்பப்பட்டன. இதனால் அனுதாபத்துக்குப் பதில் பாதகமான விளைவுகளே தோன்றுவதைக் கண்ட கூட்டணி இவ்வதந்திகளையிட்டு கண்டனம் தெரிவித்தது. (விடுதலைப் புலிகளை கண்டித்தல்ல.) ஆனால் இக் கண்டனங்கள் தப்பித் தவறி புலிகளைச் சாடுவதாகப் பொருள்பட்டுவிடுமோவென்று அஞ்சிய கூட்டணியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் உடனடியாக ஒரு மறுப்பறிக்கை விட்டார். அது, தங்கத்துரையின் படுகொலையையிட்டு தான் புலிகளைக் கண்டிக்கவில்லையென்று கூறும் அறிக்கையாக இருந்தது. தனது கட்சியின் சக பாராளு மன்ற உறுப்பினர் ஒருவரின் படுகொலையைக் கண்டித்து அறிக்கை விடாது, தான் அவ்வாறு கண்டிக்கவில்லை என்பதாக அறிக்கை விடுமளவு முள்ளந்தண்டு நரம்பில் பயக் கெடுதி ஏறிய இத் தன்மானமற்ற தலைவரின் வெட்கக்கேடான மறுப்பறிக்கையையிட்டு கூட்டணித் தலைமைப்பீடமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது இதற்கும் மௌன அச் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு கூட்டணி உண்மையில் என்ன பங்காற்றியது என்பது நன்கு தெரிந்த ஒன்று. அவர்களின் காதில் இன்றும் பூச்சுத்தலாமென எண்ணினால் ஏமாறப் போவது கூட்டணிதான். தமது எதிராளிகளைக் குதறுவதற்காக உசுப்பி உருவேற்றி ஏவிவிடக்கூடிய அல்ஷேசன் நாய்களென்ற கணக்கில் அவர்கள் போராளிகளை இன்னும் எண்ணிக் கொண்டிருப்பது தான் அவர்களது மடமை. உண்மையில் தங்களுக்கு நேர்ந்த கதிகுறித்துக்கூட திரும்பிப் பார்க்க விடாது தேர்தல் மோகம் அவர்களின் கண்களை மறைத்து விட்டது. அத ... ர் இத் தேர்தலில் போராளிகளையும் போராட்டத்தையும் இழுத்து துரோகம், தியாகம், வீரம் விவேகம் என்ற மேடை முழக்கங்களில் இறங்கியுள்ளார்கள்.

**உண்மையில் கூட்டணி தாம் செய்யப் போவது என்ன என்பதைக் கூறி, தம்மால் தமிழ் பேசும் மக்களுக்கு என்ன ஆகப் போகிறது என்பதை எடுத்துக் காட்டினால் அது தகும். அதைவிடுத்து தாம் செய்யப்போவதைப் பற்றிக் கூறாமல் மற்றவர்கள் செய்வதை- போராளிகள் செய்யும் போராட்டத்தை-தமது தேர்தல் வாக்குகளுக்கான வியாபாரப் பொருளாக்குவது அபத்தம். அத்தோடு ஆத்திரமூட்டுவதும் கூட.**

இவ்வாறு போராட்டத்தைப் பற்றி ஒரு சொல்லுப் பேசுவதற்குக் கூட இவர்களுக்கு உரிமையில்லை. ஏனெனில் இவர்கள் தங்கள் பிள்ளைகளையெல்லாம் பவுத்திரமாக வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துவிட்டு, ஏனையவர்களை இரத்தம் சிந்தக் கூறுகிறார்கள்.

ஆரம்ப காலத்திலும் இவர்கள் இவ்வாறுதான் மேடைப் பேச்சு நடத்தினார்கள். "மரம் பழுத்தால் வௌவால் வரும், வௌவால் எங்கிருந்து வரும், அது ரஷ்யாவிலிருந்து வரும்!" என்று இவர்கள் கரகோஷம் விண்ணைப் பிளக்கப் பேசிய பேச்சுக்களை மறந்து விட முடியாது. அதாவது போராட்டம் கனிந்தால் ஆயுதங்கள் தானாக வரும் என்ற பொருட்பட அவர்கள் ஆற்றிய இச் சூசகப் பேச்சுக்களை உண்மையென்று நம்பி இளைஞர்கள் செயலிலிறங்க, இவர்களோ தமது பிள்ளைகளைப் பட்டப் படிப்புகளுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பினார்கள். எனினும் மரம் பழுத்தது, வௌவால் வந்தது.... ஆனால் கூட்டணியினரை அந்த மரத்தடிப் பக்கமே காணவில்லை!

இப்படியான பம்மாத்து அரசியலுக்காக போராட்டத்தை விலைபேசாமல் தமது பிரசார மார்க்கத்தை கூட்டணி வகுப்பது உசிதம்.

இந்தப் பொதுத் தேர்தலை எவ்விதத்திலும் புலிகள் அங்கீகரிக்கப் போவதில்லையென்பது வெளிப்படை. அதை மூடிமறைத்து புலிகளின் அங்கீகாரம் தமக்குத் தான் உள்ளதுபோல் பலர் பாவனை செய்வது புலிகளை மட்டுமல்ல மக்களையும் ஏமாற்றும் செயலாகும்.

புலிகள் இதுவரை எந்தப் பொதுத் தேர்தலையும் அங்கீகரிக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இப் பொதுத் தேர்தலை அங்கீகரிப்பதானது தமிழ் மக்களின் பிரதிநிதிகளென தாமல்லாத சிலரைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்க அங்கீகரிப்பதாகிவிடும். அப்படியானால் அது அவர்கள் தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று வலியுறுத்தி வரும் கூற்றுக்கு முரணானதாகி விடும். அதனால் அவர்கள் இத் தேர்தல்களை அங்கீகரிக்கப் போவதில்லை.

மேலும் தமிழீழம் என்ற கொள்கையை அவர்கள் கைவிடாதிருக்கும் நிலையில் இப் பகுதியில் ஒரு சிங்கள அரசு நடத்தும் தேர்தலை அங்கீகரிப்பது தமிழீழக் கொள்கையைக் கைவிட்டதாக அர்த்தமாகிவிடும். எனவே புலிகளின் கருத்து நிலைப்படி இத் தேர்தல்களை அங்கீகரிக்க முடியாது.

தம்மால் அங்கீகரிக்க முடியாத ஒரு தேர்தலில் போட்டியிடும் ஏதேனும் ஒரு கட்சியை எப்படி அது ஆதரிக்க முடியும்? இருந்தும் புலிகளின் ஆசி தங்களுக்கே எனக் காட்டி தேர்தலில் குதிக்க சில புதிய வட்டாரங்களும் வளம்போடுகின்றன.

இதேவேளை காலம் சென்ற குமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் குமாருக்கு புலிகள் தலைவர் வழங்கிய 'மாமனிதர்' பட்டத்தைக் காரணம் காட்டி தமக்கே புலிகளின் ஆதரவு உண்டென மறைமுகப் பிரசாரம் செய்து வாக்குகளை சுவீகரித்துக் கொள்ளலாமெனக் கணக்குப் போட்டுக் கொண்டு தேர்தலில் இறங்கியுள்ளது.

ஆனால் அது பாரிய தப்புக் கணக்காகவே முடியப் போகிறது. ஏனெனில் குமாருக்கு வழங்கிய பட்டத்தை தேர்தலுக்கான சரக்காகப் பயன்படுத்துவது அதனை வழங்கியவர்களை அவமானப் படுத்துவதாக ஒருபுறமிருக்க, மறுபுறம் இவ்வாறு புலிகளை அடையாளப்படுத்தி தேர்தலில் -குதிப்பவர்கள் மண்கவ்வினால் புலிகள் மண்கௌவியதற்குச் சமமாகிவிடும். அதனால் புலிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லையெனக் காண்பிப்பதாகிவிடும். எனவே செல்வாக்கில்லாதவர்களின் பெயரில் தமது செல்வாக்கையும் பாழடிக்கும் அந்த சந்தர்ப்பத்துக்கு ஆளாக புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்.

புலிகள் இதை மறுதலையாகவே உண்மையில் செயற்படுத்த விளைவார்கள். அதாவது செல்வாக்குள்ளவர்களினால் தமக்கு ஏதும் ஆதாயம் கிடைக்குமா எனப் பார்ப்பார்களேயன்றி தமது செல்வாக்கால் வேறு யாருக்கும் ஆதாயம் கிடைக்க விடமாட்டார்கள்.

இதனைத் தவறாகப் புரிந்து கொண்ட இவர்கள் தாம் புலிகளின் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு ஆதாயம் பெறலாமெனக் கற்பனை கட்டிக்கொண்டு தேர்தலில் இறங்கியுள்ளார்கள்.

இந்த வகையில் அவர்கள் சில அதிகப் பிரசங்கித்தனமான செயல்களில் இறங்கி மூக்குடைந்து போகவும் நேர்ந்துள்ளது. அதாவது தமது கட்சிக்கான வேட்பாளர்களைத் திரட்டும் முயற்சியில் அவர்கள் சிலரின் தலைகளைப் பலவந்தமாக முன்னே தள்ளிவிட முனைந்திருந்தார்கள். அவ்வாறு இவர்கள் தள்ளிவிட முயன்றவர்கள் தமது தலைக்குமேல் தொங்குகின்ற சுருக்குக் கயிற்றைக் கண்டு பதறியடித்தபடி இப்போது பத்திரிகைகளில் மறுப்புச் செய்தி வெளியிட்டபடியுள்ளார்கள்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் போட்டியிடுபவராக அறிவிக்கப்பட்ட அ.குமாரவேல் என்ற ஆசிரியர் விடுத்த மறுப்புச் செய்தியில், தனது பெயரும் தொழிலும் ஒன்றாக இருப்பதால் அவ்வாறு குறிப்பிடப்படுபவர் தானல்லவென அறிவிக்கவேண்டியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதேபோல் முன்னாள் நீதிபதியான மு.திருநாவுக்கரசு என்பவரும் தான் தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப் பட்டிருப்பதை மறுத்து பத்திரிகை அறிக்கை விடுத்துள்ளார். இதேபோல் சில வாரங்களுக்கு முன்னர் கூட்டணியின் யாழ்ப்பாணப் பட்டியலிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர் காரை சுந்தரம்பிள்ளை, முன்னாள் மேயர் சேவியர் போன்ற சிலரது பெயர்கள் அடிபட்டு அதனை அவர்கள் மறுத்திருந்தனர். மட்டக்களப்பிலும் கூட்டணி தேர்தலில் நிறுத்துவதற்கு முனைந்த பத்திரிகையாளரான வாழைச்சேனையைச் சேர்ந்த ஜெயானந்தமூர்த்தி தான் விலகிக் கொள்வதாக அறிவித்து விட்டார். இதேவேளை முன்னர் மட்டக்களப்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக செயலாற்றி வந்த கூட்டணி உறுப்பினர் துரைராசசிங்கமும் இம்முறை தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக முடிவெடுத்துவிட்டார். கடந்த பொதுத் தேர்தலில் வன்னிமாவட்டத்தில் போட்டியிட்ட கூட்டணியின் மூத்த தலைவரான சிவசிதம்பரம் தேர்தலில் மட்டுமல்ல அரசியலிலிருந்தே ஒதுங்கிக் கொள்வதாக முடிவெடுத்து வெளிநாடு சென்றுவிட்டார். திருகோணமலையில் கூட்டணியின் செயலாளர் நாயகமான சம்பந்தனே தேர்தலில் போட்டியிடாது விலகிவிட்டார். அவர் போட்டியிடாமல் தேசியப் பட்டியலினூடாகப் பாராளுமன்றம் வரலாமெனத் திட்டமிட்டிருப்பதாக நம்பப் படுகிறது. எனினும் தலைமையே போட்டியிடத் தயங்கிக் கொண்டு மற்றவர்களை மட்டும் முன்னே தள்ளிவிடுவது அதன் பலஹீனத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு பலரை மறுக்க மறுக்க தேர்தலில் தள்ளிவிடுகின்ற ஒரு பலாத்கார நிர்ப்பந்தத்தில் இறங்க வேண்டிய நிலைமை இக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இவர்களின் இந்த ஆபத்தான விளையாட்டில் சிக்கிக் கொள்ள பலர் இன்று தயாராக இல்லை. இன்று தேர்தலுக்காக பறந்துவரும் இவர்கள் நாளை தேர்தல் முடிந்த மறுகணம் திரும்பப் பறந்துவிடுவார்கள் என்பது எவருக்குமே புரிந்த விடயம். ஆக, இவர்களால் உசார் மடையர்களாக்கி களத்தில் இறக்கப்பட்டவர்கள் மட்டும்தான் பின்னர் விழிபிதுங்க நின்று விளைவுகளை முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். கூட்டணி, மேயர் சரோஜினி கொல்லப்பட்டபோது, அவர் ஏன் கொல்லப் பட்டார் என்று தமக்குத் தெரியவில்லை எனக் கைவிரித்தனர்.

ஆனால் அவர்களுக்கு ஏன் என்ற காரணம் நன்கு தெரியும். அவர் குறி வைக்கப் படுவார் என்பதும் நன்கு தெரியும். உண்மையில் ஒன்றில் அவர்கள் அவ்வாறு ஒரு கதிக்கு ஆளாக அவரைத் தள்ளியிருக்கக் கூடாது. அல்லது அதனை எதிர்கொண்டு அவர் கொல்லப்பட்டதற்கான காரணத்தை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதையும் செய்யாமல், வெறுமனே பதவியை மட்டும் தக்கவைத்துக் கொள்ளும் முனைப்பில் குதித்து அடுத்த மேயர் சிவபாலனையும் அநியாயமாகப் பலி கொடுக்க மாகவே, பனியுறக்கத்தில் ஆழ்ந்த துருவக் கரடியாக உணர்வற்றுக் கிடந்துவிட்டது.

இப்படியாக, சுரணையிழந்த ஒரு கட்சியாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட கூட்டணி, யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உசார் கொண்டு புலிகளின் எதிர்ப்பையும் மீறி, பாய்ந்து விழுந்து போட்டியிட்டது. தேர்தல் என்று வந்தவுடன் போதை வஸ்தைக் கண்ட குடுக்காரனைப்போல் அதன் நாடி நரம்பெல்லாம் வெடவெடத்து எங்கிருந்தோ மீண்டும் அதற்கு புதுவேகம் வந்துவிடுவது இயல்பு. அந்த உசாரில், 'புலியாவது மண்ணாங் கட்டியாவது' என்ற தொனியில் யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மாநகர சபையின் மேயர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரை யாழ் மேயர் பதவியை கூட்டணி ஏற்றதானது தனக்கு மாற்றான நிர்வாகத்தை இயக்க முனையும் சவாலாகவே அமைந்திருந்தது. இதைப் பழுத்த அரசியல்வாதிகளான கூட்டணியினர் நன்கு அறிந்திருந்தும் அறியாததுபோல் அப்பாவித்தனமாக நடந்து கொள்ள முனைந்தனர். ஆனால் புலிகள் விட்டுவைக்கவில்லை.

கூட்டணியின் யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் கொல்லப்பட்டார். அதையடுத்து மேயர் பதவியை ஏற்றுக் கொண்ட சிவபாலனும் கொல்லப்பட்டார். அடுத்தடுத்த இரு மேயர்களின் கொலைகள் கூட்டணிக்கு புலிகளின் எண்ணம் என்னவென்பதை உணர்த்தத் தவறியிருக்காது. இருந்தும் புலிகளின் பெயரில்மீண்டும் சவாரிவிடவே இந்தத் தேர்தலிலும் கூட்டணி முயல்கின்றது.

அதற்கு புலிகளின் போராட்டத்தை தமது சாதனையாகப் பறைசாற்றும் முனைப்பில், அந்த உணர்ச்சிகளை வாக்குகளாக வடிகட்டி எடுத்துவிடும் ஆதங்கத்தில் கூட்டணி இப்போது திரும்பவும் தனது சல்லடை விழுந்த தேர்தல் வலையைப் பரப்பி வைத்துள்ளது.

முன்னர் துரோகியென்று தாங்கள் மேடையில் கைநீட்டிப் பேச, போராளிகள் அவர்களை தீர்த்துக்கட்டியதும், அப்படித் தம் கட்டளையை நிறைவேற்றி விட்டு வந்த இளைஞர்களை இரகசியமாகச் சந்தித்து தேனீர் பரிமாறிவிட்டு பின்னர் மறுபுறம் திரும்பி தாம் கொலைசெய்யும் அர்த்தத்தில் பேசவில்லை, பொதுப்படையாகத்தான் துரோகியென விழித்தோமென்று கூறி தமது நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொண்டதுபோல, இன்றும் செயற்படலாமென அது நினைக்கிறது.

ஆனால், கூட்டணியின் பழைய இரட்டை வேடம் எப்போதோ வெளிப்படையாகி விட்டது. வெளியுலகுக்கு தம்மை எந்த சம்பந்தமுமற்றவர்களாகக் காட்டிக் கொண்டாலும் நேர்ந்தது. அதன்பின்னரோ ஒரேயடியாகப் பின்வாங்கிவிட்ட கூட்டணி மேயர் பதவியை இதுவரை காலமும் நிரப்பாமல் வெறுமனே உதவி மேயரை மட்டும் வைத்துக் கொண்டு நாட்கடத்தும் வேலையை மட்டுமே செய்து வந்தது. உதவி மேயர் ரவிராஜோ, தனது சட்டத்தரணித் தொழிலைக் கொழும்பில் நடத்திக் கொண்டு, கொழும்புடனேயே இருந்துவிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து எம்மவர் இடைக்கிடை இங்கு வந்து எட்டிப்பார்த்து விட்டுச் செல்வதைப்போல், அவரும் இடைக்கிடை யாழ்ப்பாணத்துக்கு பறந்து சென்று, கூட்டணிக் காரியாலயத்தில் மாநகரசபைக் கூட்டங்களை நடத்திவிட்டு திரும்பவும்பறந்து வந்து விடுவார். இத்தனைக்கும் மாநகரசபையில் இருந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் தமது கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு அதனைச் செயற்படுத்த ஒத்துழைக்க முன்வந்திருந்தன. இருந்த போதிலும் கூட்டணியின் கையிலிருந்த மாநகரசபைத் தலைமையின் பின்வாங்கல் காரணமாக எதையுமே உருப்படியாகச் செய்ய முடியவில்லை.

இத்தகைய நிலையில் பொறுப்பற்ற தலைமைகளின் தேர்தல்கால உசாருக்காக தம்மைப் பலிக்கடாக்களாக்க புத்தியுள்ளவர்கள் பின்வாங்குவதில் வியப்பில்லை. அதேவேளை இம்முறை பல புதிய வட்டாரங்களும் தேர்தல் ஆசை கொண்டு அதில் குதிக்க முன்வந்த நிலையில் இந்த அரசியல் ஒருபுறத்தில் அபாயகரமானதாக இருந்தாலும் மறுபுறத்தில் ஆதாயமானதாக இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. இதுவரை எங்கேயிருந்தார்கள் என்றே தெரியாதிருந்த இப் புதிய முகங்கள் மற்றவர்களால் சாத்தியப்படாத என்ன அற்புதத்தை விளைவிக்க அரசியல் களம் புகுந்திருக்கிறார்கள் என்பதுதான் எவருக்கும் புரியவில்லை.

ஆக, அவர்களால் இயலப் போவது மற்றவர்களைத் தூற்றுவது மட்டும்தான். தூற்றுகின்ற கைங்கரியத்துக்காகமட்டுமே தமக்கு பாராளுமன்றக் கதிரைகளைப் பரிசாகத் தரும்படி தமிழ் மக்களிடம் கேட்பது அதிகப்படியான நப்பாசையல்லவா? இப்போது மக்களுக்குத் தேவைப்படுவது எதையாவது சாதிக்கக்கூடியவர்கள்தானேயன்றி தம்மால் எதுவுமே இயலாது என்று புலம்புபவர்களல்ல. நிர்க்கதியாகவுள்ள மக்களுக்கு நிர்க்கதியாகவுள்ள கட்சிகளால் என்ன பலன்? ◻

**நரன்**

## செய்திச் சிதறல்

✪ அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் இரு முஸ்லிம் அமைச்சர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமல்லாமல் ஆளுங்கட்சிக்கும் குழப்பமான நிலைமை ஏற்படுத்தியுள்ளது. பொதுத் தேர்தலில் ஆளுங்கட்சியுடன் இணையாமல் தனித்துப் போட்டியிட ஆலோசிப்பதாக சில காலத்துக்கு முன்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் தெரிவித்து வந்த கருத்துக்களைத் தொடர்ந்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி அமைச்சர் அஷ்ரப் அவர்களுக்கு சவால்களை விடத் தொடங்கியதனால் இரு வருக்குமிடையிலான கருத்து மோதல்கள் மேலெழுந்தன. இதனை அடுத்து அஷ்ரப்பும் அமைச்சர் பதவிகளை வகித்த ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்தனர். ஜனாதிபதி உட்பட ஆளுங் கட்சிப் பிரமுகர்கள் எவ்வளவோ முயன்றும் முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்கள் தங்கள் இராஜினாமாக்களை வாபஸ் பெற முன் வரவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணியின் மரச் சின்னத்தில் போட்டியிடப் போவதாகவும், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய திரு.சிறிசேன குரேயின் 'புரவெசி பெரமுன'ல் இணைந்து போட்டியிடப் போவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

✪ தமிழ் பேசும் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள மிக மோசமான சூழ்நிலையிலும் கூட தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் ஒற்றுமை இல்லாமல் பல கூறுகளாகப் பிரிந்து கிடப்பதனால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயப்படி கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போய்விடக்கூடும் என்று மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

✪ வவுனியா மாவட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் இணைப்பாளராக கடமையாற்றிய சிவநாதன் கிஷோர் மற்றும் அச்சங்கத்தின் சாரதி நாகமணி ஈஸ்வரநாதன் ஆகியோர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக விசாரிப்பு மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

✪ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை பிரிட்டனில் தடைசெய்ய வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் பிரிட்டனைத் தொடர்ந்து கேட்டு வந்தது. பயங்கர வாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடைவிதிக்கக் கூறி கடந்த ஜூலை 27ம் திகதி பிரிட்டனின் வெளிநாட்டு அமைச்சரும் பொது நலவாய அமைப்பின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவருமான பீட்டர் ஹைன் அவர்களிடம் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் பிரிட்டிஷ் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று வாக்களித்திருந்தார். ஆனால் இந்த விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் அவசரமான முடிவு எதனையும் எடுக்கப் போவதில்லை என்று தெரிவித்திருப்பதனால் இலங்கை அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

✪ பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து நாட்டில் பரவலாக வன்முறைகள் வெடிக்க ஆரம்பித்துள்ளன. அரசியல்வாதிகள் மட்டுமல்லாது, பாதாள உலகக் கோஷ்டியினரும் களத்தில் குதித்திருப்பதாக நம்பப்படுகிறது. ஏற்கனவே சில கொலைகளும் நடந்திருக்கின்றன.

✪ தேர்தல் சட்டத்தின்படி தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டுவது, பதாகைகள் கட்டுவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் ஆளுங் கட்சி முதற் கொண்டு ஏனைய அரசியற் கட்சிகளும் இலட்சக் கணக்கான வர்ணச் சுவரொட்டிகளைத் தயாரித்து சுவர்களில் ஒட்டி வருகிறார்கள். அமைச்சர்களின் பெரிய அளவிலான ஓவியங்களும் வரையப்பட்டு சந்திக்குச் சந்தி நிறுவப்பட்டுள்ளன.

# அண்டை மண்டலத்தில்....

அந்தக் காலத்தில் ஓர் ஐயர் தனது ஓலைக்குடிசையின் மீது ஏறி நின்று சத்தம் செய்து கொண்டிருந்த கோழியினை விரட்ட முயன்று தோற்றுக் கொண்டிருந்தார். இவர் மேலே ஏற, அது கீழே வர, இவர் கீழிறங்கி பெருமூச்சுவிட அது மீண்டும் மேலேற, இப்படிக் கதை போய்கொண்டிருந்ததாம்.

ஊருக்கு உபதேசம் செய்யும் அந்த ஐயரைப் பார்த்து ஒரு குறும்புக்கார இளைஞன் கிண்டலடித்தானாம்-கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானத்திலேறி வைகுண்டம் போவாராம்...

எப்படியாவது தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்ற தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாரின் தணியாத தாகத்தைப் பற்றி எண்ணும்போது, அப்பாவி ஐயரின் கதைதான் நினைவுக்கு வருகிறது.

கருணாநிதி, மூன்றாவது அணி, கடைசியாக ஜெயலலிதாவுடன் கூட்டு என்று பகீரதப் பிரயத்தனம் செய்துவந்த மூப்பனாருக்கு இப்போது புரட்சித்தலைவி செக் வைத்துவிட்டார். என்னுடன் கூட்டென்றால், நான் சொல்கிறபடி நடங்கள், நான் கொடுக்கிற இடங்களை வாங்கிக்கொண்டு, நான் ஆட்சிக்கு வர உழையுங்கள், ஆட்சியில் பங்கு என்பதெல்லாம் வீணான கற்பனை, என்று அழுத்தந்திருத்தமாக அறிவித்துவிட்டார். இப்போது திருதிருவென்று விழிப்பது மூப்பனார்தான்.

வெகுவேகமாக தனது கட்சி வீழ்ச்சியடைந்து வந்தாலும், மற்றவர்களுடன் கூட்டு வைத்து ஆட்சியைப் பிடித்து விடலாம் என்ற அவரது கனவு தகர்ந்து கொண்டிருக்கிறது. முகத்திலறைந்தாற்போல் சொல்லிவிட்டாரே ஜெயலலிதா, அதுவும் தான் மேடையிலமர்ந்திருக்கும்போதே, என்ன செய்யலாம், என்று கையைப்பிசைந்து கொண்டிருக்கிறார்.

அதே நேரம் இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கூட்டணி அரசு கிடையாது என்று பகிரங்கமாக அறிவித்து, மூப்பனாரின் மூக்கை உடைத்த மகிழ்ச்சி 24 மணி நேரம் கூட நீடிக்கவில்லை ஜெயலலிதாவிற்கு. முதல் நாளிரவு அப்படிக்கூறுகிறார். மறுநாள் காலையே அவருக்குத் தாதுவிடுகிறார். தப்பாக நினைத்துக் கொள்ளவேண்டாம், கூட்டணியை விட்டு விலகவேண்டாமென்று.

இடதுசாரிக் கட்சித்தலைவர்களும், திராவிடக் கழகத்தலைவர் தன்மானச் சிங்கம் வீரமணியும் புரட்சித்தலைவியின் அன்புக் கட்டளையினை சிரமேற்கொண்டு மூப்பனாரின் இல்லத்திற்கும், த.மா.கா. தல்லைமயகமான சத்தியமூர்த்தி பவனுக்கும் நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

மூப்பனார் இப்போது கூறுகிறார்-நான் கூட்டணி அரசுதான் சாத்தியம் என்கிறேன். அந்த அம்மா முடியாதென்கிறார். என் கருத்தைச் சொல்ல எனக்கு சுதந்திரமிருப்பதைப் போல் அவர் கருத்தைச் சொல்ல அவருக்கு உரிமையிருக்கிறது. அதிக இடங்களில் அ.இ.அ.தி.மு.க. போட்டியிட்டாலும்அதற்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று எவரும் அறுதியிட்டுச் சொல்லிவிடமுடியுமா என்ன? நாங்கள் இன்னமும் யாருடன் கூட்டணி வைத்துக் கொள்வது என்று இன்னமும் முடிவே செய்யவில்லையே...

தமிழக அரசியலில் கோவிந்தசாமி கருப்பையா மூப்பனார் ஒரு விசித்திரமான பிறவி. ஆர்ப்பாட்ட அரசியல் கிடையாது. சவடால் கிடையாது. பதிலுக்கு பதில் லாவணி கிடையாது. அவரது கட்சிக்கான செல்வாக்கே மிகவும் குறைவுதான். ஆயினும் அவர் தமிழ்நாட்டில் கருணாநிதி, ஜெயலலிதாவிற்கு பிறகு முக்கிய தலைவராக கருதப்படுகிறார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாசுக்கு, ஏன் தென் மாவட்டங்களில் ஒரு குறிப்பிட்ட சாதி மக்களிடையே கணிசமான செல்வாக்கு படைத்த டாக்டர் கிருஷ்ணசாமிக்குக்கூட, மூப்பனாருக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறித்து பொறாமை, எரிச்சல்.



## மூப்பனாரின் ஆசையும், மகாராணியின் பிடிவாதமும்

இவர் கட்சியில் எத்தனைபேரிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் பத்தி பத்தியாக அவரைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கிறீர்கள் என்று வெளிப்படையாக அவர்களிருவரும் செய்தியாளர்களிடம் புலம்புவார்கள்.

மூப்பனார் ஒரு பெரும் பண்ணையார். ஏகப்பட்ட நிலபுலன்கள். நிலச்சீர்திருத்தம் எல்லாம்அவரை ஒன்றும் செய்வில்லை. அந்தக் காலத்தில் நிலச்சுவான்தார்கள், மேல்தட்டு வர்க்கத்தினர் காங்கிரசில் இருப்பது ஓர் வழக்கமாயிருந்தது. அதன்படி அக்கட்சியிலிருந்தவர்தான் மூப்பனார். தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தலைவராயிருந்தபோது, தனது நிலங்களை கவனித்துக் கொண்டு, ஒய்வு நேரத்தில் கட்சிவேலையும் பார்ப்பார். பெரிய அளவில் தொண்டர்களுடன் தொடர்பு ஏதும் கிடையாது. அதிரடி அரசியல் செய்யமாட்டார். ஆனாலும் கட்சிக்குள் தனக்கெதிரானவர்களைக் கவிழ்த்து விடுவார். காங்கிரஸ் மீது பக்தி. கட்சிக்காக செலவு செய்வார். காமராஜர் தஞ்சை பக்கம் வரும்போது அவருடன் சென்று வருவார்.

இந்திரா காலத்தில் காங்கிரஸ் உடைந்து, காமராஜர் மரணமடைந்தபோது, ஏதோ குருட்டதிர்ஷ்டத்தில் மூப்பனார் தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார். பின்னர் டெல்லிக்குச் சென்று, இந்திராகாந்திக்கும், சஞ்சய் காந்திக்கும், பின்னர் ராஜீவ் காந்திக்கும் விசுவாச ஊழியராக இருந்து, அவர்களது நம்பிக்கையைப் பெற்று கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர் அவர் என்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

1996ல் தனக்கு பெரும் அவப்பெயர் தேடிக் கொண்ட ஜெயலலிதாவுடனான கூட்டை எதிர்த்து காங்கிரசைவிட்டு வெளியே வந்தது மிக அபாரமான யுக்தியாகும். ஆங்கிலத்தில் ஒரு 'ஸ்ட்ரோக் ஆ.:.ப் ஜீனியஸ்' என்று கூட வர்ணித்தார்கள்.

காங்கிரசைவிட்டு வெளியேறி, விளைவு என்ன என்பது எளிதாக கணிக்க முடியாத போது, ஓர் ஆபத்தான பரிசோதனையில் அவர் அப்போது இறங்கினார். தி.மு.க.வுடனான கூட்டு மக்களிடம் ஏகோபித்த ஆதரவினையும் பெற்றது. ஏறத்தாழ மரித்துவிட்ட தேசிய சிந்தனைக்கு புத்துயிரூட்டி நாடாளுமன்றத்தில் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களையும் அவரால் கைப்பற்ற முடிந்தது. பின்னொரு கட்டத்தில் பிரதமராகக்கூடிய வாய்ப்பு கூட அவருக்கு வந்து கைநழுவிப் போனது. அப்படி அவர் பிரதமராகி விட்டால் தமிழ் மாநில காங்கிரஸ் அதிக பலம் பெற்றுடும், தனக்குத்தான் அது ஆபத்து என்று கருணாநிதிதான் அத்தகைய முயற்சியை தோற்கடித்தார் என்று கூட சொல்லுவார்கள்.

கருணாநிதிக்கு இருந்த புத்திசாதுர்யம் மூப்பனாருக்கில்லை. ஜெயலலிதாவின் செல்வாக்கு அதலபாதாளத்தில் இருந்தபோது, அதனைப்பயன்படுத்தி இரண்டாவது பெரிய கட்சியாக த.மா.கா. வளர வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டாரே ஒழிய, அதை நிறைவேற்றுவதற்கான செயல்திட்டம் எதுவும் அவரிடமில்லை. கருணாநிதியுடன் கூட்டையும் வைத்துக்கொண்டு மத்திய அரசின் கூட்டணி அரசில் பங்கும் வகித்துக் கொண்டு, மாநிலத்தில் தி.மு.க.வை எதிர்க்கும் வழி அவருக்குத் தெரியவில்லை.

உள்ளாட்சித் தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர்கள் ஜெயலலிதாவின் படங்களைப் பயன்படுத்திக் கொள்ளவே பயந்த நிலை மாறி, மெதுவாக அவர் தனது தலைமையினை நிலைப்படுத்திக் கொண்டார். வழக்கம்போல கருணாநிதியினை கடுமையாகச் சாடத் துவங்கினார். ஒரு பத்திரிகையாளர் அப்போது குறிப்பிட்டது போல காலியாகக் கிடந்த எதிர்க்கட்சிக்கான இடத்தினை அ.இ.அ.தி.மு.க. மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டது.

1996ல் தேர்தல்கள் முடிந்தவுடனேயே மாநாடு நடத்தி புனித் ஜார்ஜ் கோட்டையினை கைப்பற்றுவது, ஆட்சியை அமைப்பதே தனது நோக்கம் என்று முழங்கிய த.மா.கா,-தி.மு.க. எதிர்ப்பை கையிலெடுக்கத் தயங்கிய தன் விளைவு ஜெயலலிதாவிற்கு மறுவாழ்வு கிடைத்தது. மூப்பனாரின் வழவழா, கொழகொழா அணுகுமுறையே இந்த விளைவிற்கு காரணம் என்று தான் பலரும் நம்புகிறார்கள்.

தி.மு.க. ஆட்சிமீதிருந்த இலேசான அதிருப்தி, பா.ம.க.போன்ற கட்சிகளை உதறித் தள்ளியது. கோவை குண்டுவெடிப்புக்கள், போன்ற பல்வேறு காரணங்களினால் 1998 தேர்தலில் தி.மு.க.-த.மா.கா. அணி பெரும் தோல்வியினை சந்தித்தது.

த.மா.கா. மூன்று இடங்களில்தான் வெற்றி பெற முடிந்தது. அதனுடைய செல்வாக்கு தேய்ந்து கொண்டு வருகிறது. பாரதீய ஜனதாவிற்கு நடுத்தர மக்கள் மத்தியில் ஆதரவு கூடுகிறது என்று கண்டுகொண்ட கருணாநிதி த.மா.கா.வை கைகழுவினார். திரிசூலம் ஏந்திய காட்டுமிராண்டிகள் என்று தான் முன்பு ஏசிய பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள். மதச்சார்பின்மை, மற்றும் பொதுவாழ்வில் நேர்மையே தனது தாரக மந்திரமென்ற மூப்பனாரோ போகும் வழி தெரியாமல் தவித்தார். சில தலித் அமைப்புக்களை துணைக்கு அழைத்துக் கொண்டு மூன்றாவது அணி அமைத்தார். ஊஹூம். எடுபடவில்லை. படுதோல்வி அடைந்தது அந்த அணி.

அந்த அணிக்கு விழுந்த வாக்குகளின் காரணமாகவே தி.மு.க. 1999 தேர்தல்களில் அதிக இடங்களில் வெற்றி பெறமுடிய வில்லை என்று சிலர் கருதினர். அதாவது காங்கிரசிற்கென்றிருந்த 20 சத வாக்காளர்களின் ஆதரவு த.மா.கா.விடம் அப்படியே இருக்கிறது. எனவே அத்துடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் எவரும் எளிதில் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று ஓர் அனுமானம். த.மா.கா.விற்கு குறிப்பிடத்தகுந்த அளவில் வாக்குகள் விழுந்ததற்கே தலித் அமைப்புக்களின் ஆதரவுதான் என்பதை அப்படி அனுமானிப்பவர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

இந்த ஆண்டு துவக்கத்தில் நடந்த சட்ட மன்ற இடைத் தேர்தல்களில் த.மா.கா. ஆதரவை கெஞ்சிக் கூத்தாடி பெற்று, வெற்றி பெற்றுவிடலாம் என்று கணக்குப் போட்டார் ஜெயலலிதா. ஆயின் என்ன, ஒரு வழக்கில் தண்டனை கிடைத்தது. விசிலடிச்சான் குஞ்சுகள் கொதித்தெழுந்தார்கள், பேருந்து தீக்கிரையானது, மூன்று மாணவிகள் பலியானார்கள். மீண்டும் அ.இ.அ.தி.மு.க. தோல்வியைத் தழுவியது. த.மா.கா. ஆதரவிருந்தால் வெற்றி நிச்சயம் என்ற மாயையும் அகன்றது. இந்தப் பின்னணியில்தான் ஆட்சியில் பங்கில்லை என்கிறார் ஜெயலலிதா மமதையுடன்.



மூப்பனார் பாடு திண்டாட்டம்தான். தனியாக ஆட்சிக்கு வரும் அளவு கட்சியை வளர்க்க இயலவில்லை. அவர் ஒரு கண்ணியமான அரசியல்வாதி என்பதில் ஐயமில்லை தான். ஆனால் எதிர்க்கட்சி அரசியல் செய்யவே மனமில்லை, அவரது வெள்ளைக் கதர்ச்சட்டை அழுக்குப்படாமல் அரசியல் என்றால் எப்படி?

தமிழ்நாட்டில் திராவிடக்கட்சிகள் மீது மக்களுக்கு கோபம் என்பது உண்மைதான். ஆயின் அந்த வெறுப்பினை சாதகமாக்கிக் கொள்ள, ஏன் வெறுப்படைந்த வாக்காளர்களை அழைத்து வந்து தன் கட்சிக்கு வாக்களிக்க வைக்க போதுமான அளவு தொண்டர்கள் இல்லை மூப்பனாரிடம்.

அகில இந்திய அளவில் அதிக இடங்கள் வேண்டுமென்பதற்காக, ஏதாவது ஒரு திராவிடக்கட்சியின் தோளிலேயே சவாரி செய்வது என்ற தலைமையின் தவறான அணுகுமுறை காரணமாக காங்கிரஸ் ஆதரவு என்பதே தமிழகத்தில் மங்கிப்போனது. இன்னமும் கூட காங்கிரஸ் ஜெயலலிதாவிற்கு சலாம் அடித்து நாலைந்து இடங்கள் பெற்றால் போதும் என்றுதானே நினைக்கிறது.

டெல்லியில் பலகாலம் அரசியல் செய்துவிட்டு திடீரென்று தமிழகத்திற்கு வந்து தேசீய நீரோட்டத்தை வலுப்படுத்தவே என்கிறார் மூப்பனார். எப்படிப் பலிக்கும்? ஜெயலலிதா ஏதாவது ஓர் ஊழல் வழக்கில்நிச்சயம் இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்று விடுவார். தேர்தலில் நிற்கும் தகுதியினையே இழந்துவிடுவார். அந்த நேரம் அ.இ.அ.தி.மு.க. கூட்டிருந்தால், அக்கட்சியின் ஆதரவு கிடைக்கும். வேறு வழியில்லாமல் தன்னை முதல்வராக்க ஜெயலலிதா சம்மதிப்பார். குறைந்த பட்சம்அ.இ.அ.தி.மு.க-த.மா.கா. கூட்டணி அரசாவது தவிர்க்க முடியாததாகிவிடும். இதுவே இப்போது மூப்பனாரின் ஒரே நம்பிக்கை.

ஜெயலலிதாவிற்கும் தெரிகிறது அவர் எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்கள். சிறப்பு நீதிமன்றங்கள் அவருக்கொன்றும் சாதகமாகவேயில்லை. அதுவும் அளவுக்கதிகமாக சொத்து சேர்த்த வழக்கிலும், டான்சி நிலபேர வழக்கிலும் தண்டனை நிச்சயம் என்றே நம்பப்படுகிறது. தேர்தலில் போட்டி போடக்கூடிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று அவரும் பயப்படத்தான் செய்கிறார். ஆயினும் எப்படி அவர் மூப்பனாரை நம்பி அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க முடியும்? வழக்குகளை வைத்தே பேரம் பேசி தன்னை அவர் ஓரங்கட்டிவிட்டால்? எனவே தான் நிற்கமுடியாமல் போனாலும் தன் கட்சியைச் சேர்ந்தவரையே முதல்வராக்கினால்தான் வழக்குகளை பின்னொரு கட்டத்தில் அரசே வாபஸ் பெற வைக்க முடியும் என்று அவர் நினைக்கிறார். அந்தப் பொறுப்புக்குத்தான் தினகரனை தயார்படுத்தி வருகிறார் என்று கூறப்படுகிறது.

ஆயின் என்ன? அ.இ.அ.தி.மு.க. வெற்றிபெறும் என்பதற்கு யார்தான் கியாரண்டி கொடுக்க முடியும்? எனவேதான் மிகச் சிறிய கட்சியாக இருந்தாலும் அதன் ஆதரவு அவருக்குத் தேவை. தோற்றுவிட்டால் ஆண்டுக்கணக்கில் சிறைவாசம், அரசியல் எதிர்காலமே சூனியமாகிவிடும். எனவேதான் கூட்டணியா, ஊஹூம் என்பவர், உடனேயே மூப்பனாரைத் தாஜா செய்ய முயல்கிறார்.

மூப்பனாரின் துரதிர்ஷ்டம், ஜெயலலிதாவை வெறுக்கும் இடதுசாரிக்கட்சிகள் கூட அவரைப் பகைத்துக் கொள்ளத் தயாராகயில்லை. பா.ஜ.க.கூட்டணியைத் தோற்கடிப்பதே அவர்களது ஒரே இலட்சியம்.

மோரில் விஷம் கலந்து எம்.ஜி. ஆரைக் கொல்ல முயன்றார் என்று ஜானகி மீதும், ராஜீவ் கொலையில் பங்குண்டு என்று மூப்பனார் மீதும், வீரப்பனின் கையாள் என்று கருணாநிதிமீதும் மனம் போன போக்கில் பேசும், அரசியல் கலாச்சாரத்தையே பாழ்படுத்திய ஜெயலலிதாவைவிட, எதிரிகளை வீழ்த்தி, தன் குடும்ப நலனை மேம்மடுத்துவதில் குறியாயிருக்கும் கருணாநிதியை விட, மூப்பனார் சற்று வித்தியாசமான தலைவராயிருக்கலாம்.

இப்போது அவரைச் சுற்றியும் துதிபாடிகள், ஊழலில் திளைப்போர் பலர் அவர் அணியிலிருக்கலாம். அவரே காங்கிரசில் இருந்தவர்தானே. இருந்தாலும் தமிழக அரசியலை சற்றேனும் தூய்மைப்படுத்த, குறைந்த பட்சம் கண்ணியப்படுத்த மூப்பனாரால் முடியும். ஆனால் பரந்துபட்ட மக்கள் அத்தகை கணிப்பினை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லையே.

**கானகன்**

---

**வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் பதினொரு பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் (12)

பாதுகாப்புப்படைகளினால் மீட்கப்பட்ட பகுதிகள் என்று கருதப்படும் இடங்களுக்கு, பிறநாடுகளிலிருந்து தஞ்சம் கோரி மறுக்கப்பட்டவர்கள் செல்வது சற்றுச் சிரமமான காரியம் தான். அவர்கள் இராணுவத்தினரால் வழங்கப்படும் அடையாள அட்டையைப் பெறுவது சுலபமான காரியமல்ல. வடபகுதியில் வாழ்ந்தவர்கள் எப்படியோ புலிகளுடன் ஏதோவொரு வகையில் சாதாரண முறையிலாவது பழகி இருக்க நேரிடும்.

திருப்பியனுப்பப்பட்டவர்கள் வட பகுதிக்குச் செல்ல நேர்ந்தால், அவர்களுக்குப் பிரச்சனை ஏற்படவே செய்யும். வேறு எவராவது புலிகளுடன் இணைந்திருந்து, அவர் குறிப்பிட்ட நபருக்குத் தெரிந்தவராக இருந்தால், அவர் அடுத்தவர் புலிகளுடன் தொடர்பு வைத்ததைப் பற்றிய தகவல் தெரிந்திருந்தும் படையினருக்கு 'உண்மையை மறைத்துவிட்டார்' என்று குற்றஞ் சாட்டப்படுவார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவின் படி அவர் குற்றவாளியாக்கப்படுவார். இத்தகைய சந்தேகங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 800 தமிழர்கள் இன்றும் களுத்துறைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து இங்குள்ள நிலமைகள் மேலும் மோசமடைந்துள்ளன.

### முடிவுரை

இலங்கையில் இருந்து பெருந்தொகையான தமிழர்கள் வெளியேறுவதற்குப் பிரதான காரணம் இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தான் என்பதை சர்வதேச சமூகம் இன்று நன்றாக உணர்ந்து விட்டது. இந்த அறிக்கையில் முன்பகுதிகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதைப் போல் தமிழர்களுக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதுடன் அவர்கள் பாதுகாப்பதிகாரிகளினால் துன்புறுத்தப் படுகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அங்கிருந்து தமிழர்கள் இடம் பெயர நேரிடுகிறது. தமிழர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகளே என்று எப்போதும் சந்தேகிக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவிக்க நேரிடுகிறது. வவுனியாவைப் போன்ற இடங்களில் தமிழர்கள் இடம்பெயர்ந்து அரசினால் நிர்வகிக்கப்படும் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்த முகாம்கள் நலன்புரி மையங்கள் என்றழைக்கப்படுகின்றன. இந்த முகாம்களில் வாழ்பவர்கள் முகாமைவிட்டு வெளியே சென்று திரும்புவதற்கு ஆக நான்கு மணித்தியாலங்கள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர். வெளியில் சென்று திரும்புவதற்கான அனுமதிச் சீட்டுகள் வழங்குவதில் பாதுகாப்பு அதிகாரிகள் பல வித்தியாசமான முறைகளை அனுசரிக்கின்றனர். மூன்று நாட்கள் மட்டும் செல்லுபடியாகக் கூடிய அனுமதிச் சீட்டுகள், மூன்று மாதங்கள் வரை செல்லுபடியாகும் அனுமதிகள் மற்றும்நிரந்தர அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய அனுமதிச் சீட்டு வழங்கும் முறை 1996ம் ஆண்டிலிருந்து அமுலில் இருக்கின்றது.

இந்த மாவட்டத்தில் வசிப்பவர்கள் அங்கிருந்து வெளியே செல்ல நினைப்பவர்கள் அல்லது அந்த மாவட்டத்துக்குச் செல்ல நினைப்பவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையில் அடிப்படை உரிமைகளை இழந்தவர்களாக பாரதூரமான துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் எவரையும் ஐரோப்பிய நாடுகள் இங்கு திருப்பி அனுப்புவதற்கு முன், அவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் இங்கு வந்ததும் அனுபவிக்கும் மனித உரிமைகள் மீறிய நடவடிக்கைகளினால் படும் துயரங்களை உணர்ந்து பார்க்க வேண்டும் என்று மனித கௌரவத்துக்கான அமைப்பு கேட்டுக் கொள்கிறது. அவர்கள் தாமாகவே நாட்டை விட்டு வெளியேறி இலங்கைக்கு வருவதற்கு ஆயத்தமாகும் வரையிலாவது அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றாமல் இருப்பதே உகந்தது என்று எமது அமைப்பு கேட்டுக் கொள்கிறது. இலங்கையில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் அவர்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறல்களால் துன்புறுத்தப்படுவது நீடிக்கும் வரை. அவாகள் தாமாகவே அங்கிருந்து வெளியேற நாட்டம் கொள்ள மாட்டார்கள். மனித உரிமைகள் தொடர்பான சகல அம்சங்களும் பேணப்படாமல் இருப்பதும் இலங்கையில் வன்முறையோடு கூடிய பிணக்குகள் தொடர்வதும் அகதிகள் தாமாக நாடு திரும்புவதற்கு இடையூறான காரணங்கள் ஆகும். இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படும் காலம் வரை தமிழர்கள் இங்கிருந்து வெளியேறுவது தொடர்ந்து கொண்டேயிருக்கும். அமைதி திரும்பாவிட்டால் ஏற்கனவே நாம் குறிப்பிட்டதைப் போல், திருப்பியனுப்பப்படுவோர் பாதுகாப்புத்தரப்பினரால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

(இன்னும் வரும்)

# புதிய தலைமையை ஏற்கும் இலங்கை இராணுவம்

## அலசுவது - இராஜதந்திரி

இலங்கை இராணுவம் புதிய தலைமையைப் பெற்றுள்ளது.

லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல 16 வது இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ளார்.

ஆட்டிலறிப் படைப்பிரிவில் பணியாற்றிய ஜெனரல் பலகல்ல, இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவின் பொறுப்பாளராகவும் நீண்டகாலம் பதவி வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவம் கடந்த ஆண்டிலேயே தனது 50வது பொன்விழா ஆண்டைக் கொண்டாடியிருந்தது. கொழும்பு காலிமுகத்திடலில் நிகழ்ந்த அப்பொன்விழாவை ஓய்வுபெற்றுச் சென்ற இராணுவத்தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரிய விரிவான முறையில் ஒழுங்குசெய்திருந்தார்.

இலங்கை இராணுவத்தின் அப்பொன்விழா சர்வதேசக் கவனத்தைக்கூடப்பெரிதும் ஈர்த்திருந்தது. ஏனெனில் அவ்விழாவில் பங்குபற்ற வந்திருந்த பாகிஸ்தான் இராணுவத்தளபதி பெர்வேஷ் முஷாராவ் நாடுதிரும்பியதும், பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாப் ஷெரிப்பைப் பதவியிலிருந்து அகற்றியதுடன், தம்மை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளராகவும் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

இலங்கையிலிருந்து பாகிஸ்தான் திரும்பியதும் ஜெனரல் பெர்வேஷ் முஷாராவ் அந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியதாலேயே கொழும்பில் அவர்பங்கு பற்றியிருந்த இலங்கை இராணுவப் பொன்விழாவும் சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்தது.

இராணுவத்தளபதியாக இதுவரை காலமும் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரிய பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரான பெர்வேஷ் முஷாராவ்வுடன் அந்நாட்டிலுள்ள இராணுவக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே ஓய்வு பெற்றுள்ள இராணுவத் தளபதி சிறிலால் வீரசூரிய பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவம் தற்போது 51வது ஆண்டினுள் அடியெடுத்து வைத்துள்ள நிலையில் பிரமாண்டமான வகையில் வளர்ச்சி கண்டுள்ளது. ஆயினும் இவ்வளர்ச்சி மறுபுறத்தே நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்குப் பெரும் சவாலாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

1983ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இலங்கை இராணுவம் 'நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக' வளர்ச்சிகாணத் தொடங்கியது.

இவ்வளர்ச்சியென்பது தற்சமயம் ஏறத்தாழ ஒன்றரைலட்சத்தையும் தாண்டியதாகவே இருக்கின்றது. அத்துடன் ஆண்கள் மட்டுமே இருந்துவந்த இராணுவத்தில் கடந்த சுமார் 20 வருடங்களாக பெண்களும் பணியாற்றி வருகின்றனர்.

1971ம் ஆண்டிலேயே இலங்கை இராணுவம் முதல் தடவையாக ஜனதாவிமுக்திபெரமுன அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி நடவடிக்கைகளைக் கையாளத் தனது ஆளணிகளைப் பெரியளவில் உபயோகித்திருந்தது. இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளும் அன்று பதவியிலிருந்த சிறிமாவோ அரசுக்கு ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க இராணுவ ரீதியாக உதவியிருந்தன.

இதன்பின்னர் தமிழ் அரசியல் நடவடிக்கைகள் தீவிரவாதமாக 1983ம் ஆண்டின்பின்னர் மாற்றமடைந்ததைத் தொடர்ந்து இலங்கை இராணுவமும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் தன்னை விஸ்தரிக்கத் தொடங்கியது.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தீவிரவாதப் போராட்டம் இலங்கை இராணுவத்துக்குப் பெருஞ்சவாலாக இருப்பதுடன், பல்வேறு கஷ்ட-நஷ்டங்களையும் ஏற்படுத்தியே வருகின்றது.

இலங்கை இராணுவம் பிரிட்டிஷ் பாரம்பரியங்களைக் கொண்டதாகவே உருவாக்கப்பட்டது. எனினும் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு என்ற தமிழரே இலங்கை இராணுவத்தின் முதலாவது தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

1982ம் ஆண்டுவரை இலங்கை இராணுவம் பெருமளவிலான நெருக்கடிகளுக்குள்ளாகவில்லை. ஜெனரல் டென்னிஸ் பெரேரா என்ற இலங்கை இராணுவத்தளபதியின் பதவிக் காலம் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து, பதவிக்கு வந்த ஏனைய தளபதிகளின் பதவிக் காலங்களிலேயே இராணுவம் பலத்த சவால்களுக்குள்ளானதுடன், ஆளணிகளுடன் விரிவடையவும் ஆரம்பித்தது.

இலங்கை இராணுவத்தின் தளபதிகளாகக் கடந்த 17 வருடகாலங்களில் பதவி வகித்தவர்கள் தமது பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்யும் போது, வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றே சாத்தியமாகுமென்பதை வலியுறுத்தி விட்டுச் சென்றிருந்தனர்.

இராணுவத் தீர்வு எவ்விதத்திலும் பிரச்சனைகளைத் தீர்த்து விடாது என்றே ஓய்வுபெற்ற தளபதிகள் குறிப்பிட்டிருந்ததுடன், வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கும் அரசியல் தீர்வொன்றையே வலியுறுத்தியும் வருகின்றனர்.

இராணுவத் தளபதிகளாகப் பதவி வகித்தவர்கள் மட்டுமல்ல. காலஞ்சென்ற ஜெனரல் டென்ஸில் கெப்பேகடுவ, மற்றும் அவரைப் போன்ற அனுபவம் மிக்க மூத்த படையதிகாரிகள் கூட இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றே ஏற்புடையதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தனர்.

ஆயினும் புதிய தளபதிகளாகப் பதவியேற்போர் தமது பதவிக்காலத்தில் இராணுவத்தினருக்கு மனத் தெம்பூட்டும் விதத்தில் யுத்த சன்னதம் கொண்டவர்கள் போல போர் முழக்கஞ் செய்கின்றனர். ஆனால் நடைமுறைச் சாத்தியமாகப்பார்க்கும் போது எத்தகைய பலத்தைப் பிரயோகித்தபோதிலும் இராணுவத்தினால் உறுதியான வெற்றிகளைப் பெறமுடியாதிருந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

புதிய தளபதியாக பதவியேற்றுள்ள ஜெனரல் லயனல் பலகல்ல கூட வடக்கே இராணுவம் இழந்த பிரதேசங்கள் மீளவும் படையினரால் கைப்பற்றப்படும் என்று சூளுரைத்துள்ளார். அத்துடன் தற்போது இராணுவம் அதிநவீன ஆயுதங்களைக் கொண்டிருப்பதால் எதிர்பார்க்கும் வெற்றிகளைக்கூடப் பெறமுடியுமெனவும் லயனல் பலகல்ல கூறியுள்ளார்.

புதிய தளபதியாகப் பதவியேற்றுள்ள லயனல் பலகல்ல, இலங்கை இராணுவத்தில் மிக முக்கிய பொறுப்பை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக அவர் பதவி வகித்துள்ளார்.

இதுதவிர யாழ்குடாநாட்டின் பிரதம தளபதியாகவும், வன்னிப் பிரதேசத்துக்கான தளபதியாகவும் ஜெனரல் பலகல்ல பணியாற்றியிருந்தார்.

1993ம் ஆண்டு இறுதிப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் 'ஒப்பரேஷன் தவளைப்பாய்ச்சல்' என்ற தாக்குதல் நடவடிக்கையொன்றை பூநகரிப் படைமுகாம் மீது மேற்கொண்டிருந்தனர்.

அத்தாக்குதல் புலிகளுக்குப் பெரு வெற்றியைக் கொடுத்திருந்தது. அத்துடன் புலிகளிடம் வீழ்ச்சிகண்ட முதலாவது படைமுகாமாகவும் பூநகரி முகாமே விளங்கியிருந்தது.

600க்குமதிகமான சிப்பாய்கள் பூநகரித் தாக்குதலில் கொல்லப்பட்டதுடன், கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதி மிக்க ஆயுத தளபாடங்களும் புலிகளினால் பூநகரியிலிருந்து கொண்டு செல்லப்பட்டிருந்தன.



பூநகரித் தாக்குதல் நடந்தபோது தற்போதைய இராணுவத் தளபதியான லயனல் பலகல்லவே இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தலைவராக இருந்தார். இதன் காரணமாக அப்பெருந்தாக்குதல் பற்றி முன்கூட்டியே அனுமானிக்கும் வல்லமையை அவர் கொண்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்குமுள்ளாகியிருந்தார்.

1993ம் ஆண்டு புலிகளுக்கு பூநகரியில் கிடைத்த வெற்றி அவர்களது இராணுவப் பலத்தைப் பெரிதும் பறைசாற்றி விட்டிருந்தது.

இதன்பின்னர் 1996ம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணக்குடாநாட்டினுள் இராணுவம் தன்னை விரிவானமுறையில் விஸ்தரித்துக் கொண்டது.

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது வன்னிப் பெருநிலப் பரப்பைத் தமது பிரதான தளமாக புலிகள் மாற்றிக் கொண்டனர்.

இதன் பின்னரே 'ஓயாத அலைகள்' என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் பல்வேறு தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர். முல்லைத்தீவு இராணுவ முகாம்மீது ஆரம்பித்த முதலாவது 'ஓயாத அலைகள்' தாக்குதல் முதல்கொண்டு இந்த ஆண்டில் இடம்பெற்ற ஆனையிறவுத் தாக்குதல்வரை புலிகளுக்குப் பெரும் வெற்றிகளே கிடைத்திருந்தன.

இதுதவிர வன்னிப் பெருநிலப்பரப்பை ஊடறுத்து வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே தரைவழிப்பாதையைத் திறக்கும் 'வெற்றி நிச்சயம்' என்ற இராணுவ நடவடிக்கை கூட புலிகள் கிளிநொச்சியில் மேற்கொண்ட பெருந்தாக்குதலையடுத்து தோல்வியைத் தழுவியது.

எனவே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடையறாது தொடர்ந்து செல்லும் உள்நாட்டு யுத்தமென்பது புலிகள் தரப்பிலும், இராணுவத் தரப்பிலும் மட்டுமல்ல. அப்பாவிப் பொதுமக்கள் மத்தியிலும் பெருமளவு உயிர்ச்சேதங்களையும், பொருட்சேதங்களையும் ஏற்படுத்தி வருவதாகவே இருக்கின்றது.

இலங்கையில் கடந்த 17 வருடகாலயுத்தத்தில் 60 ஆயிரத்துக்குமதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது!

1978ம் ஆண்டிலிருந்து 1994ம் ஆண்டுவரை பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே விரிவடைய ஆரம்பித்த இலங்கை இராணுவம், ஆட்சியதிகாரங்களுக்கு வருவோரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்றாற் போலவே நடந்து வர வேண்டியிருக்கின்றது.

ஜனநாயக ரீதியாக தேர்தல்கள் மூலம் மக்கள் ஆணைகளைப் பெற்றுப் பதவிக்கு வருவோர், தமது கைகளில் அதிகாரங்களைப் பெற்றதும் அரசியல் ரீதியான பிரச்சனைகளைப் பெரிதும் இராணுவ ரீதியாகவே அணுகிவருகின்றனர்.

இராணுவ ரீதியான அணுகுமுறைகள் வெற்றிதரப்போவதில்லை என்பதை உணர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் ஆர்வங்காட்டும் போது பேரினவாதசக்திகள் யுத்தகோஷங்களை முழங்கி போரைத்தொடர வேண்டுமென்றே வலியுறுத்துகின்றன.

இலங்கை இராணுவத்தரப்பை பொறுத்தவரை, எந்தவொரு தேசத்தின் இராணுவத்தையும் போல ஒரு நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு, பாதுகாப்பு என்பவற்றுக்காகப் போராட வேண்டியது அவசியமானதாகவே இருக்கின்றது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனைக்காக இராணுவம் வெறுமனே ஒரு 'பலிக்கடா'வாக மாறியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை இராணுவத்தில் ஆட்பலம், ஆயுத பலம் என்பவை இன்று அதிகரித்துக் காணப்படுகிறது. ஆயினும் இராணுவத்திலுள்ளோர் தம்மீது யுத்தமென்பது வலிந்து திணிக்கப்பட்டுள்ளதென்பதையே உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

இதன் காரணமாகவே இராணுவத்திலிருந்து தப்பித்துச் செல்வோரின் தொகையும் அண்மைக்காலங்களில் அதிகரித்துச் செல்வதாக இருக்கின்றது. இதுதவிர புதிதாக ஆயுதப்படைகளுக்கு ஆட்சேர்ப்புக்காக அழைப்பு விடுக்கப்படும் போதெல்லாம் மிகக் குறைந்தளவு தொகையிலேயே படைகளில் சேருவதற்கு இளைஞர்கள் முன்வருகின்றனர்.

யுத்தங்களில் உயிரிழப்பதோடல்லாமல், கை, கால்களையும் இழந்து அங்கவீனர்களாகவும் பரிதவிக்க வேண்டியுள்ளது.

அத்துடன் இராணுவவீரர்களது குடும்பங்கள் அநாதைகளாகவும், விதவைகளாகவும், ஆதரவற்றவர்களாகவும் உருவாகிச் செல்லும் பரிதாபகரமான சூழ்நிலையும் நாளுக்கு நாள் விரிவடைந்தே செல்கின்றது.

இவற்றைவிட இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களால் புதிய சமூகப் பிரச்சனைகளும் இலங்கையில் தோற்றம் பெற்று வரக் காணப்படுகின்றன.

கொலைகள், கொள்ளைகள் உட்பட மிகமோசமான வன்முறைகளில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோரே ஈடுபட்டு வருவதுடன் இக்கேடிகள் தமக்கெனப் 'பாதாள உலகம்' என்ற ஓர் இராஜ்ஜியத்தையும் உருவாக்கியவர்களாகவே இருக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கை இராணுவத்தின் இன்றைய வளர்ச்சியென்பது நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் பெருமளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்தியதாகவே இருக்கின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான தேர்தல் திகதியும் குறிக்கப்பட்ட நிலையில் புதிய இராணுவத்தளபதியாக ஜெனரல் லயனல் பலகல்ல பதவியேற்றுள்ளார்.

அத்துடன் இதுவரை காலமும் இருந்ததை விட வடக்கே பெருமளவிலான இழப்புக்களுக்கு, குறிப்பாக ஆனையிறவில் பெரும் தளமொன்றையே பறி கொடுத்த நிலையில் இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஜெனரல் பலகல்ல ஏற்றுள்ளார்.

ஆனையிறவுச் சமரின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளது மனோதிடம் அதிகரித்துள்ளதென்பதே இராணுவ விமர்சகர்களின் கணிப்பாகவும் இருக்கின்றது.

யுத்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளால் மட்டுமல்ல. இராணுவத்தினுள்ளே நிலவுகின்ற போட்டி பூசல்கள் என்பவை காரணமாகவும், இராணுவ ரீதியான கட்டுக்கோப்பில் பிளவுகள், தளர்வுகள் என்பவை காணமுடிவதையும் அறிய முடிகின்றது.

இந்நிலையில் ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றை அண்மைக்காலங்களில் இராணுவம் அதிகரித்துக் கொண்டுள்ளபோதிலும், ஒரு முற்று முழுதான அரசியல் நடவடிக்கைமூலமே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும்.

இதனை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும் இருந்தவர் என்ற ரீதியில் ஏனைய தளபதிகளை விட புதிய தளபதியான ஜெனரல் பலகல்ல மிக நன்றாகவே அறிந்து வைத்திருப்பார் என்றே கருத முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**சுவரொட்டிகள், கட்-அவுட்டுக்கள்** என்பவற்றைப் போடக்கூடாதென்று தேர்தல் சட்டம் கூறுகின்றது. இதுவரை இடம்பெற்ற வன்முறைகளில் அநேகமானவை கூட இந்த சுவரொட்டிச்சமாச்சாரத்தினால் தான் ஏற்பட்டிருந்தன. ஆனால் சாதாரண அரசியல்வாதிகளல்ல. சட்டம், ஒழுங்கு என்ற அமைச்சுக்களுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர்கள் கூட தம்மைத் தம்பட்டமடிக்க சுவரொட்டி விளையாட்டுக்களில் இறங்கியுள்ளனர். ஊருக்குபதேசம் உனக்கல்லடிகண்ணே, என்பது போலிருக்கிறது அவர்கள் போக்கு.

**வடக்கு-கிழக்கில் இத்தடவை** அநேக கட்சிகள் களமிறங்கியுள்ளன. ஆயுதக்கட்சிகள் ஆயுத பலத்தோடு நடமாடிவருகின்றன. கேட்டால் தற்பாதுகாப்பு என்று சொல்லிக்கொள்கிறர்கள். தற்பாதுகாப்பு அவசியம்தான். ஆனால் பிரச்சனைகள் வெடிக்கும்போது துப்பாக்கிகளின் வாய்கள் பேசநேர்ந்தால் என்ன செய்வதென்றே அஞ்சவேண்டியிருக்குது.

**நல்லைக் கந்தன் தேர் உற்சவம்** வெகு சிறப்பாக நடந்தேறியிருந்தது. அதேதினத்தில் கொழும்பு கொம்பனித்தெரு முருகன் கோயிலிலும் தேர் உற்சவம். ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். அதீத பாதுகாப்பு வலயமான கொம்பனித் தெருப்பகுதியில் முருகன் தேர்வலம் வந்து அருளிய காட்சி, இறையாட்சியின் மகிமையைப் பறைசாற்றுவதாகவே இருந்தது.

**ஒலிம்பிக் பந்தயங்களுக்காக** அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு உலக விளையாட்டுவீரர்கள் வந்து சேர்ந்த வண்ணமிருக்கின்றனர். இவர்களுடன் 'நான்கு கால்' வீரர்களும் போட்டிகளுக்காக சிட்னிக்கு வந்தவண்ணமுள்ளனர். யார் இந்த நான்கு கால் வீரர்கள்? என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. குதிரைகளே அவர்கள். பிரிட்டன் உட்பட பல்வேறு நாடுகளும் குதிரைப்பந்தயங்களுக்காக கோடிக்கணக்கான செலவில் விமானங்களில் குதிரைகளை சிட்னிக்கு அனுப்பி வருகின்றன.

**அடங்கி, ஒடுங்கி தன்மானமிழந்திருப்பதை** விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் தமது சீருடையைத் தூக்கி எறிந்துள்ளார். அரசியல் தலையீடுகள் தம்மைக்குறுக்கிடுகின்றன என்று பண்டார என்ற குருநாகலையைச் சேர்ந்த அப்பொலிஸ் அதிகாரி தமது பதவியிலிருந்து இராஜனாமாச் செய்துள்ளார். அவரை ஏனைய அதிகாரிகளும் பின்பற்றினால் அரசியல் தலையீடுகளுக்கு சிறந்த பாடத்தைப் புகட்டலாம். பொலிஸ் சேவையையும் சீராக்கலாம்.

**அண்மையில் மடுத்திருப்பதியில் விழா** நடந்திருந்தது. தேவாலயச் சுற்றாடல் கடந்தகாலங்களில் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்தது. இத்தடவை தென்னிலங்கையில் இருந்து சென்ற யாத்திரீகர்கள் பயமேதுமின்றித் தம்மால் மடுவில் இருக்கமுடிந்ததாகக் கூறினார்கள். இராணுவக் கட்டுப்பாடற்ற தேவாலயச்சுற்றாடலில் தமக்கு தொந்தரவோ அல்லது இடைஞ்சல்களோ இருக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள். மடு அன்னையின் இராச்சியம் மடத்தனமான அரசியல்களையெல்லாம் உடைக்க வேணுமென்பது அந்த யாத்திரீகர்களின் பிரார்த்தனையாக இருந்தது.

# பொத்தேரி மாந்த்ரீகன்

*மாந்த்ரீகம் ஓர் உன்னதமான வித்தை. தெய்வீகத் தன்மை வாய்ந்தது ஒளியைத் தரவல்ல தீ ஊரையும் அழிக்கும் அல்லவா? அதே போல மாந்த்ரீகத்தையும் பக்குவமாகக் கையாளவேண்டும். சுயநல நோக்கோடு தன் சுய இச்சைகளைக் பூர்த்தி செய்ய மாந்த்ரீக சக்தியைப் பயன்படுத்தினால் விபரீத பலன் தான் கிட்டும்.*

"**வா**ங்க எல்லாரும்..." கூப்பிட்டான். சித்தய்யன்.

"மறுபடியும் பனங் காட்டுக்கா?"

"இல்லே.... நாம அத்தனை பேரும் ஒண்ணாப் போய் அந்தக் கெழப்பய வீட்டுக் கதவைத் தட்டுவோம்!"

கேட்டதுமே ஒரு சிலர் வேறு பக்கம் பார்த்தபடி நின்று கொண்டார்கள். ஒரு சிலர் சித்தய்யனுக்கு உபதேசம் செய்தார்கள், "வேண்டாம் தம்பீ! ஏற்கனவே ஒரு கொழப்பம் உங்க மாமா வீட்டுல! இனி எங்க வீடுகள்லேயும் அது வந்து அல்லாடணுமா? வேண்டாம் தம்பி... விட்டுடு இந்த ஆசையை? நரி சும்மா கத்தத்தானே செய்யுது? காதப்பொத்திக்குவோம்," என்றார்கள் சிலர்.

"இல்லேண்ணே! வேற எதையும் போய் கேட்க வேண்டாம். மானம் பொட்டல்லே கத்தறது நிஜ நரியா...? இல்லே இந்த மாந்த்ரீகன் மந்திரிச்சு விட்ட மந்திர நரியா? அதை மட்டும் கேட்போம்..."

ஒரு சிலர் ஆளுக்கு ஆள் பார்த்துக் கொண்டார்கள்.

சித்தய்யன் கேட்ட கேள்வியில் எந்த வில்லங்கமும் இல்லை என்கிற முடிவோடு சிநேகமாகத் தலையை ஆட்டினார்கள்.

"சரி பெரிசு! எதுக்கும் போய் கேட்டுடுவோம்! இப்ப என்ன இதிலே சூதெடுக்கறதுக்கு இருக்கு?" என்றார் ஒருவர் தீர்மானமாக.

மறுபடியும் சில நிமிடங்கள் மவுனத்தில் கரைந்த பிறகு தான் ஒவ்வொருத்தருக்கும் இதிலே எந்த உபத்திரவமும் வராது என்கிற தெம்பே வந்தது!

ஆனால்....

'கெழட்டு' மாந்த்ரீகன் வீட்டுக் கதவை ஊர் முக்கியப்புள்ளிகள் ஒரு மணிநேரமாகத் தட்டியும்... பயனில்லை!

அந்தக் கதவு திறக்கப்படவே இல்லை!

கடைசியில் யாரோ ஒருவர் தான் கண்டு பிடித்துச் சொன்னார், "என்னையா இது? பூட்டுப் போட்ட கதவைப் போய் இத்தனை நேரமும் தட்டிகிட்டே இருக்கோம்?"

"அப்படின்னா அந்தக் கெழப்பய எங்கே?"

கேட்டான் சித்தய்யன்.

**தூ**க்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த கெழட்டு மாந்த்ரீகன் தாமகேது... எழுந்து வந்து ஜன்னல் கதவுகளை அடைத்தார். அப்போதும் நரிகளின் ஊளையிடல் அடங்கவில்லை.

"என்னடா சனியனிது? மனுஷனைத் தூங்கவிடாம...."

தனக்குள் முனகிக் கொண்டார் அவர்.

"மானம் பொட்டல்லே நரிக்கூட்டமா? எப்படி? இந்தப் பனங்காட்டுக்குள்ளே எப்படி வந்தது சலசலப்பு? இங்கே ஒரு மாந்த்ரீகன் இருக்கறதையே மறந்துட்டானா எவனாவது?"

"அப்புறம்?"

கத்தத் தொடங்கினார் தாமகேது!

பூஜை அறைக்குள் போயமர்ந்து கண்களை மூடித்தியானித்து கை நிறைய பஸ்பம் எடுத்தார்.

ஜன்னலுக்கு வெளியே அள்ளி வீசினார். "ஒடுங்கடா எல்லாரும்! மறுபடியும் கத்தினா..... உங்களை அனுப்பி வச்ச மாந்த்ரீகனையே ரத்தம் கக்கிச் சாக வைப்பேன்....! தெரியாதா என் கோபம்?"

அவர் சொல்லி வாயை மூடிய மறுகணமே அடங்கி விட்டது நரிகளின் ஓலம்.

உடனே, பைத்தியம் பிடித்தாற்போல் சிரித்தார் தாமகேது. சிரித்துக் கொண்டே திரும்பிய போது தான் தெரிந்தது ஒரு சித்திர புடவை!

முந்தானை காற்றாட....

முன்புறம் அசைந்தாட....

கூந்தல் பிரிந்தாட...

"யாரது?" கேட்டார் தாமகேது!

"நான் தான் முத்துக்குட்டி!" கிண்கிணி நாதம்.

"அழகம்மா பொண்ணா?" கிறங்கிப் போனார் தாமகேது.

"ஆமாம் சாமி!"

"என்னடி இந்த ராத்திரியிலே? நான் கெழப்பய...!"

"அப்படித்தான் ஊரெல்லாம் நினைக்குது! ஆகா, உங்க கைக்குள்ளே மாட்டினப்புறம் நான் அப்படி நினைக்கலையே!" சிநேகமாய்த் திரும்பினாள் முத்துக்குட்டி. அவள் முகமெல்லாம் காமப்பரவசம்.

"இதென்னடா வம்பாப் போச்சு? சும்மா ஒரு பழைய ஞாபகம்! தொட்டுப் பத்து நாளாச்சு! விட்டு விலகலையா இனியும்?"

"அதுவே என் பத்து நாள் தூக்கத்தையும் கெடுத்துடுச்சு சாமி! என்ன மந்திரம் போட்டீங்களோ? நினைப்பெல்லாம் நீங்களே நெறைஞ்சு போயிட்டீங்கசாமி! ஒரு ராத்திரியாவது உங்களைக் கட்டிப் புடிச்சுட்டுத் தூங்கணும்...! அது தான் ஆசை."

"ஐயையோ....! இந்த வீட்டுக்குள்ளே இதுக்கெல்லாம் வசதியில்லியேடி பொண்ணே!"

"சரி வாங்க எங்க வீட்டுக்குப் போவோம்..!"

கிழவரின் சபலம் கிறுக்கு ஏறி தவித்தது..... சட்டென்று அவர் கன்னத்தில் முத்தமிட்டாள் முத்துக்குட்டி.

"பழுத்தபழம்... எப்படி ருசிக்குது?"

நாக்கை தடவி உதடுகளை மறுபடியும் குவித்தாள் முத்துக்குட்டி..!

"பழுத்த பழம் மட்டுமில்லடி! அனுபவப்பட்ட பழம். அப்படியே ஒரு ஓரமாய்ப்போய் நில்லு... வீட்டைப் பூட்டினப்புறம் வாரேன்....! யாரும் பார்த்துடாமப்போய்ப் பதுங்கி நில்லடி!" சட்டென்று அவள் கன்னத்தில் ஒரு சுண்டு சுண்டினார் தாமகேது!

பூட்டி விட்டு வந்த போது தான் பரபரத்தாள் முத்துக்குட்டி. "ஐயையோ சாமி அந்தப் பக்கம் பாருங்க...!"

பார்த்தார் அவர்.

ஊர்க்கூட்டம் திரண்டு வந்து கொண்டிருந்தது.

"இப்ப என்னடி பண்ண?"

"இப்படி வாங்க... இருட்டுக்குள்ளே போயிடுவோம்...." கிழவரின் கைகளைப் பற்றினாள் முத்துக்குட்டி. உடனே இழுத்துக் கொண்டு ஓடினாள். கிழவருக்கு மூச்சு இரைத்தது.

"எங்கேடி... இழுத்துட்டுப் போறே?"

"அதோ அங்கே பாருங்க!"

பார்த்தார் தாமகேது. எட்டத்தில் தெரிந்தது மாளிகை ஒன்று.

"யாரு கட்டிப் போட்டது இதை?"

"எங்க சொந்தக்காரர் தான் சாமி! இனியும் வீட்டுக்கு யாரும் குடிவரல்லே! பாலும் காய்ச்சலே!"

"அப்படியா?" ஆச்சரியப்பட்டார். நின்றார் தாமகேது!

"வந்துதான் பாருங்களேன் உள்ளே!" தயங்கியவரை மறுபடியும் இழுத்தாள் முத்துக்குட்டி. கட்டிலும், மெத்தையும்.... கனமில்லாத தலையணைகளும்... பக்கத்தில் பாலும், பழமும்....

"அடேயப்பா! பழைய ஞாபகத்தை மறுபடியும் வரவச்சுடாதேடி....! இப்படி ஒரு மாளிகையை நான் இதுவரை பார்த்ததே இல்லியே...! மேலே என்னது விசிறி?"

"பனையோலைதான் சாமி! மானம் பொட்டலுக்குள்ளே வேற என்ன இருக்கும்? சுத்தியும் பனைமரம்... நடுவே இந்த வீடு...! வீட்டுக்குள்ளே கட்டில்... கட்டில் மேல நீங்க பக்கத்தில் நான்...."

சட்டென்று கட்டிப்பிடித்தாள் முத்துக்குட்டி.

"ச்சே! என்னடி இது? எலும்பை நொறுக்கிற மாதிரியா அணைக்கிறது? மெதுவா... மெதுவா கட்டிப்புடிக்கணும்..."

"இப்படியா சாமி?"

கேட்ட முத்துக்குட்டி மறுபடியும் அணைத்தாள்.

அவளைத் தழுவும் நோக்கத்தோடு தான் தாமகேதுவும் பலம் தளர்ந்து போன கைகளை முதுகுப் பக்கமாக வளைத்தார். வளைத்த மறுகணமே திடுக்கிட்டுப் போனார்.

காரணம் முத்துக்குட்டிக்கு முதுகே இல்லை! திணறினார் தாமகேது.

"ஏணடி... நீ யாஷியா? என்னை என்னடி பண்ணப்போறே?" தழுவிக் கொண்டிருந்த முத்துக்குட்டியின் முகத்தைத் திருப்பினார் தாமகேது.

அந்த முகத்தில் இதற்குள் கோரப் பற்களும், ரத்தசிவப்பும் வெளியேறி வெளிப்பட்டன.

மறுகணம்...

தாமகேதுவின் விலா எலும்புகள் நொறுங்கின. விழிகள் பிதுங்கின. சட்டென்று அவர் கழுத்தைக் கடித்தது யட்சிணி.

அப்புறம்?

'நற நற' வென்று பட்சிக்கத் தொடங்கியது.



## இருகூ_ராசின்

மாமிசம், ரத்தம், எலும்பு எல்லாவற்றையும் வெறித்தனமாய்த் தின்று தீர்த்தது அந்த யட்சிணி!

சிலவற்றை மட்டுமே துப்பிப் போட்டிருந்தது!

**மா**னம் பெட்டலின் ஒரு பனைமரத் தடியில் கொஞ்சம் தலைமுடியும், பித்த வெடிப் பேறிய இரு பாதங்களும், சுருக்கம் விழுந்த இரண்டு கைகளும் கிடப்பதைப் பார்த்து விட்டு மயிலம் ஜனங்கள் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தனர்.

சிலருக்கு மட்டும் தான் அந்தக் கால்களை அடையாளம் தெரிந்தது.

"இது அந்தக் கெழட்டு மாந்த்ரீகன் காலே தான்!" என்று அவர்கள் சாட்சியம் கொடுத்தார்கள். இரண்டு கைகளையும் சிலர் உறுதி செய்து சொன்னார்கள்.

"இது அந்தக் கேடு கெட்டவன் கைதான்!" என்றார்கள் அவர்கள். சித்தய்யன் அந்தக் கூட்டத்திலிருந்து வேகமாகக் கிளம்பிப் போனான்...

"எங்கேடா போனான் அவன்?"

"தெரியலையே!" என்று பதில் வந்தது. சித்தய்யனும் அதைப் பற்றி யாருக்கும் தெரிவிக்கவிரும்பவில்லை! ஏனென்றால் மயிலம் மக்களின் சிம்மசொப்பனமாக இருந்த தாமகேது, செத்துப் போனது பொத்தேரி மாந்த்ரீகன் செய்த மாந்த்ரீக வலிமைதான் என்பதில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

இனி எப்படியும் முத்துக்குட்டி சித்தம் தெளியலாம். மயிலம் பெண்களும் சுதந்திரமாக வெளியே நடமாடலாம்.!

[முற்றும்]

# அன்னை வழியில் இன்னொரு அன்னை



**உ**லகில் பிறந்தோம், வாழ்ந்தோம் என்ற ஏனோ தானோ வாழ்க்கை வாழ்பவர் பலர். சுயநலமில்லாமல் மற்றவர்களுக்காக வாழ்பவர்கள் சிலர் தான். இவர்கள் போற்றுதலுக்கும் வணங்குதலுக்கும் உரியவர்கள்.

வெளிநாட்டில் பிறந்து வேறொரு மண்ணில் சென்று சேவை செய்பவர்கள் மரியாதைக்குரியவர்கள்.

அன்னை தெரேசா ஆரம்பித்து வைத்த வழியில் வந்த இன்னொரு அன்னைதான் வேலரி ஆன் போதம்லி.

யார் இந்த அன்னை?

1968ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குச் சென்றார் வேலரி ஆன் போதம்லி என்ற தாதி. தமிழ் நாட்டிலுள்ள வேலூர் மருத்துவமனையில் தாதியாக இருந்தார்.

அங்கு பணிபுரிந்தபடியே இங்கிலாந்திலுள்ள தனது நண்பர்களிடம் பணம் திரட்டி குழந்தைகள் விடுதி ஒன்றைப் பராமரித்து வந்தார். இவரது விடுதியில் சேர்ந்து படித்த பலர் இன்று நல்ல நிலையில் இருக்கின்றனர் என்பது சந்தோஷமான விடயம்.

கடந்த 1998ம் ஆண்டு தனது பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் விடுதியில் உள்ள குழந்தைகளுக்குத் தொண்டாற்றி வருகின்றார் இந்த அன்னை.

இந்த அன்னையின் சேவையைப் பாராட்டி, இங்கிலாந்து அரசின் சமூக சேவைக்கான உயரிய விருது இவருக்கு வழங்கப்படவிருக்கிறது.

# கட்டாய இராணுவப் பயிற்சி

**ஈ**ரான் நாட்டில் பாடசாலை மாணவிகளுக்குக் கட்டாய இராணுவப்பயிற்சி அளிக்க அந்நாட்டின் கல்வித்துறை அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

'அவர்கள் பூப்பெய்தும் போது அவர்களது உடல்நிலை முன்னேற்றமடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பயிற்சியளிக்கப்படவுள்ளதாக'த் தெரிவிக்கப்படுகிறது.

தற்காப்பு மற்றும் முதலுதவி போன்றவைகளில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப் படவுள்ளது.

# பெற்ற தாய்க்கு தண்டனையா?

**அ**மெரிக்காவில் டார்ச் வில்லா பகுதியில் உள்ள நீதிமன்றம் ஒன்று 64 வயதான பெற்றி என்ற மூதாட்டிக்கு 23 நாள் தண்டனை விதித்துள்ளது.

வயதான காலத்தில் அந்தப் பாட்டி என்ன செய்தார்?

1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி தனது மகன் வயிற்றுப் பேரனை அழைத்துக் கொண்டு மேடிகன் என்ற இடத்துக்குச் சென்றார் பாட்டி. அங்கிருந்து பேரனின் விருப்பத்திற்காக டிஸ்னி வேர்ல்டுக்கு அழைத்துச் சென்றார்.

இதை அறியாத பாட்டியின் மகனும் மருமகளும் தமது மூன்று வயதுக் குழந்தையைக் கடத்திச் சென்றுவிட்டதாக பொலிஸில் புகார் செய்து விட்டார்கள். அதுமட்டுமன்றி ரீ.வி, வானொலி, பத்திரிகை என்று எல்லாவற்றிலும் விளம்பரமும் செய்து விட்டார்கள்.

இதையறிந்த பாட்டி, பேரனை அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார். ஆனால் மகனோ அந்தப் புகாரை வாபஸ் பெற மறுத்துவிட்டான்.

இதனால் பாட்டி மீது வழக்கு நடந்தது. அதற்காக 2 வருடச்சிறைத்தண்டனையும் பாட்டிக்குக் கிடைத்தது. பாட்டி மேல் நீதிமன்றத்தில் தனது தண்டனையை இரத்துச் செய்யும் படி மனுப்போட்டார்.



மனமிரங்கிய நீதிபதி பாட்டியின் தண்டனையை 9 மாதமாகக் குறைத்து 8 மாதம் வீட்டுச் சிறையிலும், 23 நாட்கள் சிறையிலும் கழிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தனர்.

தாயின் மீதுள்ள புகாரை மகன் வாபஸ் பெற்றிருந்தால் அவருக்கு விடுதலை கிடைத்திருக்கும். புகாரை வாபஸ் பெறாததற்கு மகன் சொன்ன காரணம் இது!

"குழந்தையைக் காணாமல் 3 நாட்களும் நாங்கள் பட்டபாடு எங்களுக்குத் தான் தெரியும். அதனால் தான் புகாரை வாபஸ் பெறவில்லை!" என்று கூறியுள்ளார் அந்த மகன்.

# அப்பாவாகச் சந்தர்ப்பம் குறைவு

**ஆ**ண்களுக்கு வயது ஏற ஏற அப்பாவாகும் சந்தர்ப்பம் குறைந்து வருவதாக இலண்டன் மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

திருமணமாகிய 25 வயது இளைஞர்கள் 100 பேரில் 8 பேர்தான் ஒரு வருடகாலத்தில் அப்பாவாக முடியவில்லை. இதேவேளை சுமார் 35 வயதான 100 ஆண்களிடம் ஆய்வு செய்ததில் 15 பேர் அப்பாவாகவில்லை.

இதற்காக 8500 தம்பதியரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இதன் மூலம் மேற்சொன்ன கூற்று நிரூபணமாகியுள்ளது.

இதற்குக் காரணம் ஆண்களின் உயிரணுக்களது தரம் சுற்றுப்புறச் சூழல், நோய்ப்பாதிப்பு காரணமாகவே இந்த நிலை குறைந்து வருகிறது.

பெண்களில் 35 வயதுவரை உள்ளவர்கள் 100 சதவீதம் கருத்தரிக்க வாய்ப்புள்ளது. இவர்களிலும் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் கருத்தரிக்கும் வாய்ப்பு குறைகிறது.

# ஹொலிவூட் செல்லும் பொலிவூட் நடிகை



**இ**ந்தித்திரையுலகை பொலிவூட் என்று அழைப்பார்கள். பொலிவூட்டைக் கலக்கிய மாதுரி டிக்ஷித், அமெரிக்காவில் வசிக்கும் மருத்துவரை மணந்து கொண்டாலும் நடிப்பை மறக்கவில்லை.

விரைவில் இவர் ஹொலிவூட் படமொன்றில் நடிக்கவுள்ளார். இந்த ஆங்கிலப்படத்தைத் தயாரிப்பவர் இஸ்மயில் மெச்சண்ட் என்பவர். இவர் மாதுரி நடித்த 'கஜ கலமினி' என்ற இந்திப் படத்தைத் தயாரித்தவர்.

சமீபத்தில் அமெரிக்க இதழ் ஒன்றுக்கு இந்தத் தயாரிப்பாளர் அளித்த பேட்டியில்,

"நான் பார்த்த நடிகைகளிலேயே மாதுரி டிக்ஷித் தான் ஹொலிவூட் படத்தில் நடிக்கப் பொருத்தமானவர். நான் அடுத்துத் தயாரிக்கும் ஹொலிவூட் படத்தில் மாதுரி தான் நாயகி!" என்று கூறியுள்ளார்.

## மண்ணிலே ஒரு விசித்திரம்



மண்ணிலே சிற்பம் வடிவமைப்பது உலகின் பல்வேறு பாகங்களில் நடந்து வருகிறது.

சீனாவின் லோயுஷான் தீவில் ஹாங்ஸேயு கடற்கரையில் அண்மையில் மண்சிற்பங்கள் வடிவமைப்புத் திருவிழா நடைபெற்றது.

இத்திருவிழாவில் பெண் சிற்பக் கலைஞர் ஒருவர் மேற்கு ஆபிரிக்கப் பெண்களின் உருவத்தை வடிவமைக்கும் காட்சிதான் இது.

## புலிகளுக்காகப் போராட்டம்

பிராணிகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பொன்றின் பெயர் பேடா (PETA)


சமீபத்தில் இந்தியாவில் உள்ள 'நந்தன் கன்னன்' என்ற சரணாலயத்தில் 13 புலிகள் இறந்தன. அதன் எதிரொலியாக 'பேடா' அமைப்பினர் 'அழகிய பிராணிகளை அம்பு முனையில் சிறைப்படுத்தாதீர்கள்' என்று கண்டனம் தொடுத்துள்ளனர்.

பெண் ஒருவருக்கு புலிவேஷம் போட்டு சிறைக்குள் அடைத்து, ஒரு புது விதப்போராட்டத்தை நடத்தினர். புலிஷேம் போட்டு கூண்டுக்குள் அடைக்கப்பட்டவர் ஷெரில் லீ என்ற பிரபல அமெரிக்க நடிகை.



# தகவல் பெட்டி

## கிரிக்கெட் கலாட்டா




இதென்ன கிரிக்கெட் போட்டியில் ஏதோ கலாட்டா என்று நினைத்து விட்டீர்களா?

சமீபத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுக்கெதிராக இங்கிலாந்தில் ஒருநாள் போட்டியொன்றில் விளையாடிக் கொண்டிருந்தது. இங்கிலாந்து வீரர் அலெக் ஸ்ரூவர்ட் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது, இரசிகர் ஒருவர் ஆர்வ மிகுதியால் 'ஒன்றுமே இல்லாமல்' அப்படியே மைதானத்திற்கு ஓடிச்சென்று விட்டார்.

பின் அவரை பொலிசார் அலக்காகத் தூக்கிக் கொண்டு சென்று விட்டனர்.

## சரக்குக் கப்பல்

ஜெர்மனியைச் சேர்ந்த லிஃப்டர் ஏஜி நிறுவனம் பொருட்களைத் தூக்கிச் செல்லும் ஆகாயக் கப்பல் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

160 தொன் எடையுள்ள பொருட்களை ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு எடுத்துச் செல்லும் இக்கப்பலின் நீளம் 60 மீட்டர். இதன் விட்டம் 32.2 மீட்டர்.

நம் நாட்டிலும் இக்கப்பலை அறிமுகப்படுத்தினால் லொறிகளுக்கு வேலை இல்லாமல் போய் விடும்.





## மிருக (தாய்ப்) பாசம்

படத்தில் தாய் நீர்யானையை நோக்கி வாயைப் பிளந்து கொண்டு நிற்கிறது அதன் குட்டி.

குழந்தைகள் சந்தோஷத்தில் தாய்மாரைத் தனது கால்களால் உதைப்பது போல், இந்தக்குட்டி நீர்யானை சந்தோஷ மிகுதியால் தாயைக் கடிக்கிறது.

பெற்றோர் தமது பிள்ளைகளைக் கண்டித்து வளர்ப்பதில் சற்று முரட்டுத்தனம் காட்டினாலும், அவர்களைப் பேணிப் பாதுகாப்பதில் சாதுவாய் இருப்பது போல் இருக்கிறது இந்த மிருக பாசம்.

# ஆங்கிலப் படத்தில் ஜோதிகா

'கதை நேரம்', 'சீனியர் ஜூனியர்' உட்பட பல தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரித்து வரும் மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம் 'பாரதி' படத்தைத் தயாரித்துள்ளது.

அதைத் தொடர்ந்து இந்நிறுவனம் ஆங்கிலப்படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளது. இது தமிழ்-இந்தி மொழிகளிலும் வெளியிடப்படும்.

கமல் நடித்த 'அபூர்வ சகோதரர்கள்', 'மைக்கல் மதனகாமராஜன்' உட்பட பல படங்களை இயக்கிய சிங்கீதம் சீனிவாசராவ் இப்படத்தை இயக்கவுள்ளார்.

'லிட்டில் ஜோன்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் ஹொலிவுட் நடிகர் பென்ட்லி மிட்சம் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக ஜோதிகா நடிக்கிறார். இவர்களுடன் அனுபம் கெர், நாசர், மோகன்ராம், ஆர்.எஸ். சிவாஜி, மாஸ்டர் யோகேஷ், பாத்திமா பாபு உட்பட பலர் நடிக்கின்றனர்.

கோயில்கள் பற்றிய ஆராய்ச்சிக்காக வெளி நாட்டிலிருந்து வரும் இளைஞன் ஒருவன் இந்திய குடும்பத்தில் தங்குகிறான். அங்கு அவன் எதிர்கொள்ளும் சம்பவங்கள் தான் படத்தில் கதை. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் இரசிக்கும் வகையில் கொம்பியூட்டர் கிராஃபிக்ஸ் காட்சிகளுடன் இப்படம் உருவாகிறது.

## முகப்பில்

விஜயகாந்த்

மீனா

சினி விசிட்



அர்ஜுன்-மீனா
படம் : ரிதம்

## மினி

• அஜித்குமார் கதாநாயகனாக நடிக்க, முருகதாஸ் என்னும் புதிய இயக்குநர் இயக்கும் 'தீனா' படத்தின் நாயகியாக 'ஷக்கலக்க பேபி' வசுந்த்ரா தான் நடிப்பார் எனத் தெரிகிறது.

• சரத்குமார் சொந்தமாகத் தயாரித்து நடிக்கும் ... இயக்குபவர் சூர்யகுமார் 'சேனாதிபதி' படத்தை இயக்கி... தான் இப்போது தனது பெயரை சூர்யகுமார் என...

• தமிழில் அவ்வப்போது ஓரிரு படங்களில் நடித்த ... இப்போது தெலுங்குப் படமொன்றில் கதாநாயகனா... இப்படத்தில் விஜயசாந்தி கதாநாயகியாக நடிக்கிற...

• சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் படமொ... என்று பெயரிடப்பட்டுள்ளது. 'சேது' விக்ரம் ... நடிக்கும் இப்படத்தை சுரேஷ் என்னும் புதிய...

• மாதுரி டிக்ஷித் ஜோடியாக ... படத்தில் நடித்து வரும் பிரபல கன்னட நடி... அடுத்து நடிக்கும் கன்னடப்படமொன்... கொய்ராலாவை தனக்கு ஜோடியாக்கி...


• புருஷோத்தமன் என்பவரது இய... ஜெயசீலன்-அபிதா நடித்து வரும் ... பூவே' இப்படத்திற்கு முதலில் ... என்று பெயரிடப்பட்டுப் பின்னர் ...

• மோகன் நீண்ட இடைவெ... தயாரித்து நடித்த 'அன்புள்ள... படத்தின் அறிமுக நாயகி ... ஒரு தமிழ்ப்படத்தில் நடிக்க...

• கங்கை அமரன் இ... மகன் வெங்கட் பிரபு நா... இருக்கும் 'பூஞ்சோலை'... 'ஒருவன் ஒருவன் முத... மாறாதிரும் படம் இன... வெளியாகப்படவில்லை...

## வ ர விருப்பவை

'காமெல்லா', 'அழகுராணி', 'தீராத ஆசை', 'மேடம்', 'நள்ளிரவு', 'அவளும் அப்படித்தான்' இதெல்லாம் என்ன என்கிறீர்களா? விரைவில் வரவிருக்கும் 'பலான' படங்களின் பெயர்கள் தான் இவை.



விஜயகாந்த்-மந்த்ரா
படம் : சிம்மாசனம்



## காதோடு சொல்லுகிறோம்

'சூர'மான நகைச்சுவை நடிகைக்கும் தனக்குமிடையே விரிசல் ஏற்படக் காரணம் அந்தக் 'குடும்பப்பட' இயக்குநர் தான் என்று, அந்த இயக்குநருடன் சண்டை போட்டாராம் வைகைப்புயல் நகைச்சுவை நடிகர். மேற்படி விவகாரத்தால் கோபமடைந்த அந்த இயக்குநர், 'இனிமேல் அந்த நகைச்சுவை நடிகருக்குத் தனது படத்தில் இடமில்லை' என்று கூறிவிட்டாராம்.

**தொ**டையழகி நடிகைக்குப் பெரிய பெரிய இடங்களில் எல்லாம் ஏகப்பட்ட தொடர்புகளாம். வருமானவரித்துறையினர் சோதனை என்ற பெயரில் நடிகை வீட்டுக்குச் சென்றால், பெரிய இடங்களுக்கு ஃபோன் செய்து, வந்தவர்களைத் துண்டைக் காணோம் துணியைக்காணோம் என ஓட வைத்து விடுகிறாராம்.

**பி**ரகாசமான முன்னெழுத்துக்'கா' நடிகை மீது அன்பாக இருக்கிறாராம் அந்த தொழிலதிபர். நடிகை மீது இருக்கும் பிரியத்திற்கு அச்சாரமாக தங்க வைர நகைகளாக வாரி வழங்கி வருகிறாராம் அந்தத் தொழிலதிபர்.

**கு**டும்பப் பாங்காக நடிக்கும் அந்தத் 'தேவலோக' நடிகைக்கு இப்போது திரையுலகில் மார்க்கெட் டல்லடிக்க ஆரம்பித்து விட்டதாம். இதனால் பதறிப்போன நடிகை தனக்குத் தெரிந்த நடிகர்களின் வீடுக்கதவுகளை இரவிரவாகத்தட்டி வாய்ப்புக்கேட்டு வருகிறாராம்.

## ஏ.ஆர். ரகுமான் மீது ராஜீவ் மேனன் கு...

... படங்களை இ... படங்களைக் குறிப்பிட்ட... மல், பலகாலத் தாமத... ராஜீவ் மேனன் தனது படங்க... காரணம் இது:

'எனது படங்கள் தாமதமானதற்கு தான்... தான் காரணம். அவர் சரியான நேரத்தில் இ... தான் படங்கள் தாமதமாகின்றன.

இப்போது நான் மலையாளப்படம் ஒன்றை... ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கவில்லை. இந்தப் பட... இல்லையா என்று பார்ப்போமே?' என்று தெரி...

## எங்கே போனார் மீனா?

மீனா 'டபுள்ஸ்' படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடித்துக் கொண்டிருந்தபோது பிரபுதேவாவை திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தி பரவியது. அப்படத்தை விறுவிறுவென்று நடித்துக் கொடுத்து விட்டுச் சென்ற மீனாவைக் காணவில்லை.

அர்ஜுன் ஜோடியாக மீனா நடித்த 'ரிதம்' படத்தின் சில காட்சிகள் படமாக்கப்படவிருந்தன. மீனாவை அதற்காகத் தேடிச்சென்றபோது அவர் வீட்டில் இருக்கவில்லை. அவர் மட்டுமல்ல அவர் அம்மாவும் தான்.

'சொல்லாமல் கொள்ளாமல் மீனா எங்கே சென்றார்?' என்பது ஒருவருக்கும் தெரியாதது பெரிய ஆச்சரியம் தான்.

## தொப்புள் பட...

தமிழ்ப் படங்களி... விடுதல், ஒம்லெட் போ... பட. இன்னபிற செ... பயன்படுத்தப்பட்ட... வதானமான தொப்பு... கட்டுவை அனைத்து... பார்த்திபன்.

கே.பாஸ் இயக்... படத்தில் கதாநாயகி ... வயிற்று வலிவா... பார்த்திபன் ... தொப்புளில் மேற... சிகிச்சைதான் செ... சங்கதியாம்.

## ராஜேந்தர் படத்தில் பிரகாஷ்ராஜ் போட்டோ

டி.ராஜேந்தரின் 'சொன்னால்தான் காதலா' படத்தில் முக்கிய வேடமொன்றில் குஷ்பு நடிக்கிறார். படத்தில் இவருக்கு ஜோடி பிரகாஷ்ராஜ்.

படத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கவில்லை. அவருடைய போட்டோ மட்டும் நடிக்கிறது. இதற்காக பிரகாஷ் ராஜை சந்தித்து அவருடைய போட்டாவை படத்தில் பயன்படுத்த டி.ராஜேந்தர் அனுமதி கேட்க, அதற்கு உடனே சம்மதித்து விட்டார் பிரகாஷ்ராஜ்.

## காதல் வலையில் ராதிகா சௌத்ரி

ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இப்போது பிரேம் நடிக்கும் 'நிரோதம் 2' படத்திற்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

இதில் கதாநாயகியாக நடிக்கும் ராதிகா சௌத்ரிக்கும் அப்துல் ரகுமானுக்கும் இடையே காதல் மலர்ந்துள்ளது.



சிவகுமார்-ராதிகா
படம் : உயிரிலே கலந்து



கஸ்தூரி
படம் : கஜுராஹோ

திரையுலக மறுபக்கம் (164)

கலிபோர்னியாவிலிருந்து மயன்

# கடனில் சிக்கித் தவிக்கும் நடிகர்

ரசிகர்களின் அதிகமாக அடிபடும் நடிகர் இவர். நட்சத்திரம் ஒன்றின் பெயரைக் கொண்ட இந்த நடிகரின் தந்தையும் ஒரு நடிகர்.

இளம் நடிகர்களின் வருகையால் முன்னணி நடிகர்கள் பலர் பின்னுக்குத் தள்ளப்பட, இவர் மட்டும் இளம் நடிகர்களின் வருகையால் பாதிப்படையாது தாக்குப் பிடித்து நின்றார். சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்து சிறப்பாக நடித்து வரும் இந்த நடிகர் நடித்து, கடைசியாக வெளியான மூன்று படங்களும் படுதோல்வியைத் தழுவியுள்ளன.

சில நல்ல கதையம்சமுள்ள படங்களும் தோல்வியடைவதுண்டு. ஆனால் இவர் நடித்துத் தோல்வியடைந்த படங்களின் கதை உபயோகமில்லாது இருந்தன. இவர் ஏன் இப்படிப்பட்ட படங்களில் நடிக்கிறார்? என்ற கேள்வி எழாமல் இல்லை.

வரவுக்கு மீறிய செலவுகளால் கடனாளியாகி இருக்கும் இவர் கடனை அடைப்பதற்கு பல படங்களில் நடிக்கிறார். இதனால் படங்களின் கதைபற்றி கேட்பதில்லை. குறுகிய காலத்தில் நடித்துக் கொடுத்து விட்டு, சம்பளத்தை மட்டும் வாங்கிக் கடனை அடைத்து வருகிறார்.

இவர்தான் சொந்தப் படம் எடுப்பதில்லையே? அப்படியானால் கடனாளியானது எப்படி?

இரண்டு மனைவியரோடு குடும்பம் நடத்தும் இந்த நடிகர் வரவுக்கு மீறிச் செலவு செய்பவர். எப்போதுமே நட்சத்திர வாசம். நடிகைகளை எளிதில் தன்பால் சேர்த்து விடும் இவர் அவர்களுக்கு பணத்தை வாரி வழங்குவார்.

இதுதான் நடிகர் கடனாளியாகக் காரணம்.

இதுபோதாதென்று வீட்டில் மனைவிகளுடன் பிரச்சனை ஏற்பட, அக்கா தங்கையான அவர்கள் இருவரும் தமது வீட்டிற்குச் சென்று விட்டனர்.

கடன் தொல்லை, வீட்டில் பிரச்சனை என்று பல பிரச்சனைகளில் சிக்கித் தவிக்கும் இந்த நடிகர் சோகத்தைப் போக்க மாலை வேளைகளில் நட்சத்திர ஹோட்டல்களில் இருக்கும் 'பார்'களுக்குச் செல்வார்.

அதுமட்டுமன்றி சில நடிகைகளைத் தேடிச் சென்று ஆறுதல் தேடிக் கொள்வார்.

அண்மைக்காலமாக நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்த நடிகரை மருத்துவர்கள் 'மது-மாது' விஷயங்களில் கொஞ்சம் கவனமாக இருக்கும்படி எச்சரித்தனர். ஆனால் நடிகர் அதையெல்லாம் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

வித்தியாசமான வேடங்களைத் தேர்வு செய்து சிறப்பாக நடிக்கும் அந்த 'சூப்பர் நடிகருக்குப் பின் அநாயாசமாக நடிப்பவர்' எனப் பெயர் பெற்றிருக்கும் இந்த நட்சத்திர நடிகரின் நிலை இப்படி இருக்கிறது.

## பெண் வேடத்தில் விஜய்

தெலுங்கில் வெங்கடேஷ்-சௌந்தர்யா நடித்து 'பவித்ர பந்தம்' என்ற பெயரிலும், கன்னடத்தில் ரவிச்சந்திரன்-ரம்யா கிருஷ்ணன் நடித்து 'மாங்கல்யம் தந்துனானே' என்ற பெயரிலும், இந்தியில் அனில் கபூர்-கஜோல் நடித்து 'ஹம் ஆப்கே தில்மே ரஹ்தே ஹை' என்ற பெயரிலும் வெளியாகி எல்லா மொழிகளிலும் வெற்றி பெற்ற கதைக் கரு இப்போது தமிழில் 'பிரியமானவளே' என்ற பெயரில் தயாராகி வருகிறது.

விஜய்-சிம்ரான் ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் ஒரு காட்சியில் விஜய் பெண்வேடத்தில் தோன்றுகிறார். விஜய் பெண் வேடத்தில் முதல் முறையாக நடிக்கும் படமிது.



விவேக்-நிரோஷா
படம் : கந்தா கடம்பா கதிர்வேலா

## ...சாட்டு

...சாரத்னவு, ...ாண்டேன்' ஆகிய ...தில் மேனன். அப் ...த்திற்குள் முடிக்கா ...பின்னே முடித்தார் ...மதத்திற்குச் சொன்ன

...மில்லை. ஏ.ஆர்.ரகுமான் ...த்துக் கொடுக்காததனால்

...வருகின்றேன். இதற்கு ...நேரத்திற்குள் வருகிறதா ...ராஜீவ் மேனன்.

## தேவயாணி வேடத்தில் சௌந்தர்யா

சத்யராஜ்-தேவயானி நடித்து வெற்றி பெற்றுள்ள 'என்னம்மா கண்ணு' தெலுங்கில் தயாராகவுள்ளது. தெலுங்கில் சத்யராஜ் வேடத்தில் வெங்கடேஷ் நடிக்கிறார். தேவயானி வேடத்தில் சௌந்தர்யா ஒப்பந்தமாகியிருக்கிறார்.

'சாகர சங்கமம்' ('சலங்கை ஒலி'), 'சுவாதி முத்யம்' ('சிப்பிக்குள் முத்து') போன்ற படங்களை இயக்கிய பிரபல தெலுங்கு இயக்குநர் கே.விஸ்வநாத்தின் உதவியாளர் ராமு என்பவர் தெலுங்கு 'என்னம்மா கண்ணு' படத்தை இயக்கவுள்ளார்.

## கௌரவ வேடத்தில் அஜித்-ஐஸ்

தற்போது தயாரிப்பில் இருக்கும் 'நீ எந்தன் வானம்' தனக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார் விக்னேஷ். ரவிக்குமரன் என்ற புதியவர் இயக்கும் இப்படத்தில் வில்லத்தனமான கதாநாயகனாக நடிக்கிறார் விக்னேஷ். இதில் இவருக்கு ஜோடியாக ரேஷ்மா நடிக்கிறார்.

இப்படத்தில் அஜித்குமாரும், ஐஸ்வர்யாராயும் கௌரவ வேடங்களில் நடிக்கிறார்கள். இதுவும் இப்படத்திற்கு ஒரு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

## சங்கவி-சிம்ரான் போட்டி

சமீபத்தில் 'பொப்பிலி அல்லுடு' என்ற தெலுங்குப் படம் ஆந்திராவில் வெளியாகியுள்ளது. இதில் பாலகிருஷ்ணா கதாநாயகனாக நடித்துள்ளார். இவருக்கு ஜோடிகளாக சங்கவியும் சிம்ரானும் நடித்துள்ளனர்.

இப்படத்தில் சங்கவியும் சிம்ரானும் போட்டி போட்டுக் கொண்டு ஆடை அவிழ்ப்புப் போர் நடத்தியுள்ளனராம்.

கொடுத்து வைத்த தெலுங்கு இரசிகர்கள் என்கிறீர்களா? கவலைப்படாதீர்கள், விரைவில் இப்படம் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாகலாம்.

# அன்னை மறைந்து ஆண்டுகள் மூன்று



மனிதர்களாகப் பிறந்தும் வாழ வசதியற்ற வறியவர்களை வாழவைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு, தொண்டு செய்வதே தனது தொழில் என்ற துணிவோடு வாழ்ந்து மறைந்தவர் அன்னை தெரேசா.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்குவதற்கோர் இடமின்றி அல்லலுற்ற ஏழை எளியவர்களையும், தொழுநோயால் ஊன் இழிய-பார்ப் போரால் வெறுப்புக்குள்ளாக்கப்பட்டவர்களையெல்லாம் அணைத்தெடுத்து, அன்பால் அவர்களைக் குளிப்பாட்டி வாழ்வழிக்க முன்வந்தவர் அன்னை தெரேசா.

அன்னை தெரேசாவின் சேவையும் இறுதிகால வாழ்க்கையும் இந்தியாவில்-கல்கத்தா நகரில் தான் கழிந்தது. இத்தனைக்கும் அவர் ஓர் இந்தியக் குடியானவரல்ல.

அன்னை தெரேசாவின் இயற்பெயர் அக்னெஸ் கொங்ஸ்ஹா பொஜாஹியூ என்பதாகும். இவர் அல்பேனியப் பெற்றாருக்கு, 1910ம் ஆண்டு மசடோனியா விலுள்ள ஸ்கோப்ஜே என்ற இடத்தில் பிறந்தார். 1928ல், தனது 18வது வயதில் கத்தோலிக்கக் கன்னியர் மடத்தில் இணைந்து கொண்டார். இதன் பின்னரே இவர் அன்னை தெரேசா என்ற பெயரைப் பெற்றார்.

கன்னியர் மடத்தில் சேர்ந்து பயிற்சிகளைப் பெற்றதும் இவர் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப் பட்டார். அந்நியராட்சியில் அல்லல்பட்ட இந்தியாவில் வறுமையும் பிணியும் மலிந்து கிடப்பதைக்கண்டு மனம் வெதும்பினார். கல்கத்தா நகரையே தனது தொண்டுக்குரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார்.

துயர் துடைக்கும் சபை என்ற ஓர் அமைப்பினை நிறுவி, தனது சேவையை விரிவு படுத்தினார். கத்தோலிக்கத் திருச்சபை அன்னை தெரேசாவின் தொண்டுகளுக்கு எத்தகைய கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. எனவே 1948ல் அவர் கன்னியர் மடத்தை விட்டு விலகி தனியாகத் தனது பணி களை நடத்த அனுமதி கிடைத்தது. அன்னை தெரே சாவால் தொடங்கப்பட்ட அமைப்பு இந்தியாவின் 50 நகரங்களிலும் 30 பிறநாடுகளிலும் கிளைகளை நிறுவிப் பணிபுரிந்து வருகிறது.

அன்னை தெரேசாவுக்கு 23வது பாப்பாண்ட வரின் பரிசும், 1979ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசும் 1972ல் ஜவஹர்லால் நேருவிருதும் கிடைத்தன.

எங்கேயோ பிறந்து வளர்ந்து, இந்தியாவுக்கு வந்து, அந்நாட்டு மக்களுக்கு அரும் பெரும் தொண்டாற்றிய அன்னை தெரேசா 05.09.1997 அன்று இறையடி சேர்ந்தார்.

## தோல்வியின் சப்தங்கள்!

பெண்ணே நீ
நீயாகத்தான்
இருக்கிறாய்!
நான்தான்
நானாக இல்லை!!
***
என் மனவீட்டின்
காதல் தீபம்
அணைந்து கொண்டது;
அவ்விருளில்
வடிக்கும் என் கவிதையை
வெளிச்சத்தில் பார்ப்பவர்கள்
புரிந்து கொள்ள மாட்டார்கள்!
***
என் மனதுள்
காதலும் கண்ணீரும்
மாலை மாற்றிக் கொள்கிறது!
***
பெண்ணே!
நிழல்களின்
ஒப்பந்தங்களைவிட
நிஜங்களின் போராட்டமே
எனக்குப் பிடிக்கும்!
***
தினம் உன்
கனவுகளைக் கலைத்து
என் இமைகள்
வருடிக் கொள்கிறது!
***
உடம்புகள்
அழியும் போதும்
உணர்வுகள்
அழிவதில்லை பெண்ணே!
***
நீ
கட்டுப் போட்டது
என் கைகளுக்குத்தான்;
கவிதைகளுக்கல்ல!!
***
உன்னால்
தண்டிக்கப்பட்டது
என் ஆசைகளல்ல;
அன்புதான்!!

'தென்றல்'-மன்னார்.

## நெஞ்சுக்குள் நீ

ஏய் பெண்ணே!
உன் ஒய்யாரம் போதும்!
நீ தமயந்தி தான்!
***
ஏனடி
அப்பாவியாய் போகிறவனை
ஓரப்பார்வை பார்க்கிறாய்?
***
காதலென்று
கேட்டால் மட்டும்
காட்டுத் திமிருனக்கு!
***
ஆசையை தூண்டிவிட்டு,
அலைமோத வைப்பது
உன் வாடிக்கையா?
***
எங்கள் வேதனை
உங்களுக்கென்ன
வேடிக்கையா?
***
விரல்மடித்து எண்ணிப்பாரடி
பஜ்ஜி தின்னவந்த
மாப்பிள்ளைமார் எத்தனைபேர்?
***
ஜன்னல் கம்பிக்குள்
ஏனடி
சீதனச் சிறைவாழ்க்கை?
***
அப்பன் ஆத்தாளை
கலங்க வைத்த
பாவம் உனக்கேனடி?
***
உன்னை
மறக்கத்தான் முயற்சிக்கிறேன்;
முடியவில்லையடி!
***
நீயாவது
மனசைக் கொஞ்சம்
மாற்றிக்கொள்ளடி எனக்காக!

மாத்தளை - தியாகு.

## ஆங்கில நாட்டுப் பிச்சைக்காரனாய்

கண்மணி
உன்னைப்பற்றிய
ஞாபகங்களால்
என் மனசுக்குள்
சஹாராவின் கொதிப்பு...
***
என் நேசத்தின்
புனிதத்தை
உன்னிடம்
சொன்னபோது கூட,
சோகத்தையே
நீ தந்தாய்..
***
என் காதலை
காயப்படுத்தியவளே!
உன் நினைவுகளுடன்
என் பயணம்
இளமை தொலைந்த
ஓர் ஆங்கில நாட்டு
பிச்சைக்காரனாய்...!
***
புன்னகையை வீசி
மௌனங்களைச் சுமந்தவளே,
உன்னைப்பற்றிய
ஊமை உளறல்களை
இனியும்
என்னில் சுமக்க
நான்தயாராக இல்லை....!
***
நம் காதலுக்கு
சாட்சியாக இருந்த
வேலியோரத்து
ஓணானைக்கூட
இப்போது
நொந்து கொள்கிறேன்...!

கிண்ணியா-
ஏ. நஸ்புள்ளா.

## இதய உயில்

இனிய சினேகிதியே,
எப்படி.... நலம்தானே?
எனக்கென்ன...
உன்னைப்பற்றி
பேசிக்கொள்வதிலேயே
என் பகல்கள் கழிகின்றன;
உன் நினைவுகளை
அசைபோடுவதிலேயே
அழிகின்றன இரவுகள்.
***
கங்காருபோல்
சுமக்கின்றேன்
உன்நினைவுகளை-
மனசுப்பைக்குள்!
இதமாக இருக்கிறது.
***
சுவாசத்தைக்கூட
சில நொடிகள்
நிறுத்திவைக்கலாம்
உன் நினைவை...!
***
என் கவிதைகளையெல்லாம்
ஏளனம் செய்கின்ற
அழகான காவியம்
நீ...!
***
நீ சூடிக்கொள்வதாலா
இத்தனை வாசனை
பூக்களிற்கு வந்தது?
***
காந்தம் தடவிய
உன் வார்த்தைகள்
என் காதுகள் வழியே
உயிரையும்
கவர்ந்துச் செல்கிறதே!
***
நீ பேசும்போதெல்லாம்
சங்கீதத்தில்
புதிய புதிய
வாய்ப்பாடுகள்
பிறப்பெடுகின்றன!
***
நீ சிரிக்கின்ற
கணங்களில்
ஏனடி விரிகிறது
மத்தாப்பூ வெடியாக
என் மனசு...!
***
உன்னைப்பற்றி
பேசும்போதெல்லாம்
என் வார்த்தைகள்
இசையாய் மாறும்;
எழுத்துக்கள்
கவியாய் ஊறும்!
***
காதலிப்பவர்க்கு
கண்கள்தான் இல்லை
என்கிறார்கள்;
உன்னைப்பார்த்தபின்
என் இதயமே
என்வசமில்லையே..!
***
ஒரு துஷ்யந்தனாய் நீ,
இதயத்தை இழந்துவிட்ட
சகுந்தலைபோல
நான்..!
***
புதிதாய்
சந்திக்கும்
ஒவ்வொரு
பெண்ணிடமும்
உன்
சாயலைத்தேடி
தோற்றுப்போகிறது
மனசு.
***
முடிந்த
'பேனா'வில்கூட
மையூறும்
உனைப்பற்றி
எழுதும்போது,
இருந்தாலும்
முடிக்கத்தான்
வேண்டும் என்பதால்
நிறுத்தி வைக்கிறேன்
தற்காலிகமாக.
வாசிக்கும்போது
வலிக்கக்கூடாதுபார்
உன்கண்களுக்கு!

கி. இளங்குமுதன்-
காரைதீவு-1.

## தேன் கிண்ணம்

## உலவும் ஆவிகள்!

வாழ்வில்
நம்பிக்கையில்லாதவர்களே!
உயர்வு,
தாழ்வு நிலையன்று;
வரும் துன்பம் யாவும்
ஒரு சோதனை
என்று எண்ணி,
வேதனையைச்
சோதனையாக்கி-வாழும்
இன்றைய இளைஞர்களின்
வாழ்க்கை;
இரத்தங்களின் யுத்தம்!
இதை
மறு(ற)க்கும்
மனித மனங்கள்
மறுஜென்மத்திலும்
உலவும் ஆவிகள்!

-கோவிலூரான்

## பேனா நண்பர்கள்




பெயர்: ஆர்.ரஞ்சன்,
வயது: 23
முகவரி: Mayensde Chamoson, 1911 Ovronnaz, Swiss
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி



பெயர்: எஸ்.சித்திரா,
வயது: 28
முகவரி: P.O.Box-173, Abudhabi, U.A.E
பொழுது போக்கு: வழமையானவை

## நில் - கவனி - முன்னேறு



வாழ்க்கையில் என்றும் எப்பொழுதும் வெற்றியுடன் திகழ வேண்டுமானால் மேதை களின் மேன்மையான நிகழ்ச்சிகளைக் கட்டா யம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நமக்கும் புது வேகமும் உற்சாகமும் தோன்றும்.

அவர்களைப் போல நாமும் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற உந்து சக்தியும் உருவாகும். வாழ்கை நிகழ்ச்சிதானே? என்று அலட்சியமாக இருந்து விடக்கூடாது. ஏன் என்றால் அறிஞர்களின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி கூட நம்முடைய வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட முடியும்.

அறிஞர்களின் உயர்வும் வெற்றியையும் படம் பிடித்துக் காட்டக் கூடியது நிகழ்ச்சி. மன உணர்வுகளை தெளிவாகத் தெரிவிக்கும் பண்பாட்டின் பாதையில் பாதங்களைப் பதித்துப் பாங்காகப் பகுத்தறிவுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் வர லாற்று சான்றுகள் உயிரோட்டமாக இருக் கின்றன.

வாழ்க்கை என்ற கடல் நம்மை அலைக் கழிக்கும் போது, காலம் நம்மைச் சவால்விட்டு அழைக்கும் போதும், நாம் நடக்க வேண்டிய வழியில் ஒளி பாய்ச்சிக் காட்டுவது மகான் களின் மகத்தான மாண்புகள்தான். சரித்திரச் சான்றோர்களின் சான்றுகள் சாகாவரம் பெற்றவை!

அவை நமக்குக் கலங்கரை விளக்காக இருக்கும். வழிகாட்டும் தீபமாக மாறும் ஆன்றோர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி நம்முடைய வாழ்க்கையை அமைத் துக் கொண்டால் நிச்சயமாக வெற்றியுடன் வாழமுடியும்.

ஆபிரஹாம் லிங்கன் ஒரு சிற்றூருக்குப் போனார். ஏராளமானவர்கள் சாலை ஓரத் தில் கூடி இருந்தார்கள். வயலில் வேலை செய்தவர்கள் எல்லோரும் ஓடி வந்தனர். ஆனால் ஓர் உழவர் மட்டும் தன் கட மையைச் செய்வதிலே கவனமாக இருந்தார்.

லிங்கன் வண்டியிலிருந்து இறங்கி கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்த உழ வனிடம் சென்று அவருடைய கடமை உணர் வைப் பார்த்து மாலை அணிவித்துப் பாராட்டினார்.

வாழ்க்கையில் அதிக முக்கியத்துவம் பெறுவது இத்தகைய கடமைதான். இது நம்முடைய கௌரவத்தையும், நல்ல பெயரை யும் பெற்றுத் தரும். கடமை தருவது பெருமை. சிறுமையை அகற்றி முழுமை பெறக் காரணமாக இருப்பது கடமை ஒன்று தான்.

கம்பியூசியஸை முதலில் எவரும் மதிக்க வில்லை. சீனாவின் எல்லா இடங்களையும் சுற்றி அலைந்தார். சீனமன்னர் கூட அவரை 'வேதாந்தப் பூசாரி' என்று எள்ளி நகையா டினார். ஆனாலும் கம்பியூசியஸ் மனம் தளரவில்லை.

அவருடைய மனம் திண்மையும், ஊக்க மும் பெற்று சமூகச் சீர்திருத்தம் வேண்டி பல நூல்களை எழுதினார். மனிதப் பண் பையே மதமாக மாற்றினார்.

இவரால் மட்டும் எப்படி மதத்தை உருவாக்க முடிந்தது?

அதற்குக் காரணம் தனக்கு ஏற்பட்ட அவமரியாதையையும் கேலியையும் தூசி என்று எண்ணி தட்டிவிட்டு தன்னுடைய பாதையில் சென்றதுதான். நாமும் இவரைப் போல சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொண்டால், நல்ல வாழ்வை வாழமுடியும்.

சாக்ரடிஸ் சாகும் தருவாயில் தனக்கு மரண தண்டனை அளித்த நீதிபதியை நினைத்தார். எதிர்காலத்தில் ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்குப் பிறகு கூட 'அந்த நீதிபதிக்குத் தீராத பழிச்சொல் உண்டாகுமே' என்று வருந்தினார்.

இதுதான் சாக்ரடிஸின் பண்பு. இறக்கும் போதும் கூட இரக்கம் காட்டிய கண்ணிய வானாகத் திகழ்ந்தார்.

'பகைவனுக்கும் அருள்வாய் நன்நெஞ்சே' என்ற வாக்கினை நாமும் கடைப்பிடித்தால் எல்லோருடைய இதயங்களிலும் நாமும் குடியிருக்க முடியும்.

இங்கு குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சிகளை மனதில் கொண்டு செயல்பட்டால் நிச்சயமாக வெற்றியுடன் வாழமுடியும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

03.09.2000 முதல் 09.09.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
மனதில் நம்பிக்கை கூடும் பண வசதியைக் கொடுக்கும். கிரகங்கள் சிறப்புப் பெறுவ தால் தன யோகங்கள் சித் திக்கும். தொழில், கல்வி, சீராக அமையும். முயற்சி காரிய சித்தியைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 02.
அதிஷ்ட திகதிகள் : 05, 07.

**இடபம் :**
மறைவுஸ்தானத்தில் கிரக பலம் குறைவதால், எடுத்த விடயங்கள் தாமதமடையும். பொரு ளாதார அமைப்பு சீராகக் காணப்படமாட்டாது. முயற்சிகள் தாமதமடை யும். குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்களால் பிரச்சனைகள் வரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

**மிதுனம் :**
குடும்பஸ்தான பலன் பெறுவ தால், எடுத்த கருமங்கள் வெற்றி தரும். பிரயாண விடயங்கள் நன்மை தரும். பணவசதி கிடைக்கும். சகோதர வழி உதவி வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 03, 08.

**கடகம் :**
கிரகசார பலன் ஒத்து மாறி இடம் பெயர்வது திடீர் மனக் குழப்பம், தொழில் பிரச்சனை கள் பணக்கஷ்டங்கள் என்றும் ஏற்பட பார்க்கும். திருமண, தொழில் முயற்சிகள் தாமதத்தைக் கொடுக்கும். ஆயிலியப் பெண்கள் நன்மையைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள்: 05, 09.

**சிம்மம்:**
பாக்கிய ஸ்தான கிரக பலன் கூடு வது எடுத்த கருமங்கள் ஒரு முடிவு கொடுக்கும். தூர இடத்துச் செய்தி நன்மைகளைக் கொடுக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய பயணங்கள் அடி கோலும். மகநட்சத்திரம் கொண்டவர்களுக்கு நற் பலன்கள் கூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 05, 09.

**கன்னி :**
கிரகபலன்களின் படி உடலில் நோய்துன்பங்களைக் கொடுக்கும். தாய், தந்தை வழியில் சிக்கல்கள் தோன்றி மறையும். புதிய காதலர்கள் உறவினர்கள் வந்து போவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : மரூண்வர்ணம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 04, 08.

**துலாம் :**
குடும்பவாழ்வை வளப்படுத்திக் கொள்ளும் காலமிது. முயற்சிகள் சிக்கலைக் கொடுக்காது, சுவாதி விசாக நட்சத்திரக்காரர்களுக்கு யோகமான பலன் கள் கிடைக்கும். பண, பொருள் வசதிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 05, 06.

**விருட்சிகம் :**
மறைவுஸ்தான அமைப்பும் நட் சத்திர கிரகயோக கிரக ஒத்து ழைப்பும் நல்ல பலன்களைக் கொடுக்க கூடிய வாறு காணப்படுகின்றன. புதிய தொழில் பண வசதி அமையும். மனைவி வழி கிட்டும். கேட்டை, அனுஷ நட்சத்திரக்காரர்களுக்கு நன்மை உண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 07, 09.

**தனுசு :**
கிரக நிலையால் பணவசதிகள் ஏற்படும். புதிய முயற்சிகள் காரிய சித்தியாகும். தடைப்பட்ட கருமங் கள் கைகூடும். மூல, உத்திராட நட்சத்திர பெண்களுக்கு விவாகம் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 03, 05.

**மகரம் :**
சனி, வியாழன் கிரக வீட்டிற்கு, நன்மை தரும். எடுத்த விடயங்கள் கைகூடும். தூர இட உறவினர்கள் வருவார்கள். மனதில் நம்பிக்கை பிறக்கும். திருமணவாய்ப்புக்கள் தேடிவரும். அவிட்டநட்சத்திரருக்கு நல்ல நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 05, 08.

**கும்பம் :**
மனதில் சிக்கல்கள் காணப்படும். வழக்குப்பிரச்சனைகள் அரசாங்க தலை யீடுகள் காணப்படும். உறவில் விரிசல்கள் ஏற்படும். புரட்டாதி, சதய நட்சத்திரப் பெண் களுக்கு கெடுதிகள் ஏற்படலாம். கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 08.

**மீனம் :**
சனி, வியாழன், சுக்கிரன் பலம் பெறுவதால் பணவசதிகள் ஏற்படும். குடும்பத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும். எதிர்பார்த்த நன்மை கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 06, 10.

# அழகுக் கலையில் லேசர் சிகிச்சை



அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்காத பெண்கள் எவரும் இல்லை. ஆனால் எல்லாராலும் அழகாக ஜொலித்து விடமுடிவதில்லை. அழகுக் கலையில் புதிய முறைதான் லேசர் சிகிச்சை. இது சாதாரண பெண்களை கூடக் கட்டழகுப் பெண்களாக்கி விடுகின்றது.

காலத்தின் கோலத்திற்கேற்ப பெண்களுக்கான அழகுச் சிகிச்சைகளில் கத்தியின்றி இரத்தமின்றி செய்யப்படும் அழகுச் சிகிச்சையான லேசர் கதிர்கள் மூலமான சிகிச்சைகள் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் பிரபலமாகி வருகின்றன.

இச்சிகிச்சை மூலம் பெண்கள் உச்சந் தலை முதல் உள்ளங்கால்கள் வரை எப்படி வேண்டுமானாலும் அழகுபடுத்திக் கொள்ள லாம். இந்த நவீன லேசர் சிகிச்சை முறையில் உள்ள சில வகை முறைகள் இவை:

### ரூபி லேசர்:

பெண்களின் கூந்தல் எந்த நிறமாக இருந்தாலும் இந்தச் சிகிச்சை மூலம் கரு கருவென்று மாற்றி விட முடியும். ஒரு முறை செய்தாலே போதும். தொடர்ந்து கறுப்பாகவே வளரும்.

### ஸ்லெரோ லேசர்:

கை, கால்களில் உள்ள நரம்புத் தசை களை மாற்றி இதன் மூலம் அழகுபடுத்தி விடலாம்.

### கோர்டெக்ஸ் லேசர்:

பெண்களின் உதடுகளைப் பெரிதாக் கியோ அல்லது சிறிதாக்கியோ அழகுபடுத்திக் கொள்ளலாம்.

### போர்டெக்ஸ் லேசர்:

முகம், நெற்றி, கண் போன்ற பகுதிகளில் உள்ள சுருக்கங்களை நீக்கி, முகத்திற்கு முழுமையான புதுப்பொலிவு அளிக்கிறது.

### ருபாட்விஸம் லேசர்:

தேவையற்ற இடுப்பு மற்றும் மடிப்பு சதைகளை நீக்கி கொடி இடையாக மாற்றுகிறது.

### ரிஸர்பேஸிங் லேசர்:

உடலில் எங்கு ஊளைச்சதை இருந்தா லும் அகற்றி விட்டு சருமத்தைப் பளபளப்பாக வைக்கும்.

இப்படி ஏராளமான லேசர் அறுவைச் சிகிச்சை முறையில் இப்போது அமெரிக்கப் பெண்களும், இங்கிலாந்துப் பெண்களும் ஜொலிக்கின்றார்கள்.

இந்த லேசர் சிகிச்சை முறை அனைத்து நாடுகளை நோக்கியும் வெகுவாகப் பரவி வருகிறது.



## கவர்ச்சிகரமான பிளவுஸ்கள்

இது போன்ற கவர்ச்சிகரமான பிள வுஸ்கள் எல்லாம் இப்போது இந்தியாவில் விற்பனைக்கு வந்துள்ளன.

'கேர்ல்ஸ்' என்ற பெண்களுக்கான ஆயத்த ஆடை நிறுவனம் இந்தியாவின் சென்னை, பெங்களூர், மும்பாய் ஆகிய நகரங்களில் அறிமுகப்படுத்தியுள்ளன.

'பேக் லேஸ்ட் டொப்' எனப்படும் இந்த பிளவுஸின் விலை 350 இந்திய ரூபாய். விரைவில் இவற்றை நம்மூர்க் கடைகளிலும் காணலாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** ID

பெயர்:............................

முகவரி:............................

............................

தொழில்:............................

கையொப்பம்:............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-09-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 52 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரனுடைய 51வது பிறந்த நாளான ஆகஸ்ட் பத்தொன்ப தாம் திகதியன்று அவரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்காது என்பதனால் ஆகஸ்ட் 16ம் திகதி யன்று கிடைத்த சந்தர்ப்பத்தை மோனிக்கா பயன்படுத்திக் கொண்டாள். இருப்பினும் இருவருக்குமிடையில் மகிழ்ச்சிகரமான உறவு எதுவும் ஏற்பட முடியாமல் போய்விட்டது.

லிண்டா ட்ரிப் 'நியுஸ் வீக்' எழுத்தாளர் இசிகோ.ஃப்பிடமும் லூஸியானே கோல்ட் பேர்க் என்பவரிடமும் மோனிக்காவைப்பற்றி சொல்லியிருந்தாள். கிளின்ரனுடன் தொடர் புடைய ஒரிள மங்கை என்று கூறியிருந் தாளே யொழிய மோனிக்காவின் பெயரைக் குறிப்பிடவில்லை.

கிளின்ரன் சில சந்தர்ப்பங்களில் போதை மருந்து பாவிப்பதைப்பற்றி மோனிக்காவிடம் கூறியிருந்தார். அதனையும் லிண்டா ட்ரிப் பிடம் மோனிக்கா சொன்னாள்.

லிண்டா ட்ரிப் கோல்ட் பேர்க்கிடம் கிளின்ரன் பற்றிக் குறிப்பிட்ட தகவல்களை யெல்லாம் கோல்ட் பேர்க் லிண்டாவுக்குத் தெரியாமலே ஒலிப்பதிவு செய்து கொண்டாள்.

ஜனாதிபதி கிளின்ரனைப் பற்றி பல அந்தரங்கமான விசயங்களை உள்ளடக்கிய ஒரு நூலை தான் எழுதப் போவதாக லிண்டா கோல்ட் பேர்க்கிடம் கூறியிருந்தாள். தான் நூல் வெளியிடப் போவது தொடர்பாக மோனிக்காவிடம் கூட லிண்டா கூறியிருந் தாள். ஆனால் அதில் மோனிக்காவின் பெயரை தான் இழுக்கப் போவதில்லை என் றும் வாக்குறுதி அளித்திருந்தாள்.

லிண்டா தான் எழுதப் போகும் நூலுக்கு முன்னோடியாக 'நியுஸ் வீக்' பத்திரிகையில் இசிகோ.ஃப்பிடம் கூறிய சில சமாச்சாரங் களைக் கொண்ட தகவல்களை வெளியிட

## தவிப்பும் தடுமாற்றமும்



வேண்டுமென்று கருதியிருந்தாள்.

லிண்டா, இசிகோ.ஃப் மற்றும் கோல்ட் பேர்க் ஆகியோரை கோல்ட் பேர்க்கின் வாஷிங்டன் இல்லத்தில் சந்தித்தாள். அன் றைய தினம் தன்னுடன் எடுத்து வந்திருந்த ஒலிப்பதிவு நாடாக்கள் இரண்டை இசி கோ.ஃப்புக்குப் போட்டுக் காட்டினாள். அதில் கிளின்ரனுடன் மோனிக்கா உரையாடுவது தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இசிகோ.ஃப்பும் கோல்ட் பேர்க்கும் எவ் வளவோ தெண்டித்தும் கிளின்ரனுடன் உரை யாடுவது யார் என்ற உண்மையை லிண்டா வெளியிடவில்லை.

இந்த ஒலிப்பதிவினைக் கேட்ட இசி கோ.ஃப் "வெறுமனே காதல் உரையாடல்களை மட்டும் கொண்ட ஒரு வடிவத்தை எங்கள் பத்திரிகை பிரசுரிக்கப் போவதில்லை. ஆகவே தெளிவான தகவல்களைக் கொண்ட ஒரு கதையாக வடிவமைக்கப்பட வேண்டும். முழுவிபரங்களையும் திரட்டித் தந்தால் மட் டுமே! அவற்றை பரபரப்பூட்டும் ஒரு கட்டு ரையாக என்னால் எழுத முடியும். நீர் தந்த இரு ஒலிப்பதிவுகளிலும் எதுவுமில்லை. ஆகவே மேலும் பல தகவல்களை எடுத்து என்னிடம் தாரும்!" என்று கூறினாள்.

இச்சம்பவம் நடைபெற்று 3 நாட்களின் பின்னர், லிண்டா மோனிக்காவுடன் தொடர்பு கொண்டாள். வெள்ளை மாளிகை பாதுகாப் புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தன்னிடம் கூறியதாக ஒரு தகவலைச் சொன்னாள். இதனால் மோனிக்கா பைத்தியம் பிடித்தவள் போலானாள். வெள்ளைமாளிகையில் எக்கார ணம் கொண்டும் மோனிக்காவுக்கு ஒரு வேலை கிடைக்கப் போவதில்லை என்று தனக்குக் கூறப்பட்டதாக சொன்னாள்.

குறிப்பிட்ட ஒரு ஆவணத்தில் மோனிக்கா வின் பெயருக்கு கறுப்புப்புள்ளி வைக்கப் பட்டிருப்பதாக லிண்டா கூறினாள்.

இந்தக்கதை ஒரு கட்டுக்கதை என்பதை மோனிக்கா அறியமாட்டாள். இவ்வளவு காலமும் தான் நெருக்கமாகப் பழகிய ஒரு சிநேகிதிக்குத்துரோகம் புரிகிறோமே என்று கூடக் கருதாமல் மோனிக்காவை நிலை குலையச் செய்வதற்கேற்ற பொய்யைக் கூறி னாள்.

அன்று பெண்டகனில் மோனிக்கா பணி யிலியிருந்தபோதே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு லிண்டா இந்தக் கதை யைக் கூறினாள். இதனைக் கேட்டது முதல் மோனிக்காவால் அலுவலகத்திலிருந்து பணி புரிய முடியவில்லை. தனது மேசையிலிருந்து எழுந்து, ஊழியர்களுக்கான ஓய்வு அறையில் இருந்து அழுது தீர்த்தாள். தொடர்ந்தும், அங்கிருக்கப்பிடிக்கா ததனால் வெளியேறி, தனது காரைக் கூட எடுக்காமல், ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். உணவு எது வும் உட்கொள்ளாமல் அழுது தீர்த்தாள்.

வெள்ளை மாளிகை யில் பயிற்சி நிலைப் பணி யாளராக அவள் சேர்ந்த போதே கிளின்ரனைப் பற்றி பலரும் பலவிதமான கதைகள் பேசுவதைக் கேட்டிருக்கிறாள். 'தான் ஆசை வைத்த பெண் களுக்கு அதிகமான வருமானம் கிடைக்கக் கூடிய வேலைகளை கிளின்டன், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி எடுத்துக் கொடுப்பார்' என்று பலமான வதந்திகள் அடிபட்டன.

இப்பொழுது மோனிக்கா அந்தக் கதை யை நினைத்துப் பார்த்தாள். 'சாதாரணமாக தான் ஆசை வைத்த அழகிகளுக்கு இவ்வாறு தொழில்களைச் சிபாரிசு செய்யும் ஜனாதி பதி, அவரை உயிருக்கும் மேலாக நேசித்த எனக்கு ஏன் ஒரு சிறு வேலையையாவது பெற்றுத் தர முடியவில்லை?' என்று குமுறி னாள்.

லிண்டா தான் எழுத நினைத்திருக்கும் நூலில் கிளின்ரனை அபகீர்த்தி ஏற்படுத்தக் கூடிய அத்தனை அம்சங்களையும் இணைக்க எண்ணினாள். அந்த வேளையில் மோனிக்கா வைப்பற்றியும் எழுதநேர்ந்தால், அது கிளின்ரன் மீது பழி தீர்க்கத்தான் என்று மோனிக்கா கருதுவாள், என்றே லிண்டா இத்தகைய பொய்க்கதையை வேண்டு மென்றே கூறி வைத்தாள்.

லிண்டாவின் நோக்கத்தைப்பற்றி ஏற்கனவே அறிந்து கொண்ட கோல்ட்பேர்க், "அந்தப் பெண்ணை உன்னுடைய கதையில் இழுத்து எழுதினால் உன்னுடைய சிநேகிதி என்று கூறும் அந்த இளம் பெண்ணின் வாழ்க்கையையே நாசமாக்கி விடுவாய். உன்னு டைய அருமையான சிநேகிதியை நீ இழக்கத் தீர்மானித்து விட்டாயா?" என்று கேட்டார். இதற்கு பதில் கூறிய லிண்டா ட்ரிப் "ஆமாம் நான் எதற்கும் ஆயத்தமாகிவிட்டேன். என்னு டைய நூலில் நான் சகலவற்றையும் தெளி வாக விவரிக்கப் போகிறேன்!" என்று திடமா கக் கூறினாள்.

வேர்ணன் ஜோர்டான் என்ற வழக்கறி ஞரை 1997 நவம்பர் 5ம் திகதியன்று வாஷிங் டனில் வைத்து மோனிக்கா சந்தித்தாள். அவர் நியூயோர்க் நகரில் பல நிறுவனங்களில் பங்குதாரராக இருந்தார். பல வர்த்தக நிறு வனங்களின் தலைவராகவும் விளங்கினார். வெள்ளை மாளிகையில் தனக்கான ஒரு வேலை கிடைப்பதில் இடையூறுகள் இருப் பதனால் நியூயோர்க் நகர் சென்று ஒரு வேலையைத் தேடுவதென மோனிக்கா கருதி னாள். தன்னுடைய முடிவையிட்டு லிண்டா ட்ரிப்பிடம் தொலைசபேசி மூலம் தொடர்பு கொண்டு சொன்னாள். இருப்பினும் கடை சித் தடவையாக கிளின்ரனைக் கண்டு இரு கேள்விகளை அவரிடம் கேட்கப் போவதாக லிண்டாவிடம் கூறினாள்.

மோனிக்கா கிளின்ரனிடம் கேட்க விருந்த முதல் கேள்வி- 'இத்தனைக்காலமும் அவர் தன்னுடன் நடந்து கொண்ட முறைகேடான நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக்கோர வேண் டும் அடுத்ததாக-பெண்டகன் தவிர்ந்த வேறொரு அரசாங்கத்திணைக்களத் தில் தனக்கொரு வேலை ஏற்பாடு செய்து தர வேண்டும்' என்ற கேள்விகளையே மோனிக்கா கிளின்ரனிடம் கேட்கப் போவதாகக் கூறி னாள்.

தொலைபேசி மூலமான லிண்டாவுட னான இந்த உரையாடலும் லிண்டாவினால் ஒலிப்பதிவு செய்யப்படுகிறது என்ற உண் மையை அறியாமல், அவதூறான வார்த்தை களால் கிளின்ரனை அர்ச்சித்தாள். இறுதியாக "நான் எக்காலத்திலாவது, எந்த ஆணுடனாவது தொடர்பு வைத்தால் அவன் ஜனாதிபதியாக இருந்தால், ஏற்கனவே மணமுடித்தவனாக இருந்தாலும் அவனை நான் விரும்பமாட்டேன். அவ்வாறு நான் செய்து கொண்டால் 'என்னை நீயே சுட்டுக்கொன்று விடு!' என்று சொன்னாள்.

அன்றைய தினமே பெட்டிகியூரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் ஜனாதிபதியை அன்று நிச்சயமாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கூறினாள். துரதிஷ்ட வசமாக அன்று கிளின்ரன் தனியாக இல்லை. இஸ்ரேல் நாட்டு அதிபர் அன்று வெள்ளை மாளிகைக்கு வந்திருந்தார். அவருக்கு இராப்போசன விருந்து அளிக்கப்படுவதனால் கிளின்ரன் தனிமையிலிருக்க முடியவில்லை. அங்கு பல தரப்பட்ட அதிகாரிகள் நிறைந்திருந்தனர்.

பெட்டிகியூரி மோனிக்காவுக்கு கிளின் டனின் நிலைமையை விளக்கிக் கூறினார். இதிலும் அவள் பலத்த ஏமாற்றமடைந்தாள்.

(வரு வாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## நல்லூர் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி.க.ஆனந்தி, 521/12, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



# பாப்பா முரசு சிறுகதை

# அரசரும் அமைச்சர்களும்

ஒரு முறை பிரெஞ்சு மன்னரைச் சந்திக்க ஸ்பெயின் நாட்டுத் தூதர் ஒருவர் வந்திருந்தார். இருவரும் அரசாங்க அலுவல்கள் சம்பந்தமாக உரையாடினர். பிறகு விருந்து உண்டு முடித்தனர்.

"உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும் உங்களது அமைச்சர்களைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்களைப் பற்றிச் சொல்லுங்கள்?" என்றார் ஸ்பெயின் நாட்டுத் தூதர்.

"நான் அவர்களைப் பற்றிச் சொல்வதை விட அவர்களது குணநலன்கள் என்ன என்பதை உங்களுக்கு நேரிலேயே விளக்குகிறேன். அப்போதுதான் நன்றாக இருக்கும்." என்றார் மன்னர்.

மறுநாள்-

அரசரும், ஸ்பெயின் நாட்டுத் தூதரும் அரசவைக்கு வந்தனர்.

"இப்போது என் மூன்று அமைச்சர்களிடமும் நான் ஒரு கேள்வி கேட்பேன். அதை வைத்து அவர்கள் குணத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்!" என்றார் அரசர்.

முதலாம் அமைச்சரை அழைத்து, "அமைச்சரே என் தலைக்கு மேலே உள்ள பலகையைப் பாருங்கள். அந்தப் பழைய பலகை செல்லரித்து விட்டது. எப்போது விழுமோ தெரியவில்லை." என்றார்.

"நீங்கள் நினைப்பது போல இருந்தாலும் இருக்கலாம் அரசே. இருப்பினும் கட்டடக் கலைஞரை அழைத்து வந்து சோதிக்கிறேன். தேவையானால் மாற்றுவோம். ஆனாலும், இப்போது இதற்கு அவசரம் ஒன்றும் இல்லை அரசே!" என்றார்.

அவர் போன பிறகு இரண்டாம் அமைச்சரை அழைத்தார் அரசர். அவரிடமும் அந்தப் பலகையைப் பற்றிக் கூறினார்.

அந்த அமைச்சரோ அந்தப் பலகையை அண்ணாந்து கூட பார்க்கவில்லை. அதற்குள் "ஆம் அரசே! நீங்கள் சொன்னது சரிதான். அந்தப் பலகையை மாற்றி விடுவோம்," என்றார்.

மூன்றாவது அமைச்சரை அழைத்து அவரிடமும் அதே போலச் சொன்னார். அதற்கு அந்த அமைச்சர், "அரசே! பலகை நன்றாகத்தான் உள்ளது. குறை ஏதும் இல்லை," என்றார்.


"அமைச்சரே! நன்றாகப் பாருங்கள். பலகையில் வெடிப்பு தெரியவில்லையா. என் தலையில் விழுந்து விடப் போகிறது!" என்றார்.

"அரசே! கவலையே வேண்டாம். அந்தப் பலகைகள் உங்கள் பேரன் காலம் வரை அப்படியே இருக்கும். கீழே விழாது," என்று சொல்லிவிட்டுச் சென்றார்.


அப்போது தூதரைப் பார்த்தார் அரசர்.

"என் அமைச்சர்களின் குணநலன்கள் பற்றி உங்களுக்கு இப்போது தெரிந்திருக்குமே. முதலாமவர் எதிலுமே மாட்டிக் கொள்ள மாட்டார்; இரண்டாமவர் நான் என்ன சொன்னாலும் சரி என்று சொல்பவர். மூன்றாமவர் தான் நினைப்பதை மறைக்காமல் கூறுவார். இதில் மூன்றாமவரே நான் விரும்பும் அமைச்சர்," என்றார் அரசர்.

அரசரின் நுண்ணறிவைக் கண்டு வியந்தார் தூதர்.



விண்கலத்தில் தனியாக உட்கார்ந்து ஆகாயத்தைச் சுற்றும் இந்த விண்வெளி வீரர், பூமியில் இறங்க வழிதெரியாமல் தடுமாறுகிறார். அவருக்கு நீங்கள் வழிகாட்டி உதவுங்கள்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **09.09.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **358**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 356

**பரிசுக்குரியவர்:**
ச.பிரமிளா,
தம்பட்டை-02, தம்பிலுவில்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ந.காண்டீபன், கா/பாத்திமா தேசிய பாடசாலை,கல்முனை-03. | எம்.டீ.எம்.யூனுஸ், மட்/ம.ம.வித்தியாலயம், காத்தான்குடி-03. |
| லோ.நிலாணி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி. | கோ.வினேஸ்வரன், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா. |
| சி.ஷகிராம், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. | பே.தினேஸ்குமார், அக்/கோ/வி/மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| ச.ஜனார்த்தனி, வ/இ/மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | கு.விஷ்ணுகாந்த், மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| ரா.ப.முனீஸ், தி/கிண்ணியா மத்திய கல்லூரி, கிண்ணியா. | கே.பிரியதர்சினி, பு/சிசிலியா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. |

## மிகப் பெரிய விபத்து



உலகிலேயே கப்பல் விபத்துக்களில் இன்றளவும் பரபரப்பாகப் பேசப்படுவது 'டைட்டானிக்' கப்பல் விபத்துத்தான்.

பெல் பாஸ்ட் நகரில் 1911ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்தப் பிரமாண்டமான கப்பல் இங்கிலாந்தின் செளத்தாம்டனிலிருந்து அமெரிக்காவின் நியூயோர்க்கிற்குத் தனது முதல் பயணத்தைத் தொடங்கியது.

நீரில் மூழ்காத உறுதியான கப்பல் என்று வர்ணிக்கப்பட்ட இக்கப்பலின் முதல் பயணமே தோல்வியில் முடிந்து விட்டது. அப்போது இக்கப்பலில் சுமார் 2207பேர் இருந்தனர்.

முதலில் ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள செர்போர்க் நகரை நோக்கிப் பயணித்த இக்கப்பல் பின்பு அயர்லாந்திலுள்ள குயின்ஸ் நகருக்குச் சென்றது. பின் அங்கிருந்து புறப்பட்டு அட்லாண்டிக் கடலில் பயணித்த போது பனிப்பாறையில் மோதிக் கடலில் மூழ்கியது.

இந்தக் கப்பல் விபத்தில் ஆபத்துகால அவசர உதவிப் படகு மூலம் 705 பேர் உயிர்த் தப்பினார்கள். மற்ற அனைவரும் இறந்துவிட்டனர்.

## செய்து பாருங்கள்

**தேவையான பொருட்கள் :**


கனமான கடதாசி அட்டை 5x15 சென்டிமீட்டர் அளவில், கத்தரிக்கோல், பசை.

**செய்முறை :**

★ கடதாசி அட்டையை 3 சம பாகங்களாகப் பிரித்து, படத்தில் உள்ளது போல், முறிந்த கோடிட்ட இடங்களை மட்டும் வெட்டிக் கொள்ளவும்.

★ பின் 2ம் படத்தில் உள்ளது போல் அவைகளை மடித்து உட்புறமாகப் பசைபோட்டு ஒட்டுங்கள்.

★ இப்போது பொம்மை டீப்போ தயார்.





**விறு விறு தொடர்**

**11**

"சரி சார்!" என்று சரவணன் சற்றே யோசித்துப் பார்த்துக் கொண்டு, "மொதல்ல அந்த பொண்ணுதான் 'யோவ்! உன்னால எனக்கு ஏகப்பட்ட டென்ஷன் தெரியுமா?'ன்னு ஆரம்பிச்சிச்சி! அதுக்கு அவரு 'ஏய்! யார் பேசறது'ன்னு கோபமா கேட்டார். 'அன்னைக்கு உன்னைக் கேக்காம ஃபோட்டோ எடுத்துட்டதுக்கா ரொம்ப தான் சிலிர்த்துக்கிட்டு என் ஃபிலிம்ரோலை எக்ஸ்போஸ் பண்ணினியே. எவ்வளவு திமிர் இருக்கணும் உனக்கு?' ன்று கேட்டுச்சி!"

"அதுக்கு ரஞ்சித் என்ன சொன்னான்?"

"ஓ! அந்தப் பொண்ணா நீ? இத பாரு, மரியாதை இல்லாமல் பேசாதே! நீ பத்திரிகைக்காரியா இருந்தா எனக்கென்ன? கன்னம் சிவக்கற மாதிரி ரெண்டு அறை விடாமப்



போனேன்னு நினைச்சு சந்தோசப்படு'ன்னார்."

"அப்புறம்?"

"நீ என்னை அறைஞ்சிடுவியா'ன்னு கேட்டா அவ. 'ஏன் நீ என்ன ஜாக்கிசான் தங்கச்சியா'ன்னு கேட்டாரு இவரு. 'என்பவர் புரியாம பேசிட்டே, நீ ஆம்பளையா இருந்தா காலைல ஒம்போது மணிக்கு உன் ரூம்ல வெய்ட் பண்ணு, நான் வர்றேன், அப்போ என்னை புரிஞ்சுக்குவேன்னுச்சி."

"ம்?"

"அது எதுக்கு நாளைக்கு வரணும், இப்பவே வந்தாக்கூட நான் ஆம்பளைன்னு நிரூபிக்கிறேன்' னு இவர் சொல்ல, அந்த பொண்ணு 'இடியட் அது இதுன்னு திட்டிபுட்டு லொடாக்குன்னு கட் பண்ணிடுச்சி."

அவன் சொன்னதை எல்லாம் சரசரவென்று குறிப்புகளாக எழுதிக் கொண்டிருந்த சுசீலா நிமிர்ந்தாள்.

"பரத், யாரோ ஒரு ஜர்னலிஸ்ட் பொண்ணை ஃபிலிம் ரோல் எக்ஸ்போஸ் பண்ணி கலாட்டா பண்ணியிருக்கான் ரஞ்சித்!" என்றாள்.

"ஜர்னலிஸ்ட்டோட பொண்ணை இல்லை, பொம்பளை ஜர்னலிஸ்ட்டை!"

"அய்யோ! அறுக்க இதுவா நேரம்?"

பரத் யோசிக்க... நியூட்டன் இங்கே இருந்தே கோவை போலீசை தொடர்பு கொண்டு ஹோட்டலில் ரஞ்சித் கொடுத்த விலாசத்தைக் கொடுத்து, அதை சரி பார்த்து, அந்த ரஞ்சித் இப்போது சென்னையில் எங்கெங்கே இருக்க வாய்ப்பிருக்கிறது என்று விசாரித்து தகவல் கொடுக்கச் சொன்னார்.

பரத்தின் சிந்தனையை ஆட்டோ டிரைவர் ஞானமணி கலைத்தான்.

"இடம் காமிச்சிட்டேன். நான் கிளம்பட்டா?"

"கொஞ்சம் இருப்பா!" என்றவன் சரவணனிடம், "இந்த ஹோட்டல்ல பிரஸ் மீட் ஏதாச்சும் இன்னிக்கி நடந்ததா?" என்றான்.

"இல்லையே சார்!"

"யாராச்சும் வி.ஐ.பி. தங்கியிருக்காங்களா?"

"இப்ப இல்லை. நேத்து வந்து தங்கிட்டு நைட்டு ஒன்போது மணிக்கு ஒரு வி.ஐ.பி. புறப்பட்டுட்டார்."

"யார் அது?"

"ரவீந்தரதாஸ்னு ஒரு மலையாள எழுத்தாளர்."

"அவரை இன்டர்வியூ பண்ண யாராச்சும் பத்திரிகைக்காரப் பொண்ணு இங்கே வந்ததா? தெரியுமா?"

"எனக்கு தெரிஞ்சியாரும் வரல்லையே சார்!."

"என்னைக் கேளு சார், நான் சொல்றேன்," என்றான் ஞானமணி.

"நீ என்ன சொல்லப் போறே?"

"அந்த தாடி வைச்ச தாத்தாவை கல்யாண மண்டபத்திலேர்ந்து இந்த ஹோட்டலுக்கு சவாரி அடிச்சனா... அம்பது ரூபா தர்றதுக்கு ஐநூறு ரூபா நோட்டை எடுத்தாரு சார் தாத்தா. அப்போ அவருக்கு எல்ப் பண்ணுச்சே நீ கேக்கற பத்திரிகை பொண்ணு!"

"யாரைக் சொல்றே? என்ன ஹெல்ப்?"

"அந்த ஐநூறு ரூபாய்க்கு சில்லறை தந்துச்சே! தாத்தாவுக்கும் அதுக்கும் நல்ல பழக்கம், போலக்கீது. 'எப்படி இருக்கே ஞானமணி'ன்னு என்னாண்டை சொகம் விசாரிச்சிட்டு தாத்தாவோட பேசிக்கினே உள்ளே பூட்ச்சே அது!"

"அது அதுன்னா யாரு?"

"அதான் பத்திரிகைப் பொண்ணு."

"பேரு கிடையாதா?"

"அது யாருக்குத் தெரியும்? நம்மளைப் பத்தி சூப்பரா ஒரு மேட்டரு அதோட பத்திரிகைல போட்டுச்சே! அந்த மருவாதிக்கு கண்டுகிறேன் அவ்ளதான்."

"எந்த பத்திரிகைல உன்னைப் பத்தி மேட்டர் வந்துச்சி?"

"அலோ இந்தியா தெரியாது? அதுல! இங்கிலீஷு பத்திரிகையில பூட்ச்சி, யார் கைல சொன்னாலும் நம்பமாட்டேங்கறாங்கோ. அது என்னா மேட்டருன்னா... ஒரு தபா ஒரு வழுக்கை மண்டை பெட்டிக்குளே பதினைஞ்சு லட்சம் வெச்சி சூட்கேஸை ஆட்டோவில் வெச்சிட்டு ஞாபகமா குடையை மட்டும் எடுத்துக்கினு எறங்கிப் பூட்ச்சி, அப்பாலே பாத்தா ஷாக்கு! நமக்கு இன்னாத்துக்கு இன்னொர்த்தன் துட்டு? ஒட்டுமன்றே பொறுப்பா அந்தாளு இறங்கிப் போன 'அலோ இந்தியா' பத்திரிகை ஆபீசுக்குப் போய்ரிட்டன் செஞ்சேன். நான் இன்னாமோ இராணுவத்துல எதிரி விமானம் சுட்டுட்ட மாதிரி அந்தப் பொண்ணு என்னை ஃபோட்டோ பிடிச்சி புஸ்தவத்திலே எழுதிடுச்சி."

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

"அந்தப் பொண்ணுதான் நீ இறக்கி விட்ட தாத்தா கிட்ட சகஜமா பேசிக்கிட்டு உள்ளே போச்சா?"

"அ...ஆங்!" என்றான் ஞானமணி.

"பரத், இந்த விவகாரத்துல ரஞ்சித்துக்கு யாரோ துணையாக இருந்திருக்காங்க. ஃபோன்ல திட்டின பத்திரிகைக்காரியும், சகஜமா சிரிச்சுப் பேசிக்கிட்டு சேர்ந்து போன பத்திரிகைக்காரியும் ஒரே ஆளா? கொஞ்சம் குழப்பலை?" என்றார் நியூட்டன்.

"நீங்க இங்கே ஃபர்தரா ரஞ்சித் எங்கே போயிருக்க முடியும்னு விசாரியுங்க சார். அவன் தங்கின ரூமுக்கு உண்டான பெல்பாஸ் கேட்டு விசாரிங்க. நாங்க ஹலோ இந்தியா பத்திரிகை ஆபீசுக்குப் போயிட்டு வந்துடறோம்!" என்றான் பரத்.

"சார், நானும் வரணுமா?" என்றான் ஞானமணி.

சற்றே யோசித்த பரத், "ஆமாம்ப்பா, வா. வாசல்லயே இரு, நான் இந்த ஹோட்டலுக்கு வரவே இல்லையென்று இந்தப் பொண்ணு சொன்னா உன்னைக் கூப்புட்டு அவளுக்கு ஷாக் கொடுக்கலாம்!" என்றான்.

புறப்பட்ட போது பரத்தின் செல் ஃபோன் ஒலித்தது.

ஒலித்த செல் ஃபோனில் பரத் பேசினான், "ஹலோ!"

"பரத், நான் விஷால் பேசறேன்."

"சொல்லு விஷால்!"

"நீதான் சொல்லணும். அவனை அரெஸ்ட் செஞ்சாச்சா?"

"இல்லை விஷால். அவனைத் தேடறதை எப்படியோ அவன் ஸ்மெல் பண்ணிட்டான். சாமர்த்தியமா ஹோட்டலை விட்டு தப்பிச்சுட்டான்."

"அடடா!"

"டோன்ட் வொர்ரி. புதுசா சில தகவல்கள் கிடைச்சிருக்கு. இன்ஸ்பெக்டர் நியூட்டன் வந்திருக்கார். அவர் தீவிரமா விசாரணையில இறங்கியிருக்கார்."

"என்னபரத் இது, மறுபடி டென்ஷனாயிடுச்சே!"

"விஷால், அவன் தனியா இயங்கலைன்றவரைக்கும், கிளியராத் தெரியுது."

"அப்படின்னா?"

"அவனுக்கு யாரோ உதவி செய்றாங்க. அவனை அரெஸ்ட் பண்றதுக்காக ஹோட்டலுக்கு வர்ற விஷயம் அவனுக்கு ஃபோன்ல சொல்லப்பட்டிருக்கு."

"யார் சொன்னது?"

"மில்லியன் டாலர் கேள்விகள்ல ஒண்ணு! விஷால், நான் ஒண்ணு கேப்பேன். நீ மறைக்காம பதில் சொல்லணும், சொல்வியா?"

"என்ன பரத்?"

"ஆகாஷ் தீபிகாவை மனசார காதலிச்சான்.ரைட்?"

"யா!"

"உங்கப்பா இந்தக் காதலுக்கு உடனே சம்மதம் சொல்லிட்டாரா?"

"அது..."

"கமான் விஷால், மறைக்காம சொல்லு!"

"பரத், உனக்கு எங்க ஸ்டேட்டஸ் தெரியும். எங்களுக்கு இருக்கிற சொத்துக்கள் எவ்வளவுன்னு நல்லாத் தெரியும். தீபிகா ஒரு ஹோட்டல் பொக்கே கடையில வேலை பார்த்தவங்க. எல்லா அப்பாக்களை மாதிரி எங்கப்பாவும் எதிர்க்கத்தான் செஞ்சார்."

"எதிர்க்கறதுன்னா எப்படி?"

"ஆஸ் யூஷுவல் தான், கோபமா கத்தினார். அண்ணனோட பேசாம இருந்தார். வீட்டை விட்டு வெளில போக வேண்டியதா இருக்கும்னு மிரட்டினார்."

"கடைசில எப்படி பணிஞ்சார்?"

"தற்கொலை மிரட்டல்னு, ஆகாஷ் பதிலடி கொடுத்தான். அங்கே விழுந்துட்டார். 'சரி, உன் இஷ்டம்'னு சொல்லிட்டார். ஏன் திடீர்னு இதைப் பத்திக் கேக்கறே?"

"சும்மாதான். ஆக... இந்த நிமிஷம் வரைக்கும் உங்கப்பாவுக்கு இந்தக் கல்யாணத்தில பரிபூரண சம்மதம் இல்லை. அப்படித்தானே?"

"முதல்லதான் எதிர்த்தாரே ஒழிய... எப்போ சம்மதம் தெரிவிச்சாரோ அதுக்கப்புறம் இந்தக் கல்யாணத்தை எவ்வளவு கிராண்டா நடத்தறதுன்னு பிளான்ல இறங்கிட்டார். என்ன பரத் இது... என் அப்பாவையே சந்தேகப்படறியா?"

"அப்படி இல்லை..."

"நோ! நீ கேக்கற தொனியைப் பார்த்தா அவரை சந்தேகப் படற மாதிரிதான் தெரியுது. தப்பு! உன் சந்தேகம் தப்பு!"

"எப்படிச் சொல்றே?"

"என்ன உன் சந்தேகம்?"

"ஏன் உங்கப்பாவே இந்த ரஞ்சித்தை செட்டப் செஞ்சிருக்கக் கூடாது?"

"தீபிகா வாழ்க்கையில ரஞ்சித்னு ஒரு காதலன் இருந்தான்னு அவருக்கு எப்படித் தெரியும்?"

"தன் பையன் காலிக்கிற தீபிகாவைப் பத்தின முழுத் தகவல்கள் வேணும்னு எங்களை மாதிரி பிரைவேட் ஏஜென்சிஸ்ல கேட்டா..... ஜாதகம் வரைக்கும் கொண்டாந்து தருவாங்க!"

"ரைட்! அப்படியே தெரிஞ்சுக்கிட்டு? எங்கண்ணனை கொலை செய்யச் சொல்வாரா? சொந்தப் பிள்ளையை யாராச்சும்...."

"வெயிட்! இப்ப கொலையா நடந்திடுச்சு? ஒரு மிரட்டல் தானே? இந்த மிரட்டலுக்கு பயந்து கல்யாணத்தை நிறுத்த நினைத்திருக்கலாமே? தீபிகாவுக்கு ஒரு காதலன் இருந்தான்ற தகவல் ஆகாஷுக்கு தெரிய வர்றப்போ அவன் அந்தக் காரணத்தாலயும் கல்யாணத்தை நிறுத்த நினைக்கலாமே!"

"ஆனா ஆகாஷுக்கு அந்தத் தகவல் ஏற்கனவே தெரியும். அவன் அதை பெருந்தன்மையா அலட்சியப் படுத்திட்டான்."

"ஓகே, ஓகே, இதோ பார் விஷால், ஒரு யூகமா தான் சொன்னேன். உங்கப்பாவை அநாவசியமா நான் ஏன் சந்தேகப் படணும். இந்த நிமிஷம் வரைக்கும் இப்படி ஒரு மிரட்டல் மேட்டர் வந்து ரஞ்சித்தைக் கண்டு பிடிக்கப் போராடிக்கிட்டிருக்கிற விஷயம் உங்கப்பாவுக்குத் தெரியாது தானே?"

"தெரியாது பரத்."

"தெரியாமலே மறைச்சிட முடியாது. நீ ஒண்ணு செய். அவரைப் போய்ப் பாரு. இப்ப எங்கே இருக்காரு அவரு?"

"இதே மண்டபத்திலதான் ஒரு ரூம்ல தூங்கிட்டு இருக்காரு."

"பரவாயில்லை, எழுப்பு. எல்லா விஷயத்தையும் சொல்லு. அவர் என்ன சொல்றார்னு எனக்குச் சொல்லு. நாங்க 'ஹலோ இந்தியா' பத்திரிகை ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு மண்டபத்துக்கு வந்துடறோம்."

(தொடர்ந்து வரும்)

# மறுபக்கம்

**04**

## எம்.ஆர்.ராதா

*சிறிய வயதிலேயே எம்.ஆர்.ராதாவிடம் ஒப்பனைக் கலைஞராக ('மேக்-அப் மன்') பணியாற்றியவர் கஜபதி. எம்.ஆர்.ராதாவின் மறைவிற்குப் பின் அவரது மகன் ராதாரவிற்கும் ராதாவின் பேரன் வாசு விக்ரமிக்கும் (இவர் எம்.ஆர். ஆர்.வாசுவின் மகன்) ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றி வருகிறார்.*

*எம்.ஆர்.ராதாவுடன் பணியாற்றிய காலத்தில் அவரிடம் கண்ட-கேட்ட விஷயங்களை சில வருடங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகை ஒன்றின் வார இணைப்பில் பகிர்ந்திருந்தார். அவற்றில் இருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.*



'இருவர் உள்ளம்'படத்தில் நடந்த இன்னொரு சம்பவம்.

ஒரு நாள் ராதா என்னைக் கூப்பிட்டு, "இந்தப் படத்துக்கு ரொம்ப அதிகமா வேலை செஞ்சிருக்கோம். அதனால, ஒரு இருபதாயிரம் ரூபாய் 'எக்ஸ்ட்ரா'வா பிரசாத்கிட்டே கேளு," என்றார் ராதா.

நானும் கேட்டேன்.

பிரசாத் அதற்கு, "ராதாவுக்கு இருபதாயிரம் அல்ல; இரண்டு லட்ச ரூபாய் கூட அதிகமாக குடுக்கலாம். ஆனால், அவருக்கு பேசிய, தொகை என்னவோ அதைக் கொடுத்து விட்டேன். இன்னும் இரண்டு நாள் படப்பிடிப்பு இருக்கும் போது மேலும் கேட்கிறீங்கள். இன்றைக்கு நான் கொடுத்து விட்டால், நாளைக்கு இன்னும் ஒரு இருபதாயிரம் கேட்பீர்கள். நான் கொடுக்க முடியுமா? அதனாலே, இன்னும் இரண்டு நாள் படப்பிடிப்பும் முடியட்டும். அதன் பிறகு நீங்கள் கேட்கிற இருபதாயிரம் ரூபாயைத் தருகிறேன்," என்றார் பிரசாத்.

அதை அப்படியே ராதாவிடம் சொன்னேன்; கேட்டுக் கொண்டார்.

அடுத்த இரண்டுநாள் படப்பிடிப்பும் முடிவடைந்தது.

எல்.வி.பிரசாத் சொன்ன மாதிரியே இருபதாயிரம் ரூபாயைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். அதை ராதாவிடம் கொடுத்தேன்.

ராதா அந்தப் பணத்தை என்ன செய்தார் தெரியுமா?

படத்தில் நடிப்பதற்கு ராதா கேட்ட அதிகத் தொகையை படப்பிடிப்பு முடிந்தபின் கொடுத்தார் தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத்.

அந்தப் பணத்தை உதவியாளர் மூலம் பெற்றுக் கொண்ட ராதா, நேராக எல்.வி. பிரசாத் இருந்த ரூமுக்கு போனார்.

"நான் உங்கள் படத்திற்கு பேசிய பணத்தை முன்பே கொடுத்து விட்டீர்கள். இருந்தும் நான் அதிகமாக இருபதாயிரம் கேட்டபோது, அதையும் கொடுத்துவிட்டீர்கள். ஆனால் உடனே கொடுக்காமல், படம் முடிந்த பிறகு தான் தருவேன் என்று சொல்லி, இப்போது கொடுத்திருக்கிறீர்கள். நான் அதிகமாக உழைத்ததற்கு அதிக பணம் கேட்டதும் நியாயம்தான். தயாரிப்பாளர் என்ற முறையில் நீங்களும், 'பேசிய பணத்தை முன்பே கொடுத்து விட்டேன்; மேற்கொண்டு தருவதானால் படம் முடிந்த பிறகு தான் தருவேன்,' என்று நீங்கள் சொன்னதும் நியாயம் தான். இந்தப் பணம் எனக்கு வேண்டாம். வைத்துக் கொள்ளுங்கள்," என்று திருப்பிக் கொடுத்துவிட்டார்.

எல்.வி.பிரசாத் எவ்வளவோ கட்டாயப் படுத்தியும், ராதா அதை வாங்க மறுத்து விட்டார்.

'நல்லவன் வாழ்வான்' என்றொரு படம். எம்.ஜி.ஆர்., ஹீரோ. ராதா வில்லன்.

எம்.ஜி.ஆர்., சாமியார் வேடத்தில் வருகிற மாதிரியும், ராதா அவரிடம் ஆசீர்வாதம் வாங்குகிற மாதிரியும் ஒரு காட்சி.

படத்தின் டைரக்டர் ப.நீலகண்டன், எம்.ஜி.ஆரிடம், "உங்களிடம் ராதா ஆசீர்வாதம் கேட்டதும், நீங்கள் காலைத் தூக்கி ராதாவின் தலையில் வைத்து ஆசி வழங்க வேண்டும்," என்றார்.

எம்.ஜி.ஆர்., மறுத்துவிட்டார். "ராதா என்னை விட சீனியர். அவர் தலையில் நான் கால் வைப்பதாவது?" என்றார்.

"காட்சி அப்படி அமைந்தால் ரசிகர்கள் ரசிப்பார்கள்," என்றார் நீலகண்டன்.

ராதா உடனே எம்.ஜி.ஆரிடம், "என் தலையில் கால் வைப்பதைப் பற்றி நீ கவலைப் படாதே! நடிப்பு தானே? தாராளமாகச் செய்," என்றார்.

ராதாவின் வற்புறுத்தலால் எம்.ஜி. ஆரும், அவர் தலை மீது தன் காலை தூக்கி வைத்து ஆசிர்வதிப்பது போல் நடித்தார். ரசிகர்கள் ரசித்தார்களா என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

'பணம் பந்தியிலே' என்ற படத்தை அப்போதைய பிரபல தயாரிப்பாளர் எம்.ஏ. வேணு தயாரித்தார். படத்தில் ராதாதான் வில்லன்.

சேலத்தில் இருந்த ரத்னா ஸ்டூடியோவை வேணு 'லீசு'க்கு எடுத்து நடத்தி வந்தார். 'பணம் பந்தியிலே' படப்பிடிப்பு அங்கேதான் நடந்து வந்தது.

ஒருநாள் ராதாவும் நானும் காரில் ஸ்டூடியோவுக்குள் நுழைந்தோம். வழியில் ஒரு போர்டு வைக்கப்பட்டிருந்தது. 'இந்த எல்லையைத் தாண்டி வாகனங்கள் உள்ளே செல்லக் கூடாது,' என்று அதில் 'அறிவிப்பு' செய்திருந்தனர்.

ராதா காரை நிறுத்தி விட்டு, என்னிடம், "போய் அந்த போர்டை தூக்கி ஓரமா போட்டு விட்டு வா!" என்றார்.

போட்டு விட்டு வந்தேன். ராதா, காரை மேக்கப் ரூம் அருகில் போய்தான் நிறுத்தினார்.

இதை வேணுவும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஆனால், எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.

படம் முடிவடையும் தருவாயில் இருந்தது. இன்னும் பத்துநாள் ஷூட்டிங்தான் பாக்கி, ஒருநாள் ராதா படப்பிடிப்பில் என்னிடம், "வேணு ஸ்டூடியோவில் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"இருக்கிறார்," என்றேன்.

"போய், வேணு தன் முழுக்கை சட்டையை, மணிக்கட்டு வரை அணிந்திருக்கிறாரா என்று பார்த்து விட்டு வா. அப்படியே, சட்டைக்கு மேல் பித்தானும் போட்டிருக்கிறாரா என்று கவனி," என்றார்.

நானும் போய்ப் பார்த்தேன். வேணு முழுக்கைச் சட்டையை கை மணிக்கட்டு வரை அணிந்திருந்தார். அதுபோல, சட்டையின் மேல்பித்தானையும் போட்டிருந்தார்.

வந்து, ராதாவிடம் சென்னேன்.

உடனே ராதா, "அப்படீன்னா, வேணு நமக்குத் தர வேண்டிய பாக்கிப் பணத்தை உடனே வாங்கிடணும். விட்டுட்டோம்னா பிறகு கிடைக்காது ஏன்னா வேணு ரொம்ப கஷ்டத்திலே இருக்கிறான்," என்றார்.

"எப்படிச் சொல்றீங்க?" என்றேன்.

"படம் ஆரம்பிச்சபோது ஆளு கழுத்திலே தங்கச் செயின் போட்டிருந்தான்; கையிலே கோல்டு கலர் வாட்ச் கட்டியிருந்தான்; இதையெல்லாம் பெருமையா காட்டிக்கிறதுக்காக, சட்டையை முழங்கை வரை மடிச்சிவிட்டுகிட்டு, மேல் பட்டனை எல்லாம் தொறந்து போட்டுகிட்டு இருந்தான். கொஞ்ச நாளாக, ஆளுக்கு பணக் கஷ்டம்னு கேள்விப்பட்டேன். செயின், வாட்ச் எல்லாம் அடகுக்குப் போயிருக்கும்னு நெனைச்சேன். அப்படிப் போயிருந்தா, அதை மறைக்கறதுக்கு சட்டையை மணிக்கட்டு வரை போட்டுகிட்டு, மேல் பட்டனையும் போட்டுகிட்டிருப்பான்னு நினைச்சேன். அதை உறுதிப்படுத்திக்கறதுக்காகத்தான், உன்னை பார்த்துட்டு வரச் சொன்னேன்," என்றார்.

பிறகு விசாரித்த போது, ராதா சொன்ன மாதிரியே வேணுவின் செயினும், வாட்சும் விலை போய்விட்டது என்பதையும் அறிந்தேன்.

ராதா, விஷயத்தை கணிப்பதில் எவ்வளவு கெட்டிக்காரர் என்பதையும் புரிந்து கொண்டேன்!

(தொடர்வார்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 18

தென்றலும் புயலும் ஒன்றாக வீசுமா? ஆம் என்றுதான் நான் கூறுவேன்.

அறப் போர் அணித் தலைவர் ஆர்.டபிள்யூ.வி.அரியநாயகம் அவர்களை, 1956ம் ஆண்டு ஆரம்பப்பகுதியில் நான் காணும்வரை, தென்றல் வேறாகவும், புயல் வேறாகவும் பிரிந்துதான் வீசும் என்று நம்பியிருந்தேன்! அரியநாயகம் அவர்களைக் கண்டது முதல் எனது கருத்தைமாற்றிக் கொண்டேன்.

முகத்தை மூடிய கருந்தாடியுடன் ஒரு சாணளவு நெற்றியும் எவரையும் ஊடுருவி அளந்தெடுக்கும் கண்களையும் கொண்ட அந்த உருவம் 'கடுகடுப்பான கண்டிப்பு நிறைந்த ஒரு பேர்வழி,' என்றுதான் நான் அவரைக் கண்டதும் கருதினேன். ஆனால் அவருடன் பழகிய ஓரிருமணித்தியாலங்களுக்குள், அவர் ஒரு மென்மையான இதயம் படைத்த அருங்குணக் குன்று என்பதைக் கண்டு கொண்டேன்.

எல்லாரோடும் மிக இனிமையாகப் பேசிப் பழகுவார். அவருடைய அழகு தமிழ் நடை சாதாரண உரையாடலின் போதும் எவரையும் ஈர்க்கவல்லதாக இருந்தது.

கருந்தாடியுடன் கூடிய அவருடைய முகத்தை முதன் முதலில் நான் பார்த்த போது அவர் ஒரு புயல் என்றுதான் என்னால் கருத முடிந்தது. அவருடன் பழகிய பின்னர், தான் அவர் ஒரு தென்றல் என்பதைக் கண்டு கொண்டேன்.

1956ம் ஆண்டு ஜூன் 5ம் திகதியன்று 'சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரச கரும மொழி' என்று பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்ட அன்று தொடக்கம் அவருடைய இறுதிக் காலம் வரை அவர் முகச் சவரம் செய்ததில்லை. "இந்த நாட்டில் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் நியாயமான உரிமைகள் வழங்கப்படும் வரை நான் சவரம் செய்ய மாட்டேன்!" என்று வீர சபதம் ஏற்றவர் அரியநாயகம் அவர்கள். அவர் மட்டுமல்ல அவர் பிறந்த மண்ணான திருக்கோவில் மற்றும் தம்பிலுவில் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களும் அரியநாயகம் அவர்களுடைய அணியில் சேர்ந்தனர். இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி 'அறப் போரணி' என்ற ஓர் அமைப்பினை உருவாக்கினார்.

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவும் கவிதைகள் புனைவதில், கருத்தாழமிக்க சொற்பொழிவுகளை நிகழ்த்துவதில் அரியநாயகம் அவர்கள் சிறப்புற்று விளங்கினார். பத்துப் பிள்ளைகளுக்குத் தகப்பனாரான அரியநாயகம் அவர்களிடம் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒருவர் கேட்ட போது, "அத்தகைய திட்டம் இந்த நாட்டில் தமிழ் மக்களுடைய எண்ணிக்கையைத் திட்டமிட்டுக் குறைப்பதற்காக பேரினவாதிகள் செய்யும் சூழ்ச்சி. இதற்கு அடிபணியாமல் தமிழர்கள் தங்கள் வம்சங்களை இயன்றளவு விருத்தி செய்ய வேண்டும்" என்று புயலாகச் சீறினார்.

1957ம் ஆண்டு நடைபெற்ற திருமலை மகாநாட்டுக்கு இலங்கையின் நான்கு திசைகளிலிருந்தும் தொண்டர்கள் பாதயாத்திரையாக திருமலை சென்ற தகவலை ஏற்கனவே இக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். (திருமலை யாத்திரை 1956ல் நடைபெற்றதாக முன்னர் கூறியிருந்தது தவறு. 1957ல் என்பதுதான் சரி) அப்போது அம்பாறை மாவட்டம் என்ற அமைப்பு இருக்கவில்லை. வடக்கே வெருகலிலிருந்து தெற்கே பொத்துவில் வரை பரந்த பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டம் என்றே அழைக்கப்பட்டது.

திருமலை மாநாட்டில் பங்குபற்றுவதற்காக மட்டக்களப்புக்குத் தெற்கே திருக்கோவிலிலிருந்து தொண்டர்களை திரட்டிக் கொண்டு அறப்போர் அணித் தலைவர் அரியநாயகம் மட்டக்களப்பு வந்தடைந்தார்கள்.

அணிதிரண்டு செல்லும் பாதயாத்திரைத் தொண்டர்களுக்கு ஆங்காங்கே உணவு, உறைவிடம் அனைத்தையும் அந்தந்த ஊர் மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பெரும்பாலும் உணவு காய்கறி வகைகளுடன் கூடியதாகவே இருந்தது.

பொதுவாக சிலருக்கு மரக்கறியுணவு பிடிப்பதில்லை. ஏதாவது ஒரு 'மச்சமணம்' இருந்தால் தான் உணவு உள்ளிறங்கும். பாதயாத்திரை ஒருவழியாக மட்டக்களப்பிலிருந்து இருபது மைல்களுக்கப்பாலுள்ள வாழைச்சேனையைச் சென்றடைந்துவிட்டது.

அரியநாயகம் அவர்கள் வாழைச்சேனையிலிருந்து யாத்திரை அணியில் இணைந்து கொண்ட ஒரு தொண்டரை அழைத்து அவரிடம் பணம் கொடுத்து ஏதோ இரகசியம் பேசினார். அத்தொண்டரும் தலையசைத்துவிட்டு எங்கோ சென்றார். அடுத்தநாள் காலை அணி புறப்படும் போதுதான் அந்தத் தொண்டர் வந்து சேர்ந்தார். அவருடைய கையில் ஒரு சிறு பொதியிருந்தது. அதனைப் பெற்றதும் அரியநாயகம் அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அன்று மதிய உணவு கதிரவெளி என்ற இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்த ஒரு பள்ளிக் கூடத்தின் முன்றலில் பந்தி போடப்பட்டு அனைவரும் மதிய உணவுக்காக அமர்ந்தோம். அரியநாயகம் அவர்கள் வழக்கமாக தந்தை செல்வா மற்றும் இராசதுரை போன்றவர்களுடன் தான் பந்தியில் அமர்ந்து உணவு கொள்வார். ஆனால் வழக்கத்துக்கு மாறாக அப்பொழுது அவர் ஓர் ஒதுக்குப் புறத்தை நாடிச் சென்று அமர்ந்து கொண்டார். அவருடைய இரு மருங்கிலும் இருவர் அமர்ந்து கொண்டனர். வாழையிலையில் உணவு பரிமாறப்பட்டது. சோறு இலையில் வைக்கப்பட்டது. அரிய நாயகம் அவர்கள் தன் மடியில் வைத்திருந்த சிறுபொதியை அவிழ்த்து அதனுள்ளிருந்து இரு தகர டப்பாக்களை எடுத்தார். அவையிரண்டையும் முகத்துக்கு நேராகப் பிடித்துக் கொண்டு கண்களை மூடி மாந்திரீகர்கள் மந்திரம் சொல்வதுபோல் மெதுவாக இரண்டொரு நிமிடங்கள் முணுமுணுத்தார். பின்னர் அந்த டப்பாக்களின் மூடியைத் திறக்காமலேயே அதனுள்ளிருந்த துகள்களை சோற்றின் மேல் தெளித்தார். மூடியில் துளைகள் போடப்பட்டிருந்தமையினால் அவற்றினூடாக டப்பாக்குள்ளிருந்த துகள்கள் சோற்றில் விழுந்தன. இதேபோன்று தனது இரு மருங்கிலும் இருந்த தனது தோழர்கள் இருவருக்கும் தெளித்து விட்டார்.


இந்த விளையாட்டின் உண்மை பலருக்குத் தெரியாது. உணவுடன் ஏதோ மருந்து சேர்த்து சாப்பிடுகிறார்கள் என்றுதான் பலரும் கருதினார்கள்.

மரக்கறியுணவு தனக்கு ஒத்து வராது என்பதற்காக அரியநாயகம் அவர்கள் வாழைச்சேனை தொண்டரிடம் வறுத்த கருவாட்டுத் தூளும் மாசித்தூளும் கொண்டு வந்து தரும்படி கேட்டிருந்தார். அவற்றையே மரக்கறி உணவோடு சேர்த்து உணவாக்கிக் கொண்டார்.

திரு.அரியநாயகம் அவர்கள் உணவு வேளையில் இவ்வாறு டப்பாக்களில் உள்ளவற்றைப் பாவிப்பதை தந்தை செல்வா அவர்கள் பல தடவைகள் நோட்டமிட்டிருந்திருக்கிறார். பாதயாத்திரைத் தொண்டர்கள் மூதூர் சென்றடைந்தபோது தான் தந்தை அவர்கள் என்னை அழைத்து "அரியநாயகம் அவர்கள் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மந்திரம் தெரியுமா?" என்று என்னிடம் வினவினார்.

அருகிலிருந்து இதனைக் கேட்டுக் கொண்டிருந்த இராசதுரை அவர்களுக்கும் எனக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அரியநாயகம் அவர்களுடைய செயலுக்கு உரிய காரணத்தை இராசதுரை அவர்கள் தந்தை செல்வா அவர்களுக்கு விளக்கிக் கூறினார். தந்தை அவர்களும் புன்னகைப் பூத்தார்.

உணவு முடிந்து எல்லாரும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த சமயம் தந்தை செல்வா அவர்கள் அரியநாயகம் அவர்களைத் தன்னிடம் வரும்படி கேட்டுக் கொண்டார். அவர் வந்ததும், "நீங்கள் உணவு உண்ணும்போது சொல்லும் மந்திரத்தை எனக்கும் சொல்லித் தாருங்கள். நானும் உங்களைப் போல் திடகாத்திரமான உடலமைப்பைப் பெற விரும்புகிறேன்!" என்று நகைச்சுவையுடன் சொன்னார். நாங்கள் அனைவரும் வாய் விட்டுச் சிரித்தோம்.



# அறப்போர் அணித்தலைவர் அரியநாயகம்



அறப்போரணித்தலைவர் அரியநாயகம்

வாழைச்சேனை தாண்டி பனிச்சங்கேணி என்ற இடத்திலிருந்து கிளிவெட்டி வரை பாதை யாத்திரைக்கு முன்னும் பின்னும் இராணுவக் காவல் வழங்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. பாதையில் இருபுறமும் அடர்ந்த காடுகள் இருப்பதனால் விஷமிகள் ஏதாவது வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதற்காக பாதுகாப்பு அவசியம் வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. தந்தை செல்வா எவ்வளவோ மறுத்தும் பாதயாத்திரைத் தொண்டர்களின் அணிக்கு முன்னும் பின்னும் படையினரை கால் நடையாகவே நடந்து செல்லுமாறு ஏற்பாடு செய்து விட்டனர். இந்தப் படையணிகளில் பெரும்பாலும் தமிழ் இராணுவத்தினரே வந்திருந்தனர்.

ஆரையூர் அமரன் எழுதிய பாடல்களும் அன்பர் தங்கராஜா அவர்களால் உணர்ச்சி கொப்பளிக்கும் விதத்தில் பாடப்பட்டன. இடைக்கிடையில் தமிழ் வாழ்த்துக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

## இரா.பத்மநாதன்

ஒரு சந்தர்ப்பத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த படைவீரர்களில் ஒருவர் தமது அணியை விட்டு விலகி தந்தை செல்வாவை நோக்கி ஓடிவந்தார். மூவர்ண கட்சிக் கொடியைத் தாங்கிச் சென்று கொண்டிருந்த சிறுமி புஷ்பராணி கையிலிருந்த கொடியைப் பிடுங்கி எடுத்து தமிழ் வாழ்த்துக் கோஷங்களை எழுப்பியவண்ணம் முன்னும் பின்னும் ஓடத் தொடங்கி விட்டார். இதனைக் கண்ட ஏனைய படைவீரர்கள் மருண்டு போயினர். சிலர் ஓடோடி வந்து அவருடைய கையிலிருந்த கொடியைப் பிடுங்கி தந்தை செல்வாவிடம் கொடுத்து விட்டு குறிப்பிட்ட நபரைக் கட்டிப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டனர். தமிழ் மக்களின் நிலையையும் தமிழினத்தின் பரிதாபமான நிலையையும் எடுத்துக் கூறும் சோக மயமான அமரனின் பாடல் அந்த நபரை வெகுவாகப் பாதித்து விட்டது. அவர் தன்வசமிழந்து தமிழுணர்ச்சி பிளம்பாகி விட்டார். அவரை ஒரு ஜீப்பில் ஏற்றிக் கொண்டு இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று விட்டனர் என்ற தகவலைப் பின்னர் அறிந்தோம்.

பல வருடங்களின் பின்னர் அங்கொடையில் உள்ள மனநோயாளர் மருத்துவமனையின் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த ஒருவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். திரும்பி வரும்போது மருத்துவமனையில் முன் வாயிற்புறம் நின்றிருந்த ஒருவர் "பத்மன்... பத்மன்..." என்று கூவிக் கொண்டு ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்தார். நான் திணறிப்போய் "என்னை விடு" என்று கூறினேன். "டோய் பத்மன்.... என்னைத் தெரியல்லையாடா? நான் தான்டா...." என்று தன்னுடைய பெயரைச் சொன்னார். அழுது புலம்பினார். அவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் தான் அவரைத் தேற்றி அங்கிருந்த சிற்றூண்டிச்சாலைக்கு அழைத்துச் சென்று சில சிற்றூண்டிகளை உண்ண வைத்து தேனீரும் வாங்கிக் கொடுத்தேன்.

"டோய் பத்மன்... இங்கே பாரடா.. என் முன் வாய்ப் பற்கள் எதுமே இல்லை. பூட்ஸ் காலால் உதைத்து பற்களை உடைத்து விட்டார்கள். இவற்றுக்கெல்லாம் நான் பழிவாங்காமல் விட மாட்டேன்!". என்று சபதமெடுத்தார்.

இந்த நபர் வேறு யாருமல்ல. திருமலை யாத்திரையின்போது தமிழுணர்ச்சியால் உந்தப்பட்டு மூவர்ணக் கொடியை ஏந்தி ஆட்டம் போட்ட அதே படைவீரர்தான். இவர் திருமலை யாத்திரையின் போது உணர்ச்சியால் கூத்தாடிய அவரை இழுத்துக் கொண்டு போய்க் கட்டுப் படுத்த முயன்றுள்ளனர். ஆனால் முடியாமற் போகவே அடித்து உதைத்து இம்சை படுத்தினர். இறுதியில் அவர் ஒரு மன நோயாளியானார். அங்கொடையில் அடைக்கப்பட்டார்.

மனநோயாளர்கள் ஓரளவு குணமடைந்தால் அவர்கள் ஓரிரு வாரங்கள் தங்கள் குடும்பத்தாருடன் சென்று வாழ அனுமதிக்கப்படுவார்கள். இந்த ரீதியில் மேற்குறிப்பிட்ட நபரும் கொள்ளுப்பிட்டி முகாந்திரம் வீதியில் இருந்த அவருடைய அண்ணன் வீட்டுக்கு வந்திருந்தார். ஒரு நாள் காலை மண்ணெண்ணெய் நிரப்பிய பாத்திரத்துடன் அலரி மாளிகை முன்புறம் ஓடிச் சென்று தனக்குத் தானே மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ வைத்துக் கொண்டு இறந்து போனார்.

'அலரி மாளிகையில் ஒரு பைத்தியக்காரன் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டான்' என்று அடுத்த நாள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் பிரசுரமாகியிருந்தன.

திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா அவர்கள் பிரதமராக இருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது.

**(இன்னும் வரும்)**

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 72**

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

"அவர்களுக்கு எல்லாம் கோர்ட்டார் நோட்டீஸ் அனுப்ப வேண்டும்"-என்று ஒரு பட்டியலை நீட்டினார் என்னுடைய வக்கீல்.

பட்டியலைப் பார்த்த மாஜிஸ்திரேட்டின் முகம் வியர்த்தது.

"இவருக்குக் கூடவா..?" என்றார். என் வக்கீலைப் பார்த்து.

"அவருக்கே தான்?" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார், என்னுடைய வக்கீல்.

நமது நாட்டில் நீதி மன்றங்கள் சுயேச்சையாகத் தான் இயங்குகின்றன. ஆனால் சில நீதிபதிகள் மந்திரிகளின் தயவை எதிர்பார்க்கிறார்களே, என்ன செய்வது?

எந்த அதிகாரிக்கும் பதவி உயர்வு தேவைப்படுகிறது. ஆகவே யாராவது சிலரை அவர்கள் அநுசரித்துப் போக வேண்டியிருக்கிறது.

சோவியத் யூனியனைப் போல் எல்லாம் தகுதி அடிப்படையிலேயே நடந்து கொள்ளுமானால், ஆபீஸ் குமாஸ்தா கூட சுயேச்சையாக இயங்க முடியும்.

துரதிருஷ்டவசமாக இங்கே ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தகுதியற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். தகுதியற்றவர்களை மட்டும் தான் ஜனங்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

கண்ணகி பிறந்த நாட்டில் கற்பு தேடப்படுகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன் பிறந்த நாட்டில் நீதி தேடப்படுகிறது.

சரியோ, தவறோ, குற்றம்சாட்டப்பட்டவனுக்குச் சட்டத்தில் சில சலுகைகள் உண்டு, அவன் தன் வழக்குச் சம்பந்தமாக யாரையாவது விசாரிக்க வேண்டும் என்று விரும்பினால், அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டியது நீதிபதியின் கடமை.

அனுப்பாமல் இருப்பதற்கும் அவருக்கு உரிமை உண்டு. என்றாலும், சட்டத்தின் சலுகையைக் குற்றம் சாட்டப் பட்டவனுக்குக் கொடுப்பதே அவரது நேர்மைக்கு அடையாளம்.

ஆனால், என் வக்கீல் எவ்வளவோ, கேட்டுங் கூட அந்தக் குறிப்பிட்ட நபருக்கு சம்மன் அனுப்ப நீதிபதி மறததுவிட்டார்.



அந்தக் குறிப்பிட்ட நபர் வேறு யாருமில்லை. சந்திரசூரியனே!

பிறகு அவரிடம் இருந்து நியாயத்தை எப்படி எதிர்பார்ப்பது?

வழக்கு, வழக்கமானது. தெருவிலே நின்று கை காட்டியதாக.

முறைப்படி வாதாடியாக வேண்டுமே, வாதாடினார்.

எனது வக்கீல்.

அன்றைக்கே வழக்கை முடித்துவிட ஆசைப்பட்டவர் போல் நீதிபதி காணப்பட்டார்.

போலீஸ் அதிகாரிகள் வேறு அவரிடம் வந்து. 'குசு குசு' வென்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு வழக்கிலே நம்பிக்கை போய்விட்டது.

வழக்கை அன்றைக்கே முடிக்காமல் ஒத்தி வைப்பதற்கு நான் முயன்றேன். என் வக்கீலிடம் அதையே சென்னேன்.

அவர் கொஞ்ச நேரம் பேசிவிட்டு, "தனக்கு வேறு வேலை இருப்பதாகவும், அடுத்த வாரம் வைத்துக் கொள்ளலாம்!" என்றும் நீதிபதியைக் கேட்டார்.

"முடியாது. நாளைக்கே நடத்தியாக வேண்டும்" என்றார் நீதிபதி.

ஒரு நாள்தானே.

ஒரு நாள் தவணை.

அந்தத் தவணையை நான் வேறு எந்தக் காரணத்திற்காகவும் கேட்கவில்லை.

தண்டனையை ஏற்றுக் கொள்ளச் சந்திர புஷ்கரணியைத் தயார் செய்வதற்காகவே கேட்டேன்.

எனது அலுவலகத்திற்குத் திரும்பிய போது அவளும் நம்பிக்கை இழந்தவளாகவே காணப்பட்டாள். அவளை நான் தேற்றினேன். அன்போடு அரவணைத்து ஆறுதல் சொன்னேன்.

"நீதி என்பது மாஜிஸ்திரேட் கோர்ட்டோடு நின்று விடுவதில்லை. ஒருமுறை நீதி மன்றத்திற்குள் நுழைந்தவன் கடைசிவரை அங்கேயே சாகவேண்டும் என்பதற்காகத் தான் நீதிமன்றங்களில் கீழ்மன்றம் மேல் மன்றம் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். தண்டனை கொடுக்கப்பட்ட உடனே நீ பயந்து விடாதே. அப்பொழுதே சட்டப்படி உன்னை ஜாமீனில் விட்டாக வேண்டும். எந்த அம்பன் கொம்பன் தலையிட்டாலும் சரி, ஜாமீன் கொடுத்தே ஆகவேண்டும். பிறகு உயர் நீதி மன்றத்தில் வழக்கை எடுத்துக் கொள்ள ஒரு வருஷமாகும். அந்த மன்றத்தில் எவனும் தலையிட முடியாது. நீ திரும்பிவந்த பிறகு என்னுடைய பாதுகாப்பிலேயே இருக்கலாம்" என்றேன்.

"இந்த இரவுதான்நான் உங்களோடு இருக்கப் போகிறேனா...?" என்றாள் அவள்.

"ஏன் நாளை என்ன ஆயிற்று....? நாளை நமதே! உடனே ஜாமீன் கொடுத்து விட்டுத் திரும்பி வரவேண்டியது

## கவியரசு கண்ணதாசன்

தானே..." என்றேன். அமைதி அடைந்தாள்.

அன்றைய இரவு எங்களுக்கு சிவராத்திரியாகவே இருந்தது.

மறுநாள் கற்பகத்தைப் பற்றிய செய்தி வந்தது.

(அந்தரங்கம் வரும்)

# கள்ளத் தோணி



## கட்டாரிலிருந்து மெய்யன் நட்ராஜ்

**ஒரு** முப்பது வருஷத்திற்கு முன் எழில் கொஞ்சும் மலைநாட்டின், தேயிலைத் தோட்டம் ஒன்றில் குடியிருந்தார் அந்தோனி. அந்தோனிக்கு அப்போது இருபத்தியிரண்டு வயது இருக்கும். 'அலைபாயுதே மாதவன்' போல் அழகாக இருப்பார். அதிகம் படிக்கவில்லை. தோட்டத்துப் பாடசாலையில் நாலாம் வகுப்பு படித்ததோடு சரி. அவர் அப்பா மாடு வளர்த்ததால் மாட்டுக்கு புல் வெட்ட, மரக்கறித் தோட்டம் செய்ய அது இது என்று ஆரம்பித்து இறுதியில் அவர் அப்பாவைப்போல் தோட்டத்தில் வேலைக்குப் போக வேண்டி வந்தது. அதே தோட்டத்தில் அந்தோனி என்ற பெயரைக் கொண்ட இன்னும் ஒருவனும் இருந்ததால் இருவரின் பெயரிலும் வரும் தடுமாற்றத்தைப் போக்க இவரைக் 'கள்ளத்தோணி அந்தோனி' என்று அழைக்க ஆரம்பித்தார்கள். காரணம் அந்தோனியின் தாத்தா முன்பு கள்ளத் தோணியில் இலங்கைக்கு வந்து குடியேறியவராம். அதனால் அவர் குடும்பத்தையே கள்ளத்தோணி குடும்பம் என்று தான் அடைமொழி இட்டு அழைப்பார்கள்.

அந்தோனிக்கு தன் தாத்தாமேல் பெரிய கோபம். 'வந்ததுதான் வந்தாய், ஒரு நல்ல தோணியிலாவது வந்திருக்கக் கூடாதா? இப்பப்பார் கடல் என்ன கலர் என்றே தெரியாத எங்களை, காலத்திற்கும் கள்ளத் தோணின்னு சொல்ற நிலமையை ஏற்படுத்திட்டு போயிட்டியே!' என்று மனசுக்குள் திட்டித்தீர்த்துக் கொள்வான். 'கள்ளத்தோணியில வந்தாலும் காடாய் கிடந்த பூமியை துப்பரவு செய்து, தேயிலை நாட்டி நாட்டுக்கு அந்நிய செலவாணியை ஈட்டித்தருவதற்கு தாத்தா மாதிரி எத்தனையோ பேர் வியர்வை சிந்தி கஷ்டப்பட்டிருந்தாலும், என்றோ வயிற்றுப் பிழைப்புத்தேடி கள்ளத்தோணியில வந்ததால, அப்படி வந்தவங்களின் சந்ததியை இன்னும் இந்த சமூகம் கள்ளத்தோணின்னு தானே அழைக்குது. இது எந்த விதத்திலே நியாயம்?' என்று சமூகத்தையும் அவ்வப்போது திட்டிக் கொள்வான். ஊரில் அவனை கள்ளத்தோணி அந்தோனி என்று யாரும் அழைக்கும்போது அவன் மனம் எரிமலையாய் கனத்துக் கொள்ளும். 'என்றோ தன் தாத்தா கள்ளத்தோணியிலே வந்ததற்காகத் தன்னை கள்ளத்தோணி என்று அழைப்போர் நாளை என் சந்ததியையும் கள்ளத் தோணி என்று தான் அழைப்பார்கள். இந்த நிலமை இனி தொடரக்கூடாது. இது எங்கள் பரம்பரையில் என்னோடே முடிந்து போக வேண்டும்' தீர்மானித்தவன் அந்த தோட்டத்தை விட்டே வெளியேறி மட்டக்களப்பில் ஒரு மீன்பிடிக் கிராமத்தில் போய்க் குடியேறினான்.

தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து விட்டு திடீரென்று மீன் பிடி தொழிலில் இறங்கிய போது கொஞ்சம் தடுமாற்றமாகத்தான் இருந்தது. நாளாக நாளாக மீன்பிடிப்பதிலும் பழக்கப்பட்டு சொந்தமாக சிறிய வீடொன்றை வாங்கி குடும்பஸ்தனாகவும் ஆகிப்போனான். தினமும் வாடகைத் தோணியில் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வந்தான். தோணி வாடகை, மற்றும் இதர செலவுகள் போக பணம் கைக்கு வருவது சொற்பமாகவே இருந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு இரண்டு குழந்தைகளையும் குடும்பத்தையும் கொண்டு செல்ல சிரமமாக இருந்தது. பிடிக்கும் மீனில் ஒரு தொகை தோணி, வாடகைக்கே போய்விடுவதால் தானே இந்த நிலை. இதுவே ஒரு சொந்தத் தோணியாக இருந்தால் என்று யோசித்தான். முடிவில் வீட்டை அடைமானம் வைத்து விற்பனைக்கு வந்த ஒரு தோணியை வாங்கினார். ஒரு சில மாதங்கள் அந்தத் தோணியில் சென்று மீன் பிடித்து வந்து மெல்ல மெல்ல பட்ட கடனை அடைத்துக் கொண்டிருந்த போது, திடீரென்று ஒரு நாள் வீட்டு வாசலில் போலீஸ் வண்டி வந்து நின்றது.

வாசலில் நின்று கொண்டிருந்த அந்தோனியிடம் "இங்கே யார் அந்தோனி?" கேட்ட இன்ஸ்பெக்டரிடம் "நான் தாங்க!" என்றார். "அப்படியா! ஏறு ஜீப்பிலே" என்று ஏற்றிக் கொண்டு போனார்கள். போலீஸ் நிலையத்திற்குப் போன பின்பே பழையது என்றாலும் நல்ல தோணி என்று வாங்கிய தோணியும் கள்ளத்தோணி என்பது புரிந்தது. அதன் பின் தோணி வாங்கியவனைத் தேடிப் பிடித்து போலீஸிலிருந்து மீண்டும் வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. இந்த சம்பவத்தையடுத்து ஊருக்குள் பலரும், "என்னப்பா அந்தோனி நீ வாங்கினது கள்ளத் தோணியாமே?" "கள்ளத் தோணி விவகாரம் என்ன ஆச்சு?" "என்னப்பா போயும் போயும் கள்ளத் தோணியை வாங்கி இருக்கிறாயே!" என்று கள்ளத் தோணி பற்றியே பேசிப்பேசி முடிவில் ஊருக்குள் யாராவது இவனை விசாரித்துக் கொண்டு வந்தால் "யாரு அந்த கள்ளத்தோணி அந்தோனியா?" என்று கேட்குமளவிற்குப் போய் அந்த ஊரிலும் கள்ளத்தோணி அந்தோனியாகிப் போனான்.

எது நடக்கக் கூடாது என்று தோட்டத்தை விட்டு இங்கு வந்தானோ அது இங்கேயும் நடந்து விட்டதால், இனி இந்த ஊரில் இருக்கக் கூடாது என்று தீர்மானத்திற்கு வந்தான். கூழுங் கஞ்சியும் குடித்து வாழ்ந்தாலும் பரவாயில்லை. பரம்பரைக் கள்ளத்தோணிங்கிற பேர் மட்டும் வரக்கூடாது என்றவாறு தெரிந்த நண்பர் ஒருவர் மூலம் யாழ்ப்பாணத்தில் போய் குடியேறினான். தோணி என்கின்ற வாசகம் கூட வாயிலிருந்து வரக்கூடாது என்பதற்காக மீன் பிடி தொழிலை செய்யாமல் விவசாயத்தில் இறங்கினான். விவசாயம் அவனுக்குக் கைகொடுத்தது. பிள்ளைகளையும் ஆளாக்கி தலை நிமிர்ந்தான்.

திடீரென்று அன்று மக்கள் எல்லோரும் பயத்தால் ஊரைவிட்டே ஓடினார்கள். எப்போது என்ன நடக்குமோ தெரியாது. உயிரைக்காப்பாற்றினால் போதும் என்கின்ற நிலை. இவர்கள் அடிப்பார்களோ? அவர்கள் அடிப்பார்களோ? தெரியாது. ஆங்காங்கே வேட்டுச் சத்தங்கள். வானில் ஹெலி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. நிச்சயம் யார் யாரையோ பலி எடுக்கப் போகும் யுத்தம் வாசலுக்கு வந்து விட்ட நிலையில் வீட்டையும், நிலத்தையும் விட்டுவிட்டு உயிர்த்தப்பினால் போதும் என்கின்ற தருவாயில் மனைவி மக்களைக் கூட்டிக் கொண்டு அந்தோனியின் குடும்பமும் ஓடியது. ஓடியவர்கள் பலர் அவரவர்களுக்குக் கிடைத்த தோணிகள் மூலம் இந்தியாவிற்குப் படையெடுத்தார்கள். அந்த நிலையில் கையில் இருந்த காசைக் கொடுத்து ஒரு தோணி பிடித்து அகதியாகப் போய் இந்தியக் கரையில் இறங்கினார்கள். இப் போது இவர்களை பார்வையிட வருகின்ற மக்கள் இவர்களைப் பார்த்து 'கள்ளத் தோணியில வந்தவங்க!' என்று தான் சொல்கிறார்கள். கேட்கின்ற அந்தோனியாருக்கு சங்கடமாகத்தான் இருக்கும். என்ன செய்ய தலையில் எழுதியதை யாரால் அழிக்க முடியும்?

# அன்பு மகன்



## க.ராகுலன்-வெள்ளவத்தை

"**யோ**கா, இதுதான் என்ர நண்பன் சுந்தரம். கனடாவில இருந்து வந்திருக்கான்!" மின் விசிறியை முடுக்கினார் கணபதி.

"ஒரே வியர்வையாயிருக்கு, .... சுந்தர் இதுதான் என்ர மனைவி யோகா.!"

"உங்களின்ர வெடிங்குக்கு வந்தனான் தானே, ஞாபகமிருக்கா.!"

"ம்!" யோகா தலையசைத்தாள்.

"சுந்தர் ஞாபகசக்தியில அவ ஒரு யான மாதிரிடா!" சொல்லிவிட்டுச் சிரித்தார் கணபதி;

"கணா, நீ இன்னமும் அப்படியேதான் இருக்கிறாய். உந்த நக்கல் கதையள் உன்னை விட்டுப் போகல்லத்தான். உன்னுடைய சன் எங்க....?"

"அங்க அவனே வாறான் பார்." அப்படியே விக்கினேஸ்வரன் அளவில் வடித்த உருவம்; கருங்கல்லில் செதுக்கியது போன்ற பளபளப்பு; குழந்தைத்தனம் முகத்தில் சிரித்தது.

"என்னப்பா, உங்களுக்கு எத்தனதரம் சொல்லியிருக்கிறன். பிள்ளையை பிறத்தியாருக்கு முன்னால திட்டித்தீக்காதைங்கோ எண்டு!" என்றது, என்றும் போல் கணபதியின் காதில் கேட்காமலே போனது.

"டேய், அந்த ஊசி மருந்தைக் கொண்டுவா" என்றவாறு கணபதி ஜிம்மியின் கூண்டைத் திறந்தார்.

"பாத்தியா? சொன்னவுடன எப்படியிருக்குதெண்டு, நீயும் இருக்கிறியே?" என்றவாறு மகனிடமிருந்து மருந்தை வாங்கினார் கணபதி.

"நானெல்லாம் என்ர அப்பு சொல்ல முதலே செய்து முடிச்சிடுவன்; நீ எப்பவாவது அப்படிச் செய்திருக்கிறாயா; என்ர ரத்தம் தான் உன்னில ஓடுதோ. எனக்கே சந்தேகமாயிருக்கு...?" என்றவாறு ஜிம்மியினருகே ஊசியைக் கொண்டுபோனபோது, '....வௌவ் வௌவ்....' அது அவர் கழுத்தில் பாய்ந்தது.

கணபதியின் கண்களுக்கு சீலிங் ஃபான்

"ஆள் வளந்திட்டார், கைக் குழந்தையாப் பாத்தது.!"

"சுந்தர், ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதான்ரா வளர்ச்சி. ஆள் மட்டும்தான் வளந்திருக்கிறான்; இவன்ர வயசில நான் தோட்டங்கொத்தி உழைக்கத் தொடங்கிட்டன். இவனோ பேப்பரும் கையுமா இருக்கிறான். என்னெண்டா ஏதோ கவிதையாம்.... சிறுகதையாம்..."

சுந்தரம் குறுக்கிட்டார், "றியலி, எனக்கு இதுகளில இன்ரறெஸ்ற் இருக்குடா. தம்பி இன்னொரு நாளைக்கு வருவன்தானே. அப்ப எடுத்து வையும் பாப்பம்"

சுந்தரம் விடைபெற்ற பின் யோகா, தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. அருகில் யோகா நின்றிருந்தாள்

"நியாயமான இரத்தம் போயிட்டுது. பிள்ளையின்ற இரத்தமும் உங்க குறுப் என்றபடியால அவன்..... ஒற்றைக் காலில் நிண்டு கொண்டான். தான் தான் தருவனெண்டு, எங்க அவன்" கேட்டபடி கணபதி யோகாவின் கைகளைப் பற்றினார்.

கணபதியின் கண்களில் மகனின் விம்பம் தெளிவாக விழுந்தபோது. காதில் அசரீரியாக, அது ஒலித்தது,

"என்ர ரத்தம் தான் உன்னில் ஓடுதோ, எனக்கே சந்தேகமாயிருக்கு....!"

# கொழுக்கட்டை

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!**
**கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

இன்றோடு ஆடி மாதமும் பிறந்து விட்டது. மறந்து போய் கிடந்த கொழுக்கட்டை ஆசையை சோமசுந்தரப் புலவர் நினைவு படுத்தினார். வாய் ஊறியது. இந்த கொழும்பு மா நகரிலே 12 சதுர அடிக்குள் தான் சீவியம். அலுவலகவேலை, கடைச்சாப்பாடு. இந்த லட்சணத்திலே கொழுக்கட்டையை நினைத்து வாய் ஊறி என்ன புண்ணியம்? இப்படித்தான் போன வருசம் ஆடிப்பிறப்பு அன்று தற்செயலாக வெள்ளவத்தையில் இருக்கும் நல்லதம்பி வாத்தியார் வீட்டை போனபோது, ஒரு தட்டத்திலை நாலு கொழுக்கட்டையை கொண்டு வந்து வைத்தார்கள். 'இதிலை எல்லாம் நாகரீகம் பார்க்கவே கூடாது!' என்று நினைத்துக் கொண்டு நாலு கொழுக்கட்டையையும் சாப்பிட்டுவிட்டேன். சரி வெட்கத்தை பார்த்து என்ன செய்யிறது? இம்முறையும் தற்செயலாய் போவது போல அங்கே போனேன். புறப்படும் வரை எதிர்பார்த்தேன். கொழுக்கட்டையைக் காணோம். 'எட கடவுளே! இந்த வருசம் இவர்களும் ஏமாற்றிவிட்டார்களே!' தேனீர் தந்தார்கள். குடித்து விட்டுப் புறப்பட்டேன். சரி 'எட்டாத பழம் புளிக்கும்' என்று சொல்ல நான் தயாரில்லை. என்ன செய்யலாம்.....?

என் உறவுக்காரர் ஒருவர் கல்கிசையில் வசித்து வந்தார். நேரமோ மாலை ஆறு மணி. தூரம் தான். பரவாயில்லை புறப்பட்டேன். "தம்பி இண்டைக்கு மத்தியானம் கூழ் காய்ச்சினம். பின்னேரம் கொழுக்கட்டை அவிச்சம். எல்லாம் முடிஞ்சிது. இஞ்சை யார் சாப்பிடப் போயினம், எண்டு கொஞ்சம் முன்னாலை தான் றைவர் பெடியனிட்டை கட்டிக் கொடுத்திட்டன். தம்பி புட்டு அவிக்கிறன் சாப்பிட்டு விட்டுப் போகலாம்!" என்றார்கள்.



ம். புட்டு சாப்பிட்டு விட்டுப் புறப்படும் போது இரவு எட்டு மணி. வீட்டை வந்து பார்த்தபோது தான் தெரிந்தது பொக்கட்டுக்குள் இருந்த இருநூறு ரூபாயைக் காணவில்லை. 'ம் மலையை இடித்து எலியை பிடிச்ச கதையாத்தான் போச்சு கொழுக்கட்டை ஆசையும்' என்று நினைத்துக் கொண்டேன்.

அன்று இரவே திவாகரன் என்ற கடைமுதலாளிக்கு ஒரு கடிதம் கொடுக்க வேண்டி இருந்தது, புறப்பட்டேன். வீட்டு மணி அடித்த போது, கேற்றை திறக்காமலே கடிதத்தை வாங்கிக்கொண்டார். "ஒன்றே ஒன்றுதான் இருக்கு. கொண்டு போய்ச் சாப்பிடுதம்பி!" என்று கடதாசியில் சுற்றியபடி ஒரு கொழுக்கட்டையைத் தந்தார். வாங்கிக் கொண்டு சயிக்கிளில் தொத்தியபோது அது கை தவறியது. எங்கோ நின்ற தெரு நாய் ஒன்று ஓடிவந்து தூக்கிக்கொண்டது. சரி போகட்டும்.

எப்போதுமே அம்மாவை நினைக்கும் போது எனக்கு கொழுக்கட்டை தான் நினைவுக்கு வரும். அப்போது எனக்கு ஒரு மூன்று வயது இருக்கும். தினமும் காலை உணவு இடியப்பம் சரி புட்டு சரி செய்யும் போது அந்த மாவிலே கொஞ்சத்தை எடுத்து பின்னி அதற்குள் தேங்காயையும் சீனியையும் போட்டு தினமும் ஒரு கொழுக்கட்டையை அம்மா செய்து தருவாள். அம்மா வலு கெட்டிக்காரி. இப்போது கொழுக்கட்டையை நினைக்கும் போது அம்மா நினைவுக்கு வந்தாள். எனி கொழுக்கட்டைக்காக ஊருக்கு எல்லாம் போக முடியுமா? மீண்டும் யோசித்தேன்.

நான் வசிக்கும் 12 சதுர அடிக்கு சொந்தக்காரர் அதாவது..... வீட்டு உரிமைக்காரர் நல்ல மனிதர்கள். கேட்டால் செய்து தருவார்கள். ஆனால் அவர்கள் கொழும்பிலே தான் பிறந்து வளர்ந்தவர்கள். கேக், ஐஸ்கிறீம் எல்லாம் செய்ய தெரியும். ஆனால் கொழுக்கட்டை செய்ய தெரியுமோ? கேட்டேன். "ஓம்!" என்றார்கள். பனங்கட்டி, பயறு, அரிசிமா வாங்கி கொடுத்து விட்டு ஆவலோடு காத்திருந்தேன்.

இரவு அந்த அம்மணி அழைத்து "தம்பி இண்டைக்கு என்ரை மகள் தான் மா குழைத்தாள். அவளுக்கு பதம் சரியாய் தெரியாது. தண்ணீராய் போச்சு. ஏன் வீணாக்குவான் எண்டு இடியப்பம் பிழிஞ்சுபோட்டன். தம்பி நாளைக்கு நான் செய்து தாறன்!" என்றாள். அடுத்தநாள் "தம்பி இண்டைக்கு நான்தான் மா குழைச்சன். ஆனால் அது மா மாவாய் உதிருது பசை இல்லை. மாவை பின்னேலாது பேசாமல் புட்டு அவிச்சுப்போட்டன்." என்றாள். அத்தோடு பனங்கட்டி மட்டும் திரும்பி வந்தது. சரி தேத்தண்ணி குடிக்க உதவும் என நினைச்சுக்கொண்டேன். அடுத்த நாள் அதையும் எலி இழுத்துக் கொண்டு போய் விட்டது.

ஒருவாறு நாளையுடன் ஆடி மாதமும் முடியப் போகுது. சரி கொழுக்கட்டை சாப்பிடவும் யோகம் வேணுமே! இப்போது சோமசுந்தரப்புலவர் மீது தான் கோபம் வந்தது. போகட்டும் அடுத்த ஆடிக்காவது கொழுக்கட்டை சாப்பிட மாட்டேனோ! என்று திருநாள் போவள் பாணியில் மனதை தேற்றிக் கொண்டேன். வாழ்க கொழுக்கட்டை!

## இணுவில்-உத்திரன்

# இலக்கிய நயம்

மாதவனும் ஆரணியும் மஞ்சத்திலிருந்தனர். ஒரு சில அங்குல அளவில் உடுத்தியிருந்தது தவிர, மற்றபடி துணிப் பஞ்சத்திலிருந்தனர்.

அவள் கூந்தல் கலைந்திருந்தது. அதற்குள் மாதவன் முகம் புதைந்திருந்தது.

"அங்கே நெடுநேரமாக என்ன செய்கிறாய்? கூந்தலின் வாசனை பார்க்கிறாயா? அல்லது வேறு ஏதாவது யோசனையில் மூழ்கிவிட்டாயா?" காதுக்குள் கிசுகிசுத்தாள் ஆரணி.


கூந்தலைக் கைகளில் அள்ளி இழை இழையாக உதிரவிட்டுக் கொண்டே மாதவன் சொன்னான்:

"இந்த வாசனையின் கிறக்கத்தில்தான் என்பதையே நீ உணராமல் இருக்கிறாயே..... அதுதான் என்னை மயக்குகின்ற உன் பேரழகு. உன் கூந்தலுக்கு மட்டுமல்ல, உன் உடம்புக்கே தனியான வாசனை உண்டு. என் கண்ணைக் கட்டி விட்டாலும் உன்னை ஸ்பரிசிக்காமலே நீ அருகிலிருப்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடியும். அது எல்லாப் பெண்களுக்கும் பொதுவான வாசனாதி பொருட்களால் உண்டான நறுமணமல்ல; உனக்கென்றே பிரத்தியேகமாக உள்ள வாசனை அது....."

"போதும் போதும்! விட்டால் உன் கற்பனை வர்ணிப்புகளுக்குள்ளேயே என்னைப் புதைத்துக் காணாமலாக்கி விடுவாய்! மூச்சு முட்டுகிறது. கொஞ்சம் விடு...."

ஆரணி அவன் பிடியிலிருந்து விலகி முதுகுப் புறமாக அவன் தோள்களில் சாய்ந்து கொண்டாள்.

மெல்ல அவன் காது மடலைக் கடித்தாள்.



## கூந்தலின் வாசம்

என்னை மறந்துவிட்டேன்..... நக்கீரன் முட்டாள்..... பெண்ணின் கூந்தலுக்குள் பாய் போட்டுப் படுக்கவில்லை அவன்...."

"ம் கூந்தலில் பாய்போட்டுப் படுத்தது போதும்... நீங்கள் நுகரும் வாசனை மயிரின் மணமல்ல; மலரின் குணம். ஒருவேளை மலர் சூடாமல், வாசனைத் திரவியங்கள் போடாமல் வெறுமனே விரிந்த கூந்தலினுள் முகர்ந்து நீ மணத்தை நாசியில் வாங்கியிருக்க முடியாது. உன்னை மறந்து தூங்கியிருக்கவும் முடியாது!"

"பார்த்தாயா உன் சிறப்புக்கள் என்ன பிறகு சற்று விலகி அந்தக் காதைத் தன் கைகளால் பிடித்துத் திருகினாள்.

அவன் அவளைச் சுற்றிப் பின்னிய கைகளால் இழுத்து நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான்: அவள் உடலின் சாரத்தையெல்லாம் உறிஞ்சிக் குடித்துவிடும் ஆவேசத்தோடு உதடுகளைக் கவ்வினான். வலிய கரங்களால் அவள் உடலைக் கரைத்துத் தன் அதரங்களால் அவளைப் பருகினான்.

"இந்த மல்லிகையின் வாசம் உண்மையில் மல்லிகையினுடையது மட்டும் தானா?"

"என்ன உளறுகிறாய்?" என்று ஆரணி அவன் மோவாயைப் பிடித்து நிமிர்த்தினாள்.

"இல்லை.... மல்லிகைக்கு இயல்பாக ஒரு வாசம் உண்டு. அதை நான் அறிவேன். ஆனால் இதோ உன் கூந்தலில் கிடக்கும் மல்லிகை அந்த வாசனையில் இல்லை. உன் வாசனையையும் அது வாங்கிக் கொண்டிருப்பதால் தானே இப்படி என்னை மயக்குகிற இந்தப் புதுவாசனை உருவாகியிருக்கிறது?"

"பைத்தியம்! சொல்வதில் விஞ்ஞான உண்மை ஏதுமிருக்கிறதா? உன் மயக்கப் புளுகுக்கு மல்லிகையில் பழி போடாதே."

"ஏது மயக்கப் புளுகென்கிறாய்? இந்த வாசனை... நான் வேறெங்கும் அனுபவித்திராத இந்த உன் பிரத்தியேக வாசனை... என் பொய்யான கற்பனை என்கிறாயா?"

"பிறகென்ன? ஏதோ காணாததைக் கண்டதுபோல் நெளிந்து குழைவதிலேயே தெரிகிறதே.... காதல் மயக்கத்தில் உனக்கு வருகிற கற்பனைகளையெல்லாம் உண்மைத் தத்துவமாக எடுத்து விடாதே. என் தோலுக்கும், கூந்தலுக்கும் வியர்வை வாசனை தான் வரும்....."

"ச்சீ.... உனக்கு உன் அருமையே தெரியவில்லை...."

"அதைத்தான் நானும் சொல்கிறேன். உனக்கு நான் அருமை பெருமையாகத்தெரிவதும், எனக்கு நீ அருமையாகத் தெரிவதும் காதல்தான்..... அதாவது நம் மனதின் மன்மதக்கூத்துத்தான். அதற்கு இயற்கையைப் பழித்து உன் கற்பனை மூட்டைகளை அவிழ்த்துவிடாதே."

"சௌந்தர்யமான கணங்களுக்குள் மூழ்கித் திளைக்கத் தெரியவில்லை உனக்கு. விஞ்ஞான முடிவுகளிலேயே வாழ்க்கையின் எல்லாத் தேவைகளும் அடங்கிவிடுகின்றனவா? இப்படியே உன் தோள்களில் சாய்ந்து கூந்தலுக்குள் முகம் புதைத்து, இந்த மல்லிகையின் புது வாசனையை வாங்கிக் கொள்கிற நேரத்திற்கு ஈடாக வாழ்வில் வேறெந்தப் பொழுதுதான் வாய்க்கப் போகிறது? இந்த சுகத்திற்கு ஏன் விஞ்ஞான விளக்கம்? நமக்கு வேண்டுமென்று நினைக்கிற நேரத்தில் பெய்கிற மழை தரும் சந்தோஷம் போல, மனதைக் களிக்கூத்தாட வைக்கும் சுகம் இதுதான்....." என்று அவளை இறுக அணைத்தான் மாதவன்.

"நமக்கு விருப்பமான பொருள் ஒன்று, விரும்பிய பொழுதில் கிடைத்துவிடுவது போன்ற இன்பம் எனக்கும்தான் உன் தோள்களில் சாய்ந்தால் கிடைக்கிறது!" என்று அவனைத் தழுவிக் கொண்டாள் ஆரணி.

வேட்ட பொழுதின் அவையவை
-போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

(குறள் : 1105)

தருவது
**முழடில்யன்**

# ஸ்போர்ட்ஸ்

## இந்திய அணியின் புதிய பயிற்சியாளர்?



கபில் தேவ்



ஜெஃப் மார்ஷ்

கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கித் தத்தளிக்கும் இந்திய அணிக்குப் புதிய பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

கிரிக்கெட் சூதாட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்சியாளர் கபில்தேவும் சம்பந்தப்பட்டிருப்பதால், இவருக்குப் பதிலாக வேறொருவர் இடம் பெறுகிறார்.

இதுவரை காலமாக பெரும்பாலும் இந்திய அணிக்கு முன்னாள் இந்திய வீரர்களே பயிற்சியாளர்களாக இருந்து வந்தனர். ஆனால் இம்முறை இரு வெளிநாட்டு பயிற்சியாளர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பரிசீலனையில் இருக்கும் பயிற்சியாளர்களில் ஒருவர் அவுஸ்திரேலிய முன்னாள் துவக்க ஆட்டக்காரர் ஜெஃப் மார்ஷ்.

அடுத்தவர் நியூஸிலாந்து முன்னாள் துவக்க ஆட்டக்காரர் ஜோன் ரைட்.

இவர்களில் 42 வயதான மார்ஷ் அவுஸ்திரேலிய அணி சார்பாக 50 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2854 ஓட்டங்களை எடுத்துள்ளார். அத்துடன் 117 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 4357 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் அவுஸ்திரேலியா சாம்பியனாகி இருந்தது. அப்போது அவுஸ்திரேலிய அணிக்குப் பயிற்சியாளராக இருந்தவர் ஜெஃப் மார்ஷ் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தவரான 46 வயதான ஜோன் ரைட் இங்கிலாந்தின் கவுண்டி அணிகளில் ஒன்றான கென்ட் அணிக்குப் பயிற்சியாளராக இருக்கிறார். விரைவில் இவரது ஒப்பந்த காலம் முடிவடைகிறது.

இந்திய அணியின் ராகுல் ட்ராவிட் இப்போது கென்ட் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் ஜோன் ரைட்டின் பயிற்றுவிப்பைப் பற்றி வானளாவப் புகழ்கிறார்.

எப்படியும் செப்டெம்பர் மாத முடிவிற்குள் தெரிந்து விடும் யார் இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் என்று.

## 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர்கள்

இங்கிலாந்துப் பருவகால கிரிக்கெட் போட்டிகள் அங்கு நடந்து வருகின்றன. அங்குள்ள கவுண்டி அணிகளுக்கிடையே நடைபெறும் பருவகால போட்டி வருடா வருடம் நடந்து வருகின்றது.

உலகின் சிறந்த வீரர்கள் கவுண்டி அணிகளில் இணைந்து விளையாடுவார்கள். இம்முறை நடக்கும் போட்டிகளில் முதல் பிரிவில் 5க்கும் அதிகமான விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்களும், அவர்கள் விளையாடும் கவுண்டி அணிகள் பற்றிய விவரங்களும் வருமாறு:

| வீரர் | போட்டி | விக்கெட்டுகள் | சிறந்த வீச்சு |
|---|---|---|---|
| எம்.பி.பிக் நெல் (சர்ரே) | 12 | 53 | 9-47 |
| சக்லெய்ன் முஷ்டாக் (சர்ரே) | 8 | 49 | 6-47 |
| ஷேன் வோர்ன் (ஹண்ட்ஸ்) | 11 | 46 | 5-31 |
| அனில் கும்ப்ளே (லீசெஸ்டர்) | 9 | 41 | 6-44 |
| கிளென் மக்ராத் (வோர் செஸ்டர்) | 11 | 58 | 8-86 |

# சிந்தியா பதில்கள்

★ நான் முள்ளை முள்ளால் எடுத்தேன். இப்போது என் காலில் இரண்டு முள்ளுகள் என்ன செய்வது?

டி.பி.ஜீவன், ஜெம்பட்டா வீதி.

தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். முள்ளுகளால் கால் நிரம்பட்டும். பிறகு முள்ளுக்குப் பயப்படாமலிருக்க அதுவும் ஒரு நல்ல வழிதான்!

★ மனைவியை சூதாட்டத்தில் வைத்து இழந்த தருமர், அடுத்தவர்களின் மனைவியை துகிலுரிய முனைந்த துச்சாதனன் இந்த இரண்டு பேரில் தருமரைப் போற்றுகிறார்கள்; துச்சாதனனை மட்டும் தூற்றுகிறார்களே, ஏன்?

எட்வேட் நிஷாந்தன், பெரிய நீலாவணை.

அடுத்தவன் பொண்டாட்டியைத் தொடுவதுதான் பாவம்; தன் பொண்டாட்டியாயிருந்தால் தூக்கி நெருப்பிலும் போடலாம் என்று அந்த நாளிலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பெண்ணை அடக்கி வைக்கத்தான்!

★ பலர் கூடி ஒரு காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா?

ஜே.யூட்ஹிலேரியன், தாண்டவன் வெளி.

அது எத்தனை பேர் சேர்ந்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. உதாரணமாக, மூன்று பேர் சேர்ந்து ஒரு காரியத்தை நிறைவேற்றத் திட்டமிடப் போகிறீர்கள் என்றால், அதற்கான முடிவுகள் எடுக்கப்படும் சமயத்தில் மூவரில் இருவர் விடுமுறை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். சொன்னவர் கோட்லாண்ட் என்ற அறிஞர்.

★ சிந்தியா, சமீபத்தில் ரசித்த நகைச்சுவை?

ஏ.எல்.மொஹமட் ரஷ்மி, அட்டாளைச்சேனை 02.

'பெண்ணின் மனதை தொட்டு' படத்தில் விவேக் பின்பக்கத்தை வைத்துக் கொண்டே அடிக்கும் லூட்டி, மற்றும் சப்ளின் பாலுவின் இலங்கைத் தமிழை, அதேவேகத்திலேயே மெட்ராஸ் தமிழாக்கும் மயில்சாமின் சிரிப்பு லேகியம். வயிறுகுலுங்க சிரிக்க வைத்தது. நாட்டு நடப்பில் சிரிக்க வைத்தவர்கள் கூட்டணியினர். தேர்தலில் தமிழ் மக்கள் ஏன் தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்கள் வேதனைகளை மறந்து விழுந்து விழுந்து சிரிக்க வைக்கிறது.

மக்களுக்குத் துன்பங்களையே நிரந்தரமாக்கி, அவலங்களுக்குள்ளேயே ஆறுதல்களை அள்ளிவிட்டு பாராளுமன்றக் கதிரைகளை அனுபவிப்பதில் கிடைக்கும் சுகம் பற்றி உலகத்துக்கே பாடம் சொல்லக்கூடியவர்கள். ஆயுதம் தூக்காமலேயே நாட்டை அழிவுக் கிடங்கிற்குள் புரட்டிக் கை துடைத்த வீர மறவர்கள். நகைச்சுவை உணர்ச்சி உள்ளவர்கள் மகிழ. இந்தத் தேர்தலிலும் அவர்களிடமிருந்து இன்னும் பல அறிக்கைகள் கிடைக்கும். ஏனைய தமிழ்க் கட்சி



'பிரியமானவளே' படத்தில்விஜய்-சிம்ரான்

இளவல்கள் பலரும் இவர்களைப் போலவே முகப்பாத்தி விநியோகிப்பவர்களாக மாறிவருவதைப் பார்த்தால், இந்த விஷம் த.வி.கூட்டணியின் வேருக்குள்ளேயே கிடந்திருப்பது தெரிகிறது. அந்தக் கவலைகளெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். மீண்டும் மீண்டும் கோமாளிகளைக் காணத் தயாராவோம்!

★ கொஞ்சம் கூட ஆபாசம் கலக்காத புத்தகங்களைப் பார்க்க முடியாதா?

மா.நிவேதினி, திருகோணமலை.

டெலிஃபோன் டிரெக்டரி உள்ளதே!

★ யாரைப்போல வாழ நினைக்கிறீர்கள்?

எஸ்.எச்.எம்.றிபாய், கல்முனை 08.

சிந்தியாவைப் போல.

★ தனியார் வானொலி நிலையங்கள் அதிகரித்து வருகிறதே, இதனால் நமது இளைய சமுதாயத்துக்கு நன்மையா? தீமையா?

சண்முகம் மனோகரன், அப்புத்தளை.

பட்டி மன்றம் வைத்துக் கொண்டிராமல் நல்ல விதமாக அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா பாருங்கள்: 'புதுப்புது மாற்றங்களையும் புதிய புதிய சாதனங்களின் வருகையையும் யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அவை குறித்து விழிப்பாயிருப்பதும், சமூகத்தில் அவை ஏற்படுத்தும் பாதிப்புகளை விளங்கிக் கொள்வதுமே....' அந்த மாற்றங்களை நமக்கு வேண்டியவையாக்கிக் கொண்டு முன்னே நகர வழி, பிடிக்காவிட்டால் புலம்பிக் கொண்டிருப்பதால் ஆவதொன்றுமில்லை.

★ எனது மதிப்புக்கும் பிரியத்துக்குமான நடிகர் விஜய்யின் காதல் மனைவி சங்கீதா பற்றியும் அவர்களது கல்யாண வாழ்க்கை பற்றியும் மோசமான செய்திகள் வருகின்றனவே, உண்மையா சிந்தியா?

ஷஃப்னா நஸார், அக்குறணை.

அதற்கென்ன, தீக்குளிக்கப் போகிறீர்களா? சும்மா இருங்கள் ஷஃப்னா!

★ நாட்டில் சிந்தியா என்று ஒருவர் இல்லாவிட்டால் எம் கேள்விகளுக்கு என்ன நடக்கும்?

ஐ.அஸ்மி அஹமட், திக்குவல்லை.

வேறொருவர் பதிலளித்துக் கொண்டிருப்பார்.

★ திவ்யா உன்னி எப்படி?

இ.மோகன், நீர்கொழும்பு.

பார்க்க சிறீதேவி போல இருக்கிறார். 'கண்ணன் வருவான்'னில் நடிப்பைக் காணோம். 'கல்வெட்டு', 'சபாஷ்', 'ஆண்டான் அடிமை' எல்லாம் வரட்டும். தமிழில் தாக்குப் பிடிப்பாரா என்று பார்க்கலாம்.

★ சிந்தியா! கடவுள் உங்கள் முன் தோன்றினால் முதலில் என்ன கேட்பீர்?

வி.பிரியதர்ஷினி, கொழும்பு 12.

அவர் கடவுள்தான் என்பதை உறுதிப்படுத்தும்படி!

# மன்னாதி மன்னன் 21

றத்தின் கீழிருந்து மதிய உணவை உண்ட அர்ச்சுனசாமி அந்த மரத்தின் மேலிருந்த பாம்பின் விஷம் தனது உணவில் விழுந்து கலந்து விட்டதையறியாமல் அந்த உணவினை உண்டான். அந்த இடத்திலேயே துடிதுடித்துச் செத்தான்.

இவ்வாறு வேதாளம் எனது பதினாறாவது கதையைக் கூறி முடித்தபின்னர் விக்கிரமாதித்தனிடம் வினாவைத் தொடுத்தது "அந்த அப்பாவிப் பிராமணன் அர்ச்சுனசாமி இறந்ததற்கு யார் குற்றவாளி?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன், "தன் பசியைப் போக்க கருடன் பாம்பைக் கொண்டு வந்து மரத்தில் வைத்து கொத்தியுண்டது. அப்போது அதன் வாயிலிருந்து வெளியேறிய விஷம் அர்ச்சுனசாமியின் உணவில் விழுந்தது. அதனை உண்டதனால் தான் அர்ச்சுனசாமி இறந்தான். ஆகவே இந்தக் கதையில் எவர்மீதும் பழி சுமத்த முடியாது!" என்று விக்கிரமாதித்தன் புதிரை விடுவித்தான்.

இதனைக் கேட்ட வேதாளம், தனது கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. அதன் பின்னே ஓடிச் சென்ற விக்கிரமாதித்தன் மரத்தின் மீதேறி வேதாளத்தைப் பிடித்து தனது முதுகில் சுமந்து கொண்டு நடக்கலானான். அப்போது வேதாளம் தனது பதினேழாவது கதையைச் சொல்லத் தொடங்கியது.

### பதினேழாவது கதை

அயோத்தி என்ற நகரிலே வீரகேசவன் என்ற ஒரு வணிகன் இருந்தான். இவனுக்கு இரத்தினாவதி என்றோர் அழகிய மகள் இருந்



தாள். பல கலைகளைக் கற்று சிறந்த அழகியாகத் திகழ்ந்தாள். அந்த நகரில் அவளைவிட வேறு அழகான பெண் இல்லை என்ற அளவுக்கு இரத்தினாவதி மிக அழகிய பெண்ணாகக் காணப்பட்டாள். இதனால் பல இளைஞர்கள் அவளை மணம்முடிக்க வலம் வந்து கொண்டி ருந்தனர். ஆனால் அவளோ தான் எவரையும் மணமுடிக்கப் போவதில்லை என்று திடமாகக் கூறிவிட்டாள்.

இரத்தினாவதியின் முடிவினால் அவளுடைய பெற்றார் மிக்க கவலையும் வேதனையும் அடைந்தனர்.

அயோத்தி நகரில் திடீரென திருடர்கள் பலதரப்பட்ட திருட்டு வேலைகளையும் தொடங்கினர். ஒவ்வொரு நாளிரவும் நகரில் திருடர்கள் பயம் அதிகரித்து வந்தது. குடிமக்கள் அரசரிடம் சென்று முறையிட்ட வண்ணமிருந்தனர். இரவு வேளைகளில் தெருக்கள் தோறும் சென்று கண்காணிப்பதற்கு காவலர்களை மன்னர் அனுப்பிவைத்தார். ஆனால் அவர்களால் திருடர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை; திருட்டை ஒழிக்கவும் முடியாமல் போய் விட்டது.

இதனால் வேதனையடைந்த மன்னன் தானே இரவு நேரங்களில் மாறு வேடத்தோடு நகர்வலம் புறப்பட்டான்.

ஓரிரவு மன்னன் வீதிவலம் சென்று கொண்டிருக்கும்போது மூடிமுக்காடணிந்த ஒருவன் மன்னன் முன் அகப்பட்டான்.

அவனை அழைத்த மன்னன், அவன் யார் என்று விசாரித்தார். தன்னை எதிர் கொண்டவர் அந்த நாட்டு மன்னர்தான் என்பதை அறிந்து கொண்ட-தன்னை மூடிக் கொண்டிருந்தவன்,

"நான் காளியின் மைந்தன். ஊர் சுற்றிவரப் புறப்பட்டேன்!" என்று சொன்னான்.

அவனுடைய கூற்றை மாறுவேடத்திலிருந்த மன்னன் நம்பவில்லை. எனினும் தான் அவனை முழுமையாக நம்பிவிட்டதாக பாசாங்கு செய்த மன்னன், தன்னுடன் தனது அரண்மனைக்கு வருமாறு கேட்டுக் கொண்டான். தனது அரண்மனையில் காவல் காக்கும் காவலர்கள் மீது தனக்கு நம்பிக்கையில்லை என்றும் காளியின் மைந்தனாகிய அவனை சிலகாலம் அரண்மனைக் காவலில் ஈடுபடுத்தினால் நலமாக இருக்கும் என்று தான் கருதுவதாக மன்னன் சொன்னான்.

அவனும் சம்மதித்தான். மன்னன் தனது அரண்மனைக் காவலர்களுக்கு இந்த முக்காட்டுக்காரனை அறிமுகப்படுத்திவிட்டு, தன் அரண்மனைக்குச் சென்றுவிட்டான். தனது மெய்

## திருடன் மேல் காதல் கொண்ட கன்னி!

காப்பாளர்கள் சிலரை அழைத்து புதிதாக வந்து அரண்மனைக் காவலில் இணைந்திருக்கும் அந்த நபரைக் கவனமாகக் கண்காணிக்கும்படி கேட்டுக் கொண்டான். மெய்காப்பாளர்களும் அரண்மனை வாயிலில் மறைந்திருந்த வண்ணம் அந்தப் புதிய நபரை நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் ஒரு மூலையில் போய் நின்ற வண்ணம் தன்னிரு கைகளையும் தன் வாயைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு ஒரு வகையான ஒலியை எழுப்பினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒருவர்பின் ஒருவராகப் பதுங்கிப் பதுங்கி எட்டுப்பேர் முக்காட்டுக்காரனைவந்து சூழ்ந்து கொண்டனர். அவர்களைப் பார்த்த முக்காட்டுக்காரன் "இன்னும் சற்று நேரத்தில் இந்த அரண்மனைக் காவலர்கள் தூங்க ஆரம்பித்து விடுவார்கள். அதுவரை பொறுத்திருங்கள். அவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்றுவிட்டு, அவர்களுடைய உடைகளைத் தரித்துக் கொண்டு நாம் ஒன்பது பேரும் அரண்மனைக்குள் புகுவோம். அங்கு காணும் காவலர்கள் அனை

**இராஜகுமாரன்**

வரையும் சத்தம் எதுவும் இல்லாமல் கொன்று விடுவோம். நான் நேராக மன்னன் படுத்திருக்கும் அறைக்குள் சென்று அவரைக் கொன்று விடுவேன். அரண்மனைக்குள்ளிருக்கும் விலையுயர்ந்த பொருட்கள் அத்தனையையும் சுருட்டிக் கொண்டு நாம் ஓடி விடலாம்!" என்று சொன்னான்.

அந்த எட்டு திருடர்களும் அவர்களுடைய தலைவனான முக்காட்டுக்காரன் கூறியபடி அமைதியாகக் கலைந்து சென்று மறைவிடங்களில் புகுந்து கொண்டனர்.

முக்காட்டுக்காரனான திருடர் தலைவனுக்கும் ஏனைய திருடர்களுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலை அரசனின் மெய்காப்பாளர்கள் மிகக் கவனமாக கேட்டு அரண்மனைக்குச் சென்று மன்னரிடம் தாங்கள் கேள்வியுற்ற தகவல்கள் அனைத்தையும் சொன்னார்கள்.

இத்தனை காலமும் அயோத்தி நகரை ஆட்டிப்படைத்த திருடர் கூட்டம் அன்று பிடிபடப் போவதை நினைத்து மன்னன் மகிழ்ச்சியடைந்தான்.

மெய்காப்பாளர்களுடன் வேறு சில வீரர்களையும் திரட்டிக் கொண்டு திருடர் தலைவன் நின்ற இடத்துக்கு சென்று முதலில் அவனைக் கைது செய்தனர். ஏனைய திருடர்கள் மறைந்திருந்த இடங்களை மெய்காப்பாளர்கள் அறிந்து வைத் திருந்தமையினால் அவர்களை கண்டுபிடித்து கைது செய்வதில் சிரமம் எதுவும் இருக்க வில்லை.

அடுத்தநாள் காலையில் முக்காட்டுக்காரனான திருடனும் அவன் சகாக்களும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டு அரசன் முன் நிறுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் தூக்கில் போட்டுக் கொல்லும்படி அரசன் தீர்ப் பளித்தான். அவர்களைத் தூக்கிலிடுவதற்கு முன்னர் நகரின் வீதிகளில் அவர்களை சங்கிலியால் பிணைத்து ஊர்வலமாகக் கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்லும்படி மன்னன் கட்டளையிட்டான்.

திருடர்களை ஊர்வலமாகக் கொண்டு சென்றபோது, வணிகர் வாழும் வீதியாலும் அழைத்துச் சென்றனர். மக்களெல்லாரும் வேடிக்கை பார்த்தனர். வீரகேசவனின் மகள் இரத்தினாவதியும் அவளுடைய இல்லத்தின் வாயிலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவ்வளவு காலமும் திருமணம் செய்யப் போவதில்லை என்று பிடிவாதமாகவிருந்த இரத்தினாவதி, திருடர்தலைவனைக் கண்டதும் அவன் மீது அன்பு கொண்டு அவனையே தான் திருமணம் முடிக்கப் போவதாகத் தன் பெற்றாரிடம் கூறினாள்.

தனது மகளின் இந்த விசித்திரமானதும் விபரீதமானதுமான ஆசை வீரகேசவனையும் ஏனையோரையும் வியப்படைய வைத்தது. அவர்கள் வேதனையடைந்தார்கள். அவளுக்கு பலர் சேர்ந்து புத்திமதிகளைக் கூறினார்கள். அவளோ எவருடைய பேச்சையும் கேட்கத் தயாராயில்லை. திருடர்கள் தலைவனே தன் கணவனாக வேண்டும் இல்லாதுவிட்டால் தான் தற்கொலை செய்யப் போவதாக விடாப் பிடியாகக் கூறினாள்.

இரத்தினாவதியின் இந்தப் பிடிவாதத்தை வீரகேசவன் மன்னனிடம் சென்று முறையிட்டான். அரசனும் தான் கொடுத்த தண்டனையை மாற்றமுடியாது என்று வீரகேசவனிடம் கூறி விட்டான்.

திருடன், அரசனைக் கொலை செய்யத் திட்டமிட்டவன் என்ற குற்றங்களுக்கு உடந்தையான ஒருவனை உயிருடன் விட்டால் மக்கள் கோபம் கொள்வார்கள்- அதுதவிர நாட்டின் கொள்ளை, கொலை போன்ற குற்றச் செயல்கள் பரவவே வழிவகுக்கும் என்று மன்னன் கண்டிப்பாகக் கூறி விட்டான்.

மன்னர் கூறியவற்றை தன் மகளிடம் வந்து கூறிய வீரகேசன், திருடனை மறந்துவிடும்படி எவ்வளவோ கூறிப் பார்த்தான். ஆனால் அவள் எதையும் கேட்கத் தயாராயில்லை. திருடன் கொல்லப்பட்டால் தான் தீ வளர்த்து அதில் வீழ்ந்து தன்னுயிரைப் போக்கப் போவதாக இரத்தினாவதி கூறினாள்.

மன்னர் கட்டளை நிறைவேற்றப்பட்டது திருடன் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது ஆனால் அதற்கு முன்னர் திருடன் சிரித்தான்.

உடனடியாகவே அவன் அழுதான். சுருக்கு இறுகியதும் அவன் உயிர் பிரிந்தது. அந்த இடத்திலேயே தீயை வளர்த்த இரத்தினாவதி அதில் வீழ்ந்து தன்னுயிரைப் போக்க முயன்றாள்.

அந்தச் சமயத்தில் இறைவனும் இறைவியும் வானத்தில் தோன்றினர். இறைவன் இரத்தினாவதியைப் பார்த்து "பெண்ணே! நீ ஒரே மனதுடன் உனது காரியத்தை முடிக்கத் துணிந்தவள். அதனால் தான் உனது நேர்மையான பிடிவாதத்தை மெச்சினோம். நீ தீயில் விழ வேண்டாம். நீ மனத்தால் வரித்தவனையே நீ மணந்து கொள்ளலாம். இதோ அவன் உயிர் பெற்று எழுந்துவருகிறான்!" என்று கூறியதும் அவன் உயிருடன் எழுந்து வந்தான்.

அங்கே திரண்டிருந்த மக்களும் மன்னனும் மகிழ்ச்சியடைந்தனர். இருவருக்கும் மணமுடித்துவைத்தனர். திருடனை அரசனும் தனது படைகளின் தலைவனாக நியமித்தான்.

இவ்வாறு கதையைக் கூறிமுடித்த வேதாளம் விக்கிரமாதித்தனிடம், "மன்னவனே! திருடன் சாவதற்கு முன்னால் ஏன் சிரித்தான்? எதற்காக அழுதான்?" என்று கேட்டது.

*(மன்னன் வருவான்...)*


# கத்தரித்த கடி ஜோக்ஸ்

**ஒருவர் :** உங்க மகனிடமே வட்டி வாங்கிறீங்களே, எதுக்கு?

**மற்றவர் :** பெற்ற கடனுக்குத்தான்.

**நீதிபதி :** நீங்க இந்தக் கொலையை நேர்ல பார்த்தீங்களா?

**சாட்சி :** இல்ல, சைட்ல நிண்டுதான் பார்த்தேன்.



**கமலா :** அந்தப் பெண் கொடுத்து வைத்தவள்.

**விமலா :** அப்படியா?

**கமலா :** ம். நிறையப் பேர் அவளிடம் கடன் வாங்கி இருக்கிறார்கள்.

"அரசருக்குத் தங்கத் தேர் ஒன்று கொடுக்கப் போகிறார்கள்."

"ஏன் அவர் தேரில் தங்கணும்? அவருடைய அரண்மனைக்கு என்ன ஆச்சு."



**ஒருவர் :** என் மகன் காணாமல் போய் விட்டான் ஐயா.

**பொலிஸ்காரர் :** பையன் கறுப்பா, சிவப்பா?

**ஒருவர் :** பச்சைக் குழந்தை ஐயா.

**பாலு :** என்னப்பா, இந்த அறிக்கையைப் படிச்சாலே தலை சுத்துது.

**வேலு :** அது 'சுற்று' அறிக்கை தானே?

**அவர் :** நீங்க ஒருத்தரே வியாபாரத்தைக் கவனிச்சுக்கிறீங்களே, என்ன வியாபாரம் செய்கிறீர்கள்?

**இவர் :** தனியா வியாபாரம்.




**பாபு :** எந்த மிருகத்துக்குத் தண்ணீர்த் தாகம் எடுக்காது?

**கோபு :** தெரியாதே.


**பாபு :** நீர் யானைக்கு.

**நோயாளி :** நீங்க தலைவலிக்குக் குடுத்த மருந்து குடிச்சதில இருந்து கழுத்து வலிக்குது டொக்டர்.

**மருத்துவர் :** அப்ப வலி இறங்கியிருக்குன்னு சொல்லுங்க.

**கந்தர் :** உங்ககிட்ட பலகை இருக்கா?

**பொன்னர் :** இல்லீங்க, என்னிடம் இரண்டே இரண்டு கைதான் இருக்கு.



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)




பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




# எதிர்க்கும் திசுக்கள்



# சித்திரக்கலை

ஓராயிரம் அழகிகளின் தோற்றத்தை இங்கு காணலாம். ஆனால் இது ஒரு வேடிக்கையான தோற்றம். ஒரே ஒரு அழகிதான் ஓர் அறைக்குள் நிற்கிறாள். அந்த அறைக்குள் பொருத்தப்பட்டுள்ள பல கண்ணாடிகள் அந்த அழகியின் தோற்றத்தைப் பல மடங்காகப் பிரதிபலிக்கின்றன.

மாயாவித்தை போன்று பார்ப்போரை மயக்கும் இந்த அழகி மயோரா உஷ்ஷானா என்பவளாவாள். நியூயோர்க்கிலுள்ள நவீன சித்திரக் கலை கண்காட்சி அறையில் கண்ணாடிகளால் ஆன அந்த அறைக்குள் புகுந்து கொண்டாள். அவளுடைய தோற்றம் தான் பல்லாயிரக் கணக்கில்-ஏன் எண்ணிக் கணக்கெடுக்க முடியாத அளவில் பிரதிபலிக்கின்றன.

இன்றைய உலகில் மனித வர்க்கத்தில் வாழ்வுக்கு பெரும் சவாலாக வளர்ந்து வந்த புற்று நோய்க்கு பிரியாவிடை கொடுப்பதற்கு காலம் கனிந்து வந்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பார்ப்பதற்கு ரம்புட்டான் பழம் போல் காட்சியளிக்கும் இவை மனித உடலில் புகுந்து படுபாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் புற்றுநோய்க்கான காரணிகளை விழுங்கி ஏப்பமிடும் சக்தி வாய்ந்த கலன்களாகும். மருத்துவ ஆய்வாளர்கள் இரவு பகலாக தங்கள் ஆய்வு கூடங்களில் கண் விழித்திருந்து இக்கலன்களை கண்டுபிடித்துள்ளனர்.

மனிதர்களுக்கு வரும் நோய்களுக்கான மருந்துகளைப் புதிதாகக் கண்டுபிடித்தால், அவற்றை எலிகளுக்குக் கொடுத்தே பரிசீத்துப் பார்ப்பார்கள். அமெரிக்காவில் தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் தலைவரான டாக்டர் எச்.ஆர்.கிலௌன்னர் தான் கண்டுபிடித்த புற்று நோய் மருந்தை எலிகளுக்கு ஊட்டிப் பார்த்திருக்கிறார். ஆனால் அது உரிய பலனை அளிக்கவில்லை. இருப்பினும், தனது ஆராய்ச்சியின் இறுதி முடிவு சாதகமானதாக இருக்கப் போகிறது என்று துணிவுடன் கூறுகிறார்.

# மர (:கறி-) வுரி




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னாகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657




உலகம் போறபோக்கைப்பார்த்தால் இன்னும் சில ஆண்டுகளில் இந்தப் பூமியில் எந்தத் தாவரமும் மிஞ்சப் போவதில்லை என்றே கருதத் தோன்றுகிறது. கடலிலும் நீர் நிலைகளிலும் கடல் வாழ் உயிரினங்கள் முக்கியமாக மீன் வகைகள் ஏராளமாக விளையப்போகின்றன. ஆடுகள், மாடுகள், கோழிகள், பன்றிகள் போன்ற மிருகங்கள் எங்கும் பல்கிப் பெருகி ஓடித்திரியப் போகின்றன. ஆனால் இவற்றுக்கெல்லாம் உணவு கிடைப்பது தான் அரிதாகப் போகிறது.

இவ்வாறு நாம் கருதுவதற்குக் காரணம் என்னவென்றால் மாமிச உணவுகளை உண்டு வாழ்ந்த மனிதன் மெல்ல மெல்ல தாவர பட்சினியாக வேகமாக மாறி வருவது தான் காரணம்.

இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் தான் மாமிசத்தை நீக்கி காய்கறி, கீரை, கிழங்கு ஆகியவற்றை மட்டும் உணவாகக் கொண்டும் மனிதர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இன்று மாமிச உணவுகளை ஒதுக்கி விட்டு மேலை நாட்டவர்களும் மரக்கறி வகைகளையே தமது உணவாகக் உட்கொண்டு வருகின்றனர். இதற்காகவே மரக்கறி உண்ணுவோர் சங்கங்கள், அமைப்புக்கள் போன்றவற்றை உருவாக்கி மேலைத்தேய மக்களிடம் வெகுவாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கி விட்டனர். மாமிச உணவை விட மரக்கறி உணவே சாலச் சிறந்தது என்ற கோட்பாடு உலகெங்கும் பரவி வருகிறது. என்பதனால் உயிரினங்கள் தப்பிப் பிழைக்கப் போகின்றன. ஆனால் தாவர வர்க்கங்கள் சீக்கிரமே அழிந்து போகப் போகின்றன என்று நாம் கூறிய கூற்றினை இப்பொழுதாவது ஒத்துக் கொள்கிறீர்களா?

டென்னிஸ் போட்டிகளின் 'விம்பிள்டன்' பட்டத்தை வெல்வது ஒவ்வொரு டென்னிஸ் வீர, வீராங்கனைகளதும் இலட்சியங்களில் ஒன்று. டென்னிஸ் போட்டிகளில் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதலிடம் வகிப்பதும் விம்பிள்டன் போட்டிதான்.

இம்முறை பெண்கள்பிரிவில் 'விம்பிள்டன்' சாம்பியனானவர் கறுப்பு மங்கை வீனஸ் வில்லியம்ஸ். 24 வயதுடைய வீனஸ் அரை இறுதிப் போட்டியில் எதிர் கொண்டது அவது தங்கை செரீனா வில்லியம்ஸையே.

தங்கையை வென்று இறுதிப் போட்டிக்குச் சென்று சாம்பியன் பட்டத்தை வீனஸ் பெற்றாலும், பெண்கள் இரட்டையர் போட்டிகளில் வீனஸ்-செரீனாவுடன் இணைந்து 'விம்பிள்டன்' பட்டத்தை வென்றனர். 'விம்பிள்டன்' போட்டிகளில் இம்முறை வில்லியம்ஸ் சகோதரிகள் அசத்தல் வெற்றி பெற்றுள்ளனர்.



# அசத்தல் சகோதரிகள்


21வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி. இன்பபிரியா இராஜேஸ்வரன்

01.09.2000



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த இராஜேஸ்வரன் மகேஸ்வரியின் புதல்வி பிரியா (வாணி) தனது 21வது பிறந்த நாளை 01.09.2000 அன்று lebanon ல் Hotel Monte Verde ல் வெகுவிமர்சையாக கொண்டாடினார். இவரை அன்பு அம்மா நகைக் கடை (lebanon) இலங்கையில் உள்ள அக்கா மாலா குடும்பத்தினர் London ல் உள்ள அக்கா சுதா மற்றும் இலங்கை யாழ் அம்மம்மா, அப்பப்பா, மாமனார், மாமிமார், பெரியம்மாமார், அக்கா, அண்ணாமார், மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் பிரியாவை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்
தகவல் : அம்மா ஆர். மகேஸ்வரி

P.O.Box No:801011,
Bouri Hammoud,
Beirut lebanon.
T.P: 961 0358037